இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 67 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 29 – திங்கள்கிழமை 16 அக்டோபர் 2023 – கோவை ★★ 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 67: Thiruvalluvar Year - 2054 - Purattasi 29 - Monday 16 October 2023 - Kovai ★★ 16 Pages ₹5.00

## மகளிர் முன்னேற்றத்தில்

# இந்தியாவிற்கே தமிழ்நாடு வழிகாட்டி!

## மகளிர் உரிமை மாநாட்டில் காங்கிரஸ் மூத்த தலைவர் திருமதி. சோனியா காந்தி புகழாரம்!



**சென்னை, அக்.16-**

**சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் நேற்று முன்தினம் மாலை மகளிர் உரிமை மாநாடு கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இம்மாநாட்டில் அகில இந்திய காங்கிரஸ் கட்சி மூத்த தலைவர் திருமதி. சோனியாந்தி அவர்கள் சிறப்புரையாற்றுகையில் மகளிர் முன்னேற்றத்தில் இந்தியாவிற்கே வழிகாட்டியாக தமிழ்நாடு உள்ளது என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் மூத்தத் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களே, அன்பிற்குரிய கனிமொழி அவர்களே, மேடையில் அமர்ந்திருக்கக்கூடிய மகளிர் தலைவர்களே,

இந்த அருமையான நாளில் ஒரு மாபெரும் தலைவர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படுகின்ற, இந்த மகளிர் உரிமை மாநாட்டிற்கு என்னை அழைத்த முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தன்னுடைய வாழ்க்கை முழுமையும் ஏழை எளிய மக்களுக்காக உழைத்தவரும், இந்தியத் தாயினுடைய தவப்புதல்வர்களில் ஒருவரும், நம்மால் அன்போடு கலைஞர் என்று அழைக்கப்படக் கூடியவருமான அருமைக்குரியத் தலைவர் கலைஞர் அவர்கள், ஒரு பன்முகத்தன்மை கொண்ட ஒரு மாபெரும் தலைவர். ஒரு எழுத்தாளராக, ஒரு பத்திரிகையாளராக, ஒரு முதலமைச்சராக, ஒரு நிர்வாகியாக அவர் ஆற்றியப்பணிகள் மகத்தானப் பணிகள்.

மாநிலம், மொழி, சாதி, மத நம்பிக்கை இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டு, எல்லோரையும் சமத்துவமாக பார்க்கக்கூடிய ஒரு அருமையான தத்துவத்திலே அவர் நம்பிக்கை கொண்டிருந்தார்.

தன்னுடைய வாழ்நாளின்போது அதிகமாக பேசப்படாத பாலின சமத்துவத்தை அவர் சிந்தித்து அதற்காக போராடுகின்ற ஒரு போராளியாக தன்னை அடையாளப்படுத்திக்கொண்டார். இன்று அது ஒரு தேசிய இயக்கமாக கொண்டாடப் படுகின்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

நம்முடைய பெண்கள் இந்தியாவிலேயே மகத்தான சாதனை செய்திருக்கிறார்கள். மரபுவழி சமூகம், ஆணாதிக்க சமூகம், கலாச்சாரம் என்கின்ற தடைகளையெல்லாம் மீறி அவர்கள் மிக அருமையான சாதனைகளை செய்து முடித்து இருக்கிறார்கள்.

**பெண்கள் ஆற்றுகின்ற பணி மகத்தானது!**

இந்த நீண்ட நெடிய போராட்டத்தில் ஏற்றங்களும் இருந்திருக்கின்றன. இறக்கங்களும் இருந்திருக்கின்றன.

ஆனால் இன்று இந்தியப் பெண்கள் பல்வேறு துறைகளிலே மிளிர்கிறார்கள். சிலவற்றைச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், விஞ்ஞானத்திலே, அறிவிலே, ஆற்றலிலே, கலாச்சாரத்திலே, விளையாட்டிலே. இவை எல்லாவற்றிற்கும் மேலாக, நம்முடைய குடும்பத்தினுடைய மையப் பொருளாக, மக்களுடைய தலைவர்களாக; அவர்கள் ஆற்றுகின்ற பணி மகத்தானது. இருந்தாலும் கூட, இந்தப் போராட்டம் இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டும். இன்னும் பல்வேறு தடைகளைத் தாண்ட வேண்டும். இருந்தாலும், நம்முடைய ஏழை எளிய சகோதரிகள் இன்னும் ஏராளமான தடைகளைத் தாண்டித்தான், இந்த சமத்துவத்தை பெறுவதற்கான சூழ்நிலை உருவாகி இருக்கின்றது.

மகாத்மா காந்தி அவர்களுடைய தலைமையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சாத்வீகமான வன்முறையற்ற சுதந்திரப் போராட்டம் மகளிர் சமத்துவத்தை முன்னிலைப்படுத்தியது. 1928-ஈல் அரசியல் சாசன சட்ட வரைவு மோதிலால் நேரு அவர்கள் தலைமையிலான குழு தயார் செய்து, அந்த அறிக்கையை சமர்ப்பித்தது.

அதற்குப் பிறகு கராச்சியில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் இந்த தேசத்தின் முதல் பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்கள், கராச்சி தீர்மானம் என்கின்ற பெயரில் வடிவமைக்கப்பட்ட தீர்மானங்கள், இந்த இரண்டு ஆவணங்களும் பெண்களுடைய உரிமைகளை கொண்டாடுவதிலும், அவர்களுக்கு வாக்குரிமை அளிப்பதிலே சமத்துவம் வழங்கப்பட வேண்டும் என்பதிலும், பொருளாதாரத்திலும், அரசியலிலும், செயல்பாடுகளிலே அவர்களுக்கு சரியான பங்கு தரப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தியது.

இந்த இரண்டு ஆவணங்களும் தந்த அடிப்படையில் தான் நம்முடைய பெண்கள், ஒரு மிகப் பெரிய சமூக மாற்றத்திற்கான முன்னெடுப்பை நோக்கி பயணிக்க ஆரம்பித்தார்கள்.

இதைத்தான் எல்லோருக்குமான வாக்குரிமை, பாலின சமத்துவம், சோசலிச அறம் சார்ந்த சமூகம் இவைகளையெல்லாம், அந்த இரண்டு ஆவணங்களில் சொல்லப்பட்ட அந்த விஷயங்களில்தான், பாபா சாகிப் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இந்திய அரசியல் சாசன சட்டத்தினை வரையறுக்கின்றபோது இந்த தத்துவங்களை உள்வாங்கி அதனை மேலிடத்துக்கு செல்லக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது.

ஒரு ஆண்மகனை நீ படிக்க வைத்தால் ஒரு தனி நபரை மட்டும் படிக்க வைக்கிறாய். ஆனால் ஒரு பெண்ணுக்கு கல்வி கொடுத்தால், ஒரு குடும்பத்திற்கே கல்வி கற்றுத் தரப்படுகிறது. மகளிரை அதிகாரப்படுத்தினால் இந்தியாவை அதிகாரப்படுத்துகிறோம் என்கின்ற ஜவஹர்லால் நேரு அவர்களுடைய வார்த்தைகளை யார் மறக்க முடியும்?

**திருமதி இந்திரா காந்தி தலைமைத்துவம்**

அன்னை இந்திரா காந்தி அவர்கள் காண்பித்த தலைமைத்துவம், அவர்கள் காண்பித்த ஆற்றல், அவர்கள் காட்டிய வழிகாட்டுதல், ஒரு பெண் எப்படி தலைமை ஏற்று செயல்பட முடியும் என்பதற்கான மிகப்பெரிய எடுத்துக்காட்டு. ஏழை, எளிய மக்களுக்கான நல்வாழ்வை அளிப்பதற்கும், வறுமையை ஒழிக்க வேண்டும் என்கின்ற அர்ப்பணிப்போடும், அவர்கள் ஆற்றிய பணியை யாரும் மறக்க முடியாது.

ராஜீவ்காந்தி அவர்கள் வரலாற்று புகழ்மிக்க 33 சதவிகித இட ஒதுக்கீட்டை பெண்களுக்காக 'பஞ்சாயத்து' ராஜ் சட்டத்திலும் உள்ளூர் ஆட்சி அமைப்புகளிலும் கொண்டு வந்தார். அந்தச் சட்டத்திருத்தமானது சமூகத்தின் அடித்தளத்தில் ஒரு மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி, பெண்களுக்கு தலைமைப் பொறுப்புகளை அளித்து ஒரு சமூகப் புரட்சிக்கு வித்திடுகின்ற மிகப்பெரிய திட்டமாக அது அமைந்தது.

ராஜீவ் காந்தி அவர்கள் ஏற்படுத்திக்கொடுத்த 33 சதவிகித இட ஒதுக்கீடு தான் இன்றைக்கு நாடாளுமன்றத்தில் மகளிர்க்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும் என்கின்ற சட்டத்தினுடைய முன்னெடுப்பாக அமைந்தது.

### பன்முகத்தன்மை கொண்ட மாபெரும் தலைவர் கலைஞர்!



**தன்னுடைய வாழ்க்கை முழுமையும் ஏழை எளிய மக்களுக்காக உழைத்தவரும், இந்தியத் தாயினுடைய தவப்புதல்வர்களில் ஒருவரும், நம்மால் அன்போடு கலைஞர் என்று அழைக்கப்படக்கூடியவருமான அருமைக்குரியத் தலைவர் கலைஞர் அவர்கள், ஒரு பன்முகத்தன்மை கொண்ட ஒரு மாபெரும் தலைவர். ஒரு எழுத்தாளராக, ஒரு பத்திரிகையாளராக, ஒரு முதலமைச்சராக, ஒரு நிர்வாகியாக அவர் ஆற்றியப்பணிகள் மகத்தானப் பணிகள்.**

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்

## மகளிர் இட ஒதுக்கீடு மசோதா சட்டம் என்று பெண்களை ஏமாற்றுகிறார் பிரதமர் மோடி ! நாம் அனைவரும் ஒற்றுமையாக இருந்து

# 2024 ஆம் ஆண்டு தேர்தலில் பா.ஜ.க.வை வீழ்த்துவோம்!

## மகளிர் உரிமை மாநாட்டில் - கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சி உரை!

**சென்னை, அக்.16-**

**பெண்களை ஏமாற்ற மகளிர் இடஒதுக்கீடு மசோதா சட்டம் என ஏமாற்றுகிறார் பிரதமர் மோடி என்றும் நாம் அனைவரும் ஒற்றுமையாக இருந்து 2024 ஆம் ஆண்டு தேர்தலில் ஒன்றிய பா.ஜ.க. அரசை வீழ்த்துவோம் என்றும் மகளிர் உரிமை மாநாட்டில் தலைமையேற்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நேற்று முன்தினம் (14.10.2023) கழக மகளிரணி நடத்திய 'மகளிர் உரிமை மாநாட்டு'க்குத் தலைமை தாங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-

பெண்ணினத்தின் எழுச்சியின் அடையாளமாக, இந்த மாநாட்டை ஒரு 'மாநில மாநாடு' போல் ஏற்பாடு செய்து, இதை எழுச்சியோடு நடத்திக் கொண்டிருக்கிறார் நம்முடைய தங்கை கனிமொழி அவர்கள். அவர் கர்ஜனை மொழியாக கனல் மொழியாக இப்போது நாடாளுமன்றத்தில் முழங்கி வருவதைப் பார்க்கும்போது, கழகத் தலைவராக மட்டுமல்ல, அண்ணனாகவும் நான் மிகுந்த பெருமை அடைந்து வருகிறேன். இந்த மகளிர் உரிமை மாநாட்டைத் தடையின்றி ஓடும் மாரத்தான் ஓட்டம் போல் நம்முடைய அமைச்சர் மா.சு. அவர்கள் துணை நின்று ஏற்பாடு செய்திருக்கிறார். அவர் மட்டுமல்ல, நம்முடைய அமைச்சர் செயல்வீரர் தா.மோ.அன்பரசன் அவர்களும் துணை நின்று தன்னுடைய கடமையை நிறைவேற்றித் தந்திருக்கிறார். அதற்காக முதலில் நான் அவர்களை எல்லாம் வாழ்த்துகிறேன்.

மகளிரணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் ராணி உள்ளிட்ட மகளிரணி நிர்வாகிகள் அனைவருக்கும் என் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை இருக்கும் பெரும்பாலான மாநிலத்தைச் சேர்ந்த பெண் தலைவர்களை அழைத்து வந்து, ஏற்றத்துடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மாநாடு, தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடாக மட்டுமல்ல இந்தியப் பெண்களின் மாநாடாக அமைந்துள்ளது என்பதை நான் பெருமையோடு பதிவு செய்து கொள்ள விரும்புகிறேன்.

இதுவரை 'சென்னை சங்கமம்' நடத்திக் காட்டிய தங்கை கனிமொழி அவர்கள், இப்போது இந்தியச் சங்கமத்தை நடத்திக் காட்டி இருக்கிறார். இதுதான் வித்தியாசம். இவை அனைத்துக்கும் மகுடம் வைப்பது போல அன்னை சோனியா காந்தி அவர்கள் வருகை தந்துள்ளார்கள்.

'நேருவின் மகளே வருக! நிலையான ஆட்சியைத் தருக!' என்று 1980 ஆம் ஆண்டு இந்திரா அம்மையாரைச் சுட்டிக்காட்டிச் சொன்ன தலைவர் கலைஞர் அவர்கள், 2004ஆம் ஆண்டில், 'இந்திராவின் மருமகளே வருக! இந்தியாவின் திருமகளே வெல்க!' என்று வரவேற்றுச் சொன்னார்.

தலைவர் கலைஞர் சொன்னதைப் போலவே நாம் நாற்பதுக்கு நாற்பது வெல்ல, அகில இந்திய அளவில் காங்கிரஸ் கூட்டணி மகத்தான வெற்றியைப் பெற்றது. அப்போது தனக்காக காத்திருந்த பிரதமர் பதவியை மறுத்து இந்திய அரசியல் வானில் ஒரு கம்பீரப் பெண்மணி என நின்றவர் அன்னை சோனியா காந்தி அவர்கள். அப்போது அன்னை சோனியா காந்தி அவர்கள்தான் ஆட்சிக்குத் தலைமை வகித்து பிரதமராக வேண்டும் என்று முன்மொழிந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். அது வரலாறு.

**இந்திய அரசியல் வானில் கம்பீரப் பெண்மணி அன்னை சோனியா!**

When Thalaivar Kalaignar left us to his resting place, Madam Sonia Gandhi sent a letter to me. (தலைவர் கலைஞர் அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து அவர் ஓய்விடத்துக்குச் சென்றபோது, அன்னை சோனியா காந்தி அவர்கள் எனக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார்.)

She wrote, "For me, Kalaignar's loss is very personal. He always showed me great kindness and consideration, which I can never forget. He was like a father figure to me." (அதில் அவர், "கலைஞர் அவர்களின் மறைவு எனக்குத் தனிப்பட்ட முறையிலும் இழப்பாகும். என் மீது அவர் எப்போதுமே மிகுந்த கனிவும் அக்கறையும் கொண்டிருந்ததை நான் எப்போதுமே மறக்க இயலாது. அவர் எனக்கு ஒரு தந்தையைப் போன்றவர்" என்று குறிப்பிட்டிருந்தார்.)

அத்தகைய ஆழமான குடும்பப் பாச நட்பைக் கொண்டவர் அன்னை சோனியா காந்தி அவர்கள். அவரும் இளம் அரசியல் ஆளுமையாக மிளிரும் அருமைச் சகோதரி பிரியங்கா காந்தி அவர்களும் இங்கு வந்திருப்பது நமக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. தன்னிகரில்லா மெஹபூபா முப்தி அவர்கள் ஒரு மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர். சுப்ரியா சுலே எழுந்தாலே நாடாளுமன்றத்தில் பா.ஜ.க.வினர் அஞ்சி நடுங்குவார்கள்.

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.10.2023) சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. திடலில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கழக மகளிர் அணி ஒருங்கிணைப்பில் நடைபெற்ற மகளிர் உரிமை மாநாட்டில், தலைமையுரை ஆற்றினார். இவ்விழாவில், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் திருமதி. சோனியா காந்தி, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், கழக துணை பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி, ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதலமைச்சர் திருமதி மெஹபூபா முஃப்தி, அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி, தேசியவாத காங்கிரஸ் கட்சியின் செயல் தலைவர் திருமதி சுப்ரியா சுலே எம்.பி., பீகார் மாநில அமைச்சர் திருமதி லெஷி சிங், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட் பீரோ உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான உ திருமதி சுபாஷினி அலி, சமாஜ்வாதி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி டிம்பிள் யாதவ், இந்திய மாதர் தேசிய சம்மேளத்தின் பொதுச் செயலாளர் திருமதி ஆனி ராஜா, ஆம் ஆத்மி கட்சியின் தேசிய நிர்வாக குழு உறுப்பினரும், தில்லி சட்டப்பேரவை துணைத் தலைவருமான திருமதி ராக்கி பிட்லன், திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் தேசிய செய்தி தொடர்பாளர் திருமதி சுஷ்மிதா தேவ், சமாஜ்வாதி கட்சியைச் சேர்ந்த திருமதி சுஹி சிங், நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள் முன்னாள் உறுப்பினர்கள், கழக மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், கழக மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ராணி, கழக மகளிர் அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மகளிர் உரிமை மாநாட்டின் எழிலார்ந்த காட்சிகள்!






தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (14.10.2023) சென்னை. நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. திடலில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கழக மகளிர் அணி ஒருங்கிணைப்பில் நடைபெற்ற மகளிர் உரிமை மாநாட்டில், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் திருமதி, சோனியா காந்தி அவர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலையினை நினைவுப் பரிசாக வழங்கினார். இதேபோன்று மாநாட்டில் பங்கேற்ற முன்னணி மகளிர் தலைவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலையினை நினைவுப்பரிசாக வழங்கினார்.





மகளிர் உரிமை மாநாட்டில் திரண்ட மகளிர் – கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் – திருமதி சோனியா காந்தி – கனிமொழி கருணாநிதி எம்.பி. உள்ளிட்டோர் பங்கேற்றக் காட்சி.



மகளிர் உரிமை மாநாட்டில் அரங்கமே கொள்ளாத அளவிற்கு பல்லாயிரக்கணக்கில் திரண்ட மகளிரை காணீர்.

## சென்னையில் மகளிர் உரிமை மாநாடு:

# பெண்களின் சக்திமிக்க குரல் ஓங்கி ஒலிக்கும்!

## மாநாட்டையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னோட்டமான அறிவிப்பு!

**சென்னை, அக்.16-**

**"சென்னையில் நடைபெறும் மகளிர் உரிமை மாநாட்டில் பெண்களின் சக்திமிக்க குரல் ஓங்கி ஒலிக்கும்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநாட்டையொட்டி நேற்று முன்னோட்டமான அறிவிப்பினை தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.**

இது பற்றிய விவரம் வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான், அரசு வேலை வாய்ப்பிலும் உள்ளாட்சித் தேர்தலிலும் பெண்களுக்கு இட ஒதுக்கீடு, ஆண்களுக்கு நிகராக பெண்களுக்குச் சொத்துரிமை உள்ளிட்டவற்றை தி.மு.க. ஆட்சியில் முதல்வராக இருந்து சட்ட மாக்கினார். தற்போது தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் 'திராவிட மாடல்' ஆட்சியின் வாயிலாக, "கலைஞர் மகளிர் உரிமை திட்டம்", "பெண்களுக்கு கட்டணமில்லா விடியல் பயணத் திட்டம்", "புதுமைப் பெண் திட்டம்", "மகளிர் சுய உதவிக் குழுக்கள்", "மகளிரை அர்ச்சகராக்கியது" என பெண்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு புரட்சிகரமான திட்டங்களை அடுத்தடுத்துச் செயல்படுத்தி வருகிறார்.

எனவே, மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை உடனே அமல்படுத்துவது உள்ளிட்ட பெண்ணுரிமை தொடர்பான கருத்துரையாடலை முன்னெடுப்பதை காலத்தின் தேவையாக கருதி தி.மு.க. மகளிர் அணி சார்பில் மகளிர் உரிமை மாநாட்டுக்கு ஏற்பாடு செய்திருந்தது. சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் இந்த பிரமாண்ட மாநாடு நேற்று மாலை நடைபெற்றது.

மாநாட்டிற்கு தி.மு.க. தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமை வகித்தார். தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. முன்னிலை வகித்தார். தி.மு.க. மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன் வரவேற்றுப் பேசினார்.

மாநாட்டில் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் சோனியா காந்தி, காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி, ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதல்வர் மெகபூபா முப்தி, தேசியவாத காங்கிரஸ் கட்சி செயல் தலைவர் சுப்ரியா சுலே, ஐக்கிய ஜனதா தளம் தேசிய நிர்வாக குழு உறுப்பினரும், அமைச்சருமான லெஷி சிங், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட் பீரோ உறுப்பினர் சுபாஷினி அலி,

இந்திய கம்யூ னிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினரும், இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் பொதுச் செயலாளருமான ஆனி ராஜா, ஆம் ஆத்மி கட்சி தேசிய நிர்வாக குழு உறுப்பினரும், டெல்லி சட்டப் பேரவை துணை தலைவருமான ராக்கி பிட்லன், திரிணாமுல் காங்கிரஸ் தேசிய செய்தி தொடர்பாளர் சுஷ்மிதா தேவ் உள்ளிட்ட இந்தியா கூட்டணியின் பல்வேறு முக்கிய அகில இந்திய பெண் தலைவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். தி.மு.க. மகளிர் தொண்டர் அணி செயலாளர் நாமக்கல் ராணி நன்றி கூறினார்.

இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் சோனியா காந்தி, பிரியங்கா காந்தி ஆகியோர் நேற்று முன்தினம் இரவு விமானம் மூலம் சென்னை வந்தனர். அவர்களை சென்னை விமான நிலையத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. ஆகியோர் வரவேற்றனர்.

### 5 ஆண்டுகளுக்குப் பிறகு சோனியாகாந்தி சென்னை வருகை!

பின்னர் அங்கிருந்து அவர்கள் இரவு 10.50 மணியளவில் ஐ.டி.சி. கிராண்ட் சோழாவிற்கு சென்றனர். இரவு 2 பேரும் அங்கேயே தங்கினர். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு சோனியாகாந்தி அவர்கள் சென்னை வருகை தந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று காலை தமது முகநூலில் பதிவிட்டிருப்பதாவது:-

**மகளிர் மாநாட்டிற்கு வருகை தந்துள்ள திருமதி சோனியா காந்தி மற்றும் பிரியங்கா காந்தி ஆகியோரை வரவேற்றதில் மகிழ்ச்சியடைகிறேன்.**

**சென்னையில் நடைபெறும் பெண்கள் உரிமைகள் மாநாட்டில், நாடு முழு வதும் உள்ள மதிப்பிற்குரிய பெண் தலைவர்களின் சங்கமமும் நடைபெறவுள்ளது. இந்தியாவின் முன்னணி பெண்களின் சக்திவாய்ந்த குரல்கள் எழும்ப மாநாடு காத்திருக்கிறது!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

## பா.ஜ.க. ஆட்சியில் குடியரசுத் தலைவர் முதல் சாதாரணப் பெண்கள் வரை யாருக்கும் நியாயம் இல்லை!

# பெண்களை முன்னேற்றக் கூடியது திராவிட மாடல் ஆட்சி!

## மகளிர் உரிமை மாநாட்டில் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

**சென்னை, அக்.16-**

**ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியிலே குடியரசுத் தலைவர் முதல் சாதாரண பெண்கள் வரை யாருக்கும் நியாயமில்லை என்றும் தமிழ்நாட்டில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சிதான் பெண்களை முன்னேற்றக் கூடியது என்றும் சென்னை ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெற்ற மகளிர் உரிமை மாநாட்டில் உரையாற்றுகையில் கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் குறிப்பிட்டார்.**

சென்னையில் தி.மு.க. மகளிரணி சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட மகளிர் உரிமை மாநாட்டில் திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. முன்னிலை வகித்து சிறப்புரை யாற்றினார்.

அவரது உரை வருமாறு :

“சகோதரர்களே சகோதரிகளே என்று அழைத்தால் அதில் கூட பாகுபாடு வந்துவிடும் என்று, உடன்பிறப்பே என்ற ஒற்றை சொல்லால்... அந்த மந்திரச் சொல்லால் நம்மையெல்லாம் கட்டிப் போட்டு வைத்திருந்த தலைவர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டிலே... தேசிய அளவிலான மகளிர் உரிமை மாநாட்டை நடத்தும் வாய்ப்பினை எனக்கும் மகளிர் அணிக்கும் அளித்து அது வெற்றி பெறுவதற்கு முழு முதல் காரணமாக இருக்கக்கூடிய தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்களே...

கலைஞர் அவர்கள் தியாகத் திருவிளக்கு என்று அன்போடு அழைத்த அன்னையார் சோனியா காந்தி அவர்களே...

இந்த நிகழ்ச்சி வெற்றி பெற வேண்டும் என்று வாழ்த்துகளோடு அமர்ந்திருக்கும் பொதுச் செயலாளர், பொருளாளர் அவர்களே...

காஷ்மீரின் முன்னாள் முதலமைச்சர் மகபூபா அவர்களே... தமிழ்நாட்டிலே முதல் முதலாக உரையாற்ற வந்திருக்கக் கூடிய அடித்தட்டு மக்களின் தோழி பிரியங்கா காந்தி அவர்களே...

நாடாளுமன்றத்தில் எல்லோருடைய எல்லோருடைய மரியாதையையும் அன்பையும் பெற்றிருக்கக் கூடிய போராளி சுப்ரியா சுலே அவர்களே... சமூக மாற்றம், பொருளாதார நீதி இவற்றுக்காக தன் வாழ்நாளெல்லாம் சுற்றி சுழன்று பணியாற்றக்கூடிய தோழியர் சுபாஷினி அலி அவர்களே, தோழியர் ஆனி ராஜா அவர்களே... சமூக நீதிக்காக தன் வாழ்நாளெல்லாம் பாடுபட்ட முலாயம் சிங் அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்த டிம்பிள் யாதவ் அவர்களே... சாதிவாரி கணக்கெடுப்பில் புரட்சி செய்திருக்கக்கூடிய முதலமைச்சர் நிதிஷ் குமார் அவர்களின் கட்சியின் அமைச்சர் லேஷி சிங் அவர்களே டெல்லி சட்டமன்றத்தின் துணை சபாநாயகர் ராகி பிட்லன் அவர்களே....திருணமூல் காங்கிரஸிலிருந்து வந்து ஆணித்தரமாக அழுத்தமாக உரையாற்றிய அமர்ந் திருக்கக்கூடிய சுஷ்மிதா தேவ் அவர்களே... மகளிர் அணி மாநிலச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அவர்களே, மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி அவர்களே... இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு இருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்களே மாவட்ட கழகத்தின் செயலாளர்களே... இந்த கூட்டம் இவ்வளவு வெற்றிகரமாக நடைபெறு வதற்கு அத்தனை உதவிகளையும் செய்து இந்த கூட்ட ஏற்பாடுகளை எல்லாம் முன் நின்று நடத்தி தந்திருக்க கூடிய அமைச்சர் மா. சுப்பிரமணி யன் அவர்களே... அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களே இந்த நிகழ்ச்சியிலே லேட்டா வந்தாலும் லேட்டஸ்ட்டா வந்து கலந்து கொண்டிருக்க கூடிய இளைஞர் அணியின் செயலாளர் உதயநிதி அவர்களே... அவர் உள்ளிட்ட அணி செயலாளர்களே... நாடாளுமன்ற உறுப்பினர்களே.. சட்டமன்ற உறுப்பினர்களே... திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணி செயல் வீரர்களே உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியை வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.



ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றினால் ஆயிரம் விளக்குகளை ஏற்ற முடியும். அறிவொளி பெற்ற ஒரு பெண்ணாலும் அத்தகைய ஒளியை உருவாக்க முடியும் என்று சொன்னவர் தலைவர் கலைஞர் அவர்கள். அப்படி அறிவொளி பெற்ற தீபங்களாக இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டிருக்க கூடிய எங்கள் மகளிர் அணியின் சகோதரிகள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்தை, வரவேற்பை, நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மகளிர் மாநாடுகள் என்பது மகளிர் உரிமை மாநாடுகள் என்பது நமது திராவிட இயக்கத்திலே நூறு ஆண்டு வரலாற்றை கொண்டிருக்கக் கூடிய ஒன்று.

தந்தை பெரியார் நடத்திய மாநாட்டில் கண்ட கனவுகள்தான் தலைவர் கலைஞரின் ஆட்சி காலத்திலே பெண்களின் கல்வியாக, முன்னேற்றமாக வேலை வாய்ப்புகளாக பெண்களுடைய வாழ்க்கையே மாற்றி காட்டிக் கொண்டு இருக்கக்கூடிய சாதனைகளாக மிளிர்ந்தன.

**100 ஆண்டுகள் வரலாற்றை கொண்டுள்ள மாநாடு!**

அதுபோல இந்தச் சமூகத்தில் பேசக் கூடியவர்கள் எல்லோரும் ஒன்றை குறிப்பிடுவார்கள். ஒரு பெண்ணுக்கு ஆண் தான் பாதுகாப்பு என்று. பெண்களுக்கு ஆண் இருந்தால் தான் பாதுகாப்பு என்று சொல்லுவார்கள். ஆனால், பெண்களுக்கு காவல்துறையிலே வாய்ப்பளித்து ஆணுக்கும் பெண்தான் பாதுகாப்பு என்று காட்டியவர் தலைவர் கலைஞர்.

நம்முடைய தலைவர் கலைஞர் ஆட்சியின் நீட்சியாக தளபதி அவர்களின் அரசு தொடர்ந்து பெண்களுக்கான வாய்ப்புகளை பெண்களை பேணி காக்கக்கூடிய ஒரு ஆட்சியாக இன்று மிளிர்ந்து கொண்டிருக்கிறது.

ஆட்சி பொறுப்பு ஏற்றுக் கொண்ட முதல் நாளே.. பெண்களுக்கான இலவச பயண பேருந்து பயணத்தை நடைமுறைப்படுத்திக் காட்டியவர் நமது தளபதி. அதே போல படிக்க வேண்டும் என்ற ஒரு கனவோடு இருக்கக்கூடிய பெண்ணின் கனவை எதுவுமே சிதைத்து விடக்கூடாது என்பதற்காக நீ எவ்வளவு படித்தாலும் உன்னோடு ஒரு அண்ணனாக நான் இருக்கிறேன் என்று மாதம் ஆயிரம் ரூபாய் கொடுத்தவர் அண்ணன் தளபதி.

**உரிமைத் தொகை மாதம் ரூ.1000 வழங்குபவர் முதல்வர்!**

வீட்டிலே இருக்கக்கூடிய சகோதரிகளை பற்றி யாராவது கேட்டால்... வீட்ல என்ன பண்றாங்கன்னு கேட்டால் சொல்லுவார்கள், சும்மா இருக்காங்க என்று. யாராவது சும்மா இருக்கீங்களா? இல்லை... எல்லாரும் எழுந்துக்கறதுக்கு முன்னாடி எழுந்து சகோதரிகள் செய்யும் வேலையெல்லாம் சொன்னால் அதுவே பத்து நிமிடம் ஆகிவிடும். சமைத்து, துணி துவைத்து என ஓடிக்கொண்டே இருந்து எல்லோரும் தூங்கிய பிறகு உறங்கச் செல்லக்கூடிய உழைப்பின் சிகரங்களாக இருக்கக்கூடிய உங்களுக்காக... உங்கள் உழைப்பை நான் மதிக்கிறேன், நான் ஏற்றுக்கொள்கிறேன், கொண்டாடுகிறேன் என்று சொல்லக்கூடிய வகையிலே கலைஞர் உரிமைத்தொகை... உதவித் தொகை இல்லை என்று சொல்லி உரிமைத்தொகை என்று சொல்லி மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கியவர் நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி. இதுதான் திராவிட மாடல் ஆட்சி.

தமிழ்நாட்டிலே 11 பெண் மேயர்கள் இருக்கிறார்கள், இங்கே வந்திருக்கிறார்கள். 11 பெண் மேயர்கள் இருக்கக்கூடிய மாநிலம் தமிழ்நாடு. இப்படிப்பட்ட வாய்ப்புகளை எல்லாம் உருவாக்கி தந்து கொண்டிருக்கக் கூடியவர்கள் நாம்.

ஆனால் ஒன்றிய அரசாங்கத்தில் நம்முடைய பிரதமர் இருக்கிறார். அவருடைய உரையாடல்கள் எல்லாம் பெண் சக்தியை, நாரி சக்தியை நாங்கள் கொண்டாடுகிறோம் என்று பொய் புரட்டுகளை சொல்லிக் கொண்டிருப்பார்கள். இங்கே பேசியவர்கள் எல்லாம் குறிப்பிட்ட சொன்னது போல மகளிர் இட ஒதுக்கீட்டு மசோதாவை கொண்டு வந்தார்கள்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியிலே 2010 லே அம்மையார் சோனியா காந்தி வலியுறுத்தலிலே நம்முடைய ஆதரவோடு மகளிர் மசோதா ராஜ்யசபாவிலே நிறைவேற்றப்பட்டது. அதற்கு எந்த கண்டிஷனும் இல்லை. இதெல்லாம் இருந்தால்தான் அதை நடைமுறைக்கு கொண்டு வருவோம் என்ற நிலை இல்லை.

**25 ஆண்டுகள் ஆனாலும் நடைமுறைக்கு வராத மசோதா!**

ஆனால் பா.ஜ.க. மார்தட்டிக் கொள்கிறார்களே... இப்போது கொண்டு வந்திருக்கிற மகளிர் மசோதா பத்து ஆண்டுகள் 20 ஆண்டுகள், 25 ஆண்டுகள் ஆனாலும் நடைமுறைக்கு வர முடியாத மசோதாவைக் கொண்டுவந்து தேர்தலுக்காக ஏமாற்றத் துடிக்கிறார்கள்.

பா.ஜ.க. ஆட்சியிலே நாட்டிலே எந்த பெண்ணுக்காவது பாதுகாப்பு இருக்கிறதா? மணிப்பூர் பற்றி எரிந்துகொண்டிருக்கிறது. நானும் சுஷ்மிதா தேவ் அவர்களும் முகாம்களில் சென்று பார்த்தபோது, சொல்லொணா துயரோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதே பா.ஜ.க. குஜராத்தில் செய்த அட்டூழியங்களால் அநியாயங்களால் பெண்கள் எந்த அளவிற்கு பாதிக்கப் பட்டார்கள் என்பதை நாம் இன்று வரை மறந்து விட முடியாது.

மதக் கலவரங்கள், காழ்ப்புணர்வு அரசியல், வெறுப்பு அரசியல் என்று வரும்பொழுது மிகப் பெரிய அளவில் பாதிக்கப்படுவது பெண்கள்தான் என்பதை இங்கே இருக்கக்கூடிய சகோதரிகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**அவமானப்படுத்தப்படும் குடியரசுத் தலைவர்!**

இந்த நாட்டின் முதல் குடிமகள் என்று சொல்லக்கூடிய குடியரசு தலைவர். ஒடுக்கப்பட்ட சமூகத்தை சேர்ந்த ஒரு பெண் என்பதால் கோயிலுக்குள் செல்ல முடியாது, பாராளுமன்றத்திற்கு வர முடியாது என்று அவமானப்படுத்தப்படுகிற நிலை இந்த நாட்டிலே முதல் குடிமகளுக்கு நடந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் மறந்து விட முடியாது.

அதே போல பக்கத்திலே பாண்டிச்சேரியிலே பாஜக கூட்டணி அரசாங்கத்திலே ஒரு பெண் அமைச்சர் ராஜினாமா கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கிறார்.

அந்த ராஜினாமா கடிதத்திலே அவர் குறிப்பிட்டார், நான் ஒரு பெண் ஒரு தலித் என்பதால் இன்று இந்த நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன், ராஜினாமா செய்ய வற்புறுத்தப்பட்டிருக்கிறேன் எனக்கு வேறு வழியில்லை என்று ஒரு அமைச்சர் சொல்லக்கூடிய நிலை.

அதேபோல டெல்லியிலே விளையாட்டு வீராங்கனைகள் தங்களுக்கு நியாயத்துக்காக மாதக் கணக்கில் போராடினார்கள். அவர்களுக்கு நியாயம் கிடைத்ததா இல்லை? இந்த ஆட்சியிலே யாருக்கும் குடியரசு தலைவராக இருக்கட்டும்... வீராங்கனைகளாக இருக்கட்டும் சாதாரண பெண்ணாக இருக்கட்டும் யாருக்குமே பாதுகாப்பில்லை. நியாயம் இல்லை என்ற நிலையை தான் மத்தியிலே ஒன்றியத்தில் இருக்கக்கூடிய பிஜேபி ஆட்சி உருவாக்கி தந்திருக்கிறது. இந்த நிலை நீடிக்க வேண்டுமா நீடித்தால் பெண்களுக்கு பாதுகாப்பு இருக்கிறதா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**தமிழ்நாட்டில் 43% பெண்கள் வேலைக்குப் போகிறார்கள்!**

இன்று இந்தியாவில் அதிகமாக பெண்கள் வேலைக்கு போகக்கூடிய பெண்கள் இருக்கக்கூடிய மாநிலம் தமிழ்நாடு. தமிழ்நாட்டில் 43% பெண்கள் வேலைக்குப் போகிறார்கள். ஆனால் இந்த நாட்டிலே பிஜேபி ஆட்சியில் முதலில் 2016 இல் 15% பெண்கள் வேலைக்கு போகும் நிலை இருந்தது. ஆனால் இப்போது 8% ஆக அது குறைந்திருக்கிறது.

பெண்களுக்கு எதிர்காலம் இல்லை. பாதுகாப்பு இல்லை என்ற நிலையை தான் இவர்கள் இந்த நாட்டிலே இருக்கக்கூடிய பெண்களுக்கு உருவாக்கி தந்திருக்கிறார்கள்.

இந்த நாட்டிலே வாக்களிப்பவர்களில் 50% பெண்கள் இருக்கிறார்கள். ஆனால் கொள்கை முடிவெடுப்பதில் பெண்களுக்கு இடமில்லை என்ற நிலைதான் நீடித்து வருகிறது. நாங்கள் யாசகம் கேட்கவில்லை எங்கள் உரிமைகளுக்காக போராடுகிறோம் என்று இந்த நாட்டிலே இருக்கக்கூடிய பெண்கள் நிமிர்ந்து நின்று போராட வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம் என்பதை மறந்து விடக்கூடாது.

பெண்கள் இல்லாமல் எந்த அரசியலும் இல்லை, எந்த கொள்கை உருவாக்கலும் இல்லை, எந்த அரசும் இல்லை என்ற நிலையை உருவாக்குவோம். வாருங்கள் வரலாற்றை மாற்றி எழுதுவோம்”

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் சிறப்புரையாற்றினார்.

---

### விழுப்புரம் மாவட்ட மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில்

## ஆலம்பூண்டியில் வேலைவாய்ப்பு முகாமில் வேலைவாய்ப்புக்கான பணி ஆணை!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்

செஞ்சி, அக்.16-

விழுப்புரம் மாவட்டம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில்மாவட்ட அளவிலான மாபெரும் வேலை வாய்ப்பு முகாம் செஞ்சி ஒன்றியம் ஆலம்பூண்டி ஸ்ரீ ரங்க பூபதி பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு விழுப்புரம் மாவட்ட மகளிர் திட்ட இயக்குனர் காஞ்சனா தலைமை தாங்கினார்.

செஞ்சி ஒன்றிய பெருந் தலைவர் விஜய குமார்,பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழுப்புரம் மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர் கமலாவள்ளி அனைவரும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு வேலைவாய்ப்பு முகாமை குத்து விளக்கு ஏற்றி வைத்து வேலை வாய்ப்புக்கான பணி ஆணையும், பல்வேறு நிறுவனங்கள் மூலம் தொழில் புரிவதற்கான பயிற்சி வழங்குவதற்கான சான்றிதழ்களை வழங்கி சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான், இரண்டு ஆண்டு காலத்தில் தமிழகத்தில் வேலை வாய்ப்பு மூலம் அரசு சார்பிலும் தனியார் துறை சார்பிலும் 1.50 லட்சம் நேரடியாக வேலை வாய்ப்புக்கு சென்றுள்ளனர்.

நான் முதல்வன் திட்டத்தின் மூலம் கிராமத்தில் உள்ள ஏழை எளிய விவசாய குடும்பத்தைச் சார்ந்த மகன், மகள்கள், கூலி தொழிலாளர்களின் மகன் மகள்கள் இன்றைக்கு அரசு மற்றும் அரசு துறையுடன் இணைந்து தனியார் துறையில் வேலை வாய்ப்புகளை பெறுகின்ற நிலையை பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால் முதலமைச்சரின் தொடர் முயற்சியாகும்.

அந்த வகையில் தமிழ்நாட்டை எல்லாத் துறைகளையும் சீர்தூக்கி பார்த்து முதலிடம் பெற வேண்டும் என்பதற்காக முதலமைச்சர் உழைத்துக் கொண்டிருக்கிறார். வரும் 16ஆம் தேதி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் சென்னையில் வெளிநாட்டுக்கு வேலைக்குசெல்பவர்களுக்குபயிற்சி கொடுக்கும் பொறுப்பையும் அயலகத் துறை ஏற்றுள்ளது. பல்வேறு காலகட்டங்களில் தமிழகத்தில் உள்ள படித்த இளைஞர்களுக்கு எல்லாம் நிலையிலும் அவர்களுடைய தகுதிகள் ஏற்ப வேலை கிடைக்க முயற்சி மேற்கொண்ட அரசு திராவிட மாடல் அரசு மக்கள் மீதும் மக்கள் நலன் மீதும் அக்கறை கொண்ட முதலமைச்சரை நாம் பெற்றிருப்பதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமைப்பட தெரிவித்தார்.

முகாமில் பல்வேறு நிறுவனங்கள் பங்கேற்றனர். முகாமில் 1000 மேற்பட்ட இளைஞர்கள் பங்கேற்று பயனடைந்தனர்.

நிகழ்ச்சியில் மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், மாவட்ட கவுன்சிலர் சாந்தி சுப்பிரமணியன்,ரங்க பூபதி பொறியியல் கல்லூரி முதல்வர் மணிகண்டன், மாவட்ட மகளிர் திட்ட கண்காணிப்பாளர் வெங்கடேசன், உதவி திட்ட அலுவலர்கள் முருகானந்தம், அருண்,வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் மகளிர் சுய உதவி குழுஉறுப்பினர்கள் கலந்து கொண்டனர். வட்டார இயக்க மேலாளர் ரஞ்சிதா நன்றி கூறினார்.

---

### கும்முடிப்பூண்டி கிழக்கு ஒன்றியம்

## தேர்வழி கவிஞர் மு.ஆழியாதன் மறைவு!

### மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் அஞ்சலி!

திருவள்ளூர், அக்.16-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப் பூண்டி தொகுதி கும்மிடிப் பூண்டி கிழக்கு ஒன்றியம் தேர்வழி ஊராட்சியைச் சேர்ந்த மாநில இலக்கிய அணி முன்னாள் புரவலரும் முன்னாள் பொதுக்குழு உறுப்பினரும் கும்மிடிப் பூண்டி ஒன்றிய முன்னாள் துணை பெருந் தலைவரும் கழக முத்த முன்னோடி கவிஞர் மு.ஆழியாதன் வயது:82 உடல் நலக் குறைவால் அன்று 14.10.2023 இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்தவுடன் மாவட்ட செயலாளரும் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ. கோவிந்தராஜன் மலர் வளையம் வைத்து நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும் கழகத்தினருக்கும் ஆறுதல் கூறினார். மறைந்த கவிஞர் மு.ஆழியாதன் அவர்கள் கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் கலந்து கொண்டு சிறைவாசம் சென்றவர். இந்தி திணிப்பு எதிரிப்பு ஆர்பாட்டத்திலும் போராட்டத்திலும் பங்கேற்றவர்.

மாவட்ட, மாநில, நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர் செயலாளர்கள் நிர்வாகிகள், மாவட்ட ஒன்றிய அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் ஆகியோர் இறுதி உர்வலத்தில் கலந்து கொண்டனர்.

---



# மகளிர்க்கான இடஒதுக்கீடு - இந்தியா கூட்டணிதான் நிறைவேற்றும்!

## திருமதி. சோனியா காந்தி உரை.. முதல் பக்கத் தொடர்ச்சி

இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்காக இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி நாடாளுமன்றத்திற்குள்ளேயே பல முயற்சி களை மேற்கொண்டது.

மகளிர் இட ஒதுக்கீட்டிற்கான சட்டம், ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசால், 2010 மார்ச் மாதம் 9-ஆம் தேதியன்று மாநிலங்களவையில் நிறை வேற்றப்பட்டது. ஆனால் மக்களவையில் ஒரு கருத்தொற்றுமையை உருவாக்க முடியாத காரணத்தினால் அந்தச் சட்டத்தினை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது.

இப்போது இந்தச் சட்டம் நிறைவேறி இருக்கிறது என்று சொன்னால் கூட, இந்தச் சட்டத்திற்காக நாம் எடுத்துக்கொண்ட முயற்சிகளும், நாம் கொடுத்த அழுத்தங்களும் மிக அதிகம்.

இங்கே பல்வேறு உறுப்பினர்கள் பேசியதுபோல இந்தச் சட்டம் என்றைக்கு நடைமுறைக்கு வரும்; என்று அமல்படுத்தப்படும்; என்று ஒரு தெளிவே இல்லாத ஒரு சூழ்நிலையிலே இந்த ஆண்டா, அடுத்த ஆண்டா, இன்னும் சில ஆண்டுகள் கழித்தா? என்கின்ற ஒரு நிரந்தரமற்ற தன்மையிலே இந்தச் சட்டம் உருவாக்கி இருப்பது, நாளை வருகின்ற இந்தியா கூட்டணி வந்துதான் இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டிய சூழ்நிலையை உருவாகும் என்ற எண்ணத்தை நமக்குத் தருகின்றது.

### அண்ணா-கலைஞர் முன்னெடுப்புகள்!

அறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையிலே அமைந்த அரசும், அதனைத் தொடர்ந்து கலைஞர் தலைமையிலே தொடர்ந்த அரசும் எடுத்துக் கொடுத்த முன்னெடுப்புகளும், செயல்படுத்திய திட்டங்களும், பெண்களுடைய வாழ்க்கையில் பல புரட்சிகளையும், பல முன்னேற்றங்களையும் தந்திருக்கன்றது.

அதன் அடிப்படையில் தான் இன்று தமிழ்நாட்டை இந்தியாவே புகழ்ந்து கொண்டிருக்கின்ற மகளிர் உரிமைகளையும், மகளிருடைய சமத்துவத்தையும் கொண்டாடக்கூடிய ஒரு ஒளிவிளக்காகத் திகழ்கின்றது என்று சொன்னால், அது மிகையாகாது.

வரலாற்று புகழ்மிக்க ஐந்துமுறை முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்களுடைய ஆட்சி காலத்தில் தான், 1973-ஆம் ஆண்டில் காவல்துறையில் பெண்களுடைய பங்கை அவர்கள் உறுதி செய்தார். இன்று தமிழ்நாட்டில் இருக்கின்ற காவல்துறையிலே நான்கில் ஒரு பங்கு பெண்களாக இருப்பது எவ்வளவு பெருமை படக்கூடிய ஒரு செயல்.

இன்று இருக்கிற காவல்துறையினரில் நான்கில் ஒரு பங்கைக் சார்ந்தவர்கள் பெண்கள் என்கிற சூழ்நிலை இருக்கின்றது.

கலைஞர் அவர்கள் செய்த முக்கியமான மற்றொரு சீர்த்திருத்தம் என்னவென்று சொன்னால், அரசு பணிகளிலே பெண்களுக்கான இட ஒதுக்கீட்டைச் செய்தது. அதன் விளைவாக அரசுப் பணிகளிலே 30 விழுக்காட்டைச் சார்ந்தவர்கள் பெண்களாக இருந்தார்கள்.

### 40 சதவிகிதமாக உயர்த்திய முதல்வர் மு.க.ஸ்டாலின்!

இன்று நம்முடைய முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் தலைமையில் செயல்படுகின்ற இந்த அரசு அந்த 30 விழுக்காட்டை 40 விழுக்காடாக உயர்த்தி பெண்களை பெருமைப்படுத்தி இருக்கின்றது.

பெண்களுடைய நல்வாழ்வுக்காக தமிழ்நாடு அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள பல்வேறு திட்டங்கள், சத்துணவுத் திட்டங்கள், பெண்களுடைய நல்வாழ்வுக்காக எடுத்துக் கொள்ளப்படுகின்ற மருத்துவத் துறையில் செயல்படுத்தக்கூடிய திட்டங்கள், தாய்மார்களுக்காகவும், பால் குடிக்கும் சேய்களுக்காகவும் அரசாங்கம் நிறைவேற்றப்படுகின்ற பல்வேறு திட்டங்கள் மிகச்சிறப்பாக செயல்படுகின்ற காரணத்தினால் தான் இன்று தமிழ்நாட்டில் தாய்-சேய் இறப்பு விகிதம் இந்தியாவிலேயே மிகக்குறைந்த நிலையிலே இருப்பதற்கு காரணமாக அதுதான் அமைந்துள்ளது.

கடந்த 9 ஆண்டு காலங்களாக மோடி அரசினுடைய நடவடிக்கைகள்- நாம் ஏற்றுக்கொண்டிருக்கின்ற திட்டங்கள், நாம் பெற்றுத்தந்த உரிமைகள், கடந்த 70 ஆண்டுகளிலே நாம் செய்த நல்ல முயற்சிகளை யெல்லாம், சீரழிக்கின்ற வகையில் செயல்படுவது நமக்கு ஏற்பட்டு இருக்கின்ற மிகப்பெரிய துரதிருஷ்டம்!

பெண்களை ஒரு அடையாளச் சின்னமாக மாற்றி, பழமையிலும், மரபிலும் ஏற்கனவே பின்பற்றி வருகின்ற பாரம்பரிய சூழ்நிலைகளில் மட்டும் தான் பெண்கள் இருக்க வேண்டும் என்று எண்ணுகிறது இந்த அரசு. அவர்களுக்காக ஒரு புதிய சுதந்திரத்தையும், உரிமைகளையும் அளிக்க அவர்கள் தயாராக இல்லை.

இதைப்போலத்தான் எல்லாத்துறைகளிலும் எல்லா சுதந்திரத்திற்கும், சமத்துவத்திற்கும் அறம் சார்ந்த சமுதாயத்திற்குமாக நாம் பெற்ற அனைத்து உரிமைகளையும் கடந்த 9 ஆண்டு காலமாக சீரழிக்கப்பட்டு வருவதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

### ‘இந்தியா’ கூட்டணி பெண்களை மேம்படுத்தும்!

நான் உறுதியாக நம்புகிறேன். நாம் ஏற்பாடு செய்து இருக்கின்ற “இந்தியா” கூட்டணி என்கின்ற இந்த அற்புதமான ஏற்பாடு - இதைப்போன்ற சமச்சீரற்ற தன்மைகளை எல்லாம் விலக்கி, பெண்களுக்கு உண்மையாகவே அவர்களுக்கு ஒரு சமத்துவ உலகை உருவாக்கிக்கொடுப்பதற்கான மிக அவசரமான நடவடிக்கைகளை நிச்சயம் மேற்கொள்ளும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நான் உறுதியாகச் சொல்லுகிறேன். இந்தியா கூட்டணி என்பது நிச்சயமாக இந்த மகளிர் இட ஒதுக்கீட்டுக்கான சட்டத்தை நிறைவேற்றியே தீரும். அதை நிறைவேற்றி ஒரு நல்ல சூழ்நிலையை நாம் ஏற்படுத்தியே தீருவோம்.

இங்கே குழுமியிருக்கின்ற நாம் அதற்கான உறுதியை எடுத்து அதனை நோக்கி செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இது இந்தியா கூட்டணியைச் சேர்ந்த கட்சிகள் நிச்சயமாக செய்யும். நாம் அனைவரும் சேர்ந்து போராடுவோம். நாம் அனைவரும் சேர்ந்து நிச்சயமாக இதனைச் சாதிப்போம்!

நன்றியோடு உழைப்போம்! வெற்றி நமதே!

இவ்வாறு திருமதி சோனியா காந்தி அவர்கள் உரையாற்றினார்.

### தொடக்கத்தில் தமிழில் பேசிய திருமதி சோனியா காந்தி

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்கள் தனது உரையை தொடங்கும்போது, “சகோதர சகோதரிகளே வணக்கம் என்று கூறி அதனைத் தொடர்ந்து ஆங்கிலத்தில் உரையாற்றினார்.

அவரது ஆங்கில உரையை காங்கிரஸ் கட்சியின் முன்னாள் எம்.பி.யும், மாநில சிறுபான்மையினர் ஆணையக்குழுத் தலைவருமான பீட்டர் அல்போன்ஸ் தமிழாக்கம் செய்தார்.

‘சென்னை சங்கமம்’ நடத்திக் காட்டிய தங்கை கனிமொழி

# இப்போது ‘இந்தியச் சங்கமத்தை’ நடத்திக் காட்டியிருக்கிறார்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை.. முதல் பக்கத் தொடர்ச்சி

பீகாரில் இருந்து அருமை நண்பர் நிதிஷ்குமாரின் குரலை எதிரொலிக்க லெஷி சிங் வந்திருக்கிறார். டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் எண்ணத்தைச் சொல்வதற்கு டெல்லி சட்டப்பேரவை துணைத் தலைவர் ராக்கி பிட்லன் வந்திருக்கிறார். சமாஜ்வாதி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் அருமை நண்பர் அகிலேஷ் யாதவ் அவர்களது மனைவியுமான டிம்பிள் யாதவ் அவர்களும், அக்கட்சியின் மகளிர் அணி தேசிய தலைவர் ஜுஹி சிங் அவர்களும் வருகை தந்துள்ளார்கள். மேற்கு வங்கப் பெண் சிங்கம் மமதா பானர்ஜியின் பிரதிநிதியாக சுஷ்மிதா தேவ் வருகை தந்துள்ளார். இடதுசாரி இயக்கங்களின் பிரதிநிதியாக சுபாஷினி அலியும், ஆனி ராஜாவும் இடம்பெற்றுள்ளார்கள். எனவே இந்த மேடையே இந்தியா கூட்டணியாக காட்சியளிக்கிறது.

**காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை இருக்கும் பெரும்பாலான மாநிலத்தைச் சேர்ந்த பெண் தலைவர்களை அழைத்து வந்து, ஏற்றத்துடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மாநாடு, தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடாக மட்டுமல்ல இந்தியப் பெண்களின் மாநாடாக அமைந்துள்ளது என்பதை நான் பெருமையோடு பதிவு செய்து கொள்ள விரும்புகிறேன். இது வரை ‘சென்னை சங்கமம்‘ நடத்திக் காட்டிய தங்கை கனிமொழி அவர்கள், இப்போது இந்தியச் சங்கமத்தை நடத்திக் காட்டி இருக்கிறார்.**

### அனைத்து மாநிலங்களிலும் ஒன்றுபட்ட கூட்டணி அமைக்க வேண்டும்!

I would like to request all the leaders present on the dais... The BJP can be defeated only through unity. Tamil Nadu has shown this since the 2019 elections. A united alliance, like the one in Tamil Nadu, should be formed in every state across India. (மேடையில் இருக்கும் தலைவர்கள் அனைவருக்கும் நான் வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன். பா.ஜ.க.வை ஒற்றுமையின் மூலமாக மட்டுமே வீழ்த்த முடியும். தமிழ்நாடு இதை 2019 தேர்தல் முதலே நிரூபித்து வருகிறது. தமிழ்நாட்டில் உள்ளது போல ஒன்றுபட்ட கூட்டணி இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் அமைக்கப்பட வேண்டும்.)

If the antiBJP parties can unite and rise above the minor differences, we can surely defeat the BJP, which is against the interests of the people of India.

I urge our sisters present here to relay this message to their party leaders! (பா.ஜ.க.வை எதிர்க்கும் அனைத்துக் கட்சிகளும் நமக்கிடையேயான சிறிய வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு நின்றால், நம்மால் நிச்சயம் இந்திய மக்களுக்கு எதிரான சக்தியான பா.ஜ.க.வை வீழ்த்த முடியும். இங்கே வருகை தந்துள்ள சகோதரிகள் இந்தச் செய்தியை உங்கள் கட்சித் தலைவர்களிடமும் கொண்டு சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.)

**33 விழுக்காடு இடஒதுக்கீடு பெண்களுக்குக் கிடைத்துவிடக் கூடாது என்ற சதி எண்ணத்தோடுதான் இந்தச் சட்டத்தையே பா.ஜ.க. கொண்டு வந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். அப்படித்தான் எல்லோருக்கும் எண்ணம் வருகிறது. ‘நடைபெற இருக்கும் நாடாளுமன்ற சட்டமன்றத் தேர்தலில் பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப்படும்‘ என்று இந்த சட்டம் சொல்லி இருந்தால் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை நாமெல்லாம் பாராட்டலாம். மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முடிந்த பிறகு அதை வைத்து தொகுதி மறுவரையறை முடிந்த பிறகு என்று சொல்கிறார்கள். பழைய படங்களில் “என் கையில் உள்ளதை நான் தரவேண்டுமானால் ஏழு மலையைச் சுற்றி வா! ஏழு கடலைச் சுற்றி வா!” என்று பூதம் சொல்வதாகக் கதை சொல்வார்கள் அல்லவா? அது போன்ற கப்சா சட்டத்தை மோடி நிறைவேற்றி விட்டு, பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு கொடுத்துவிட்டதாக பிரதமர் சொல்லிக் கொள்கிறார்.**

பாரதீய ஜனதா கட்சியைத் தோற்கடிப்பது என்பது, இந்தியாவில் இயங்கும் அனைத்து ஜனநாயக சக்திகளின் வரலாற்றுக் கடமை! மகளிர் உரிமையைக் காக்க மாநாடு கூட்டி இருக்கிறார் கனிமொழி. மகளிர் உரிமை மட்டுமா? பாஜக ஆட்சியில் அனைத்து மக்களது உரிமைகளும் பறிக்கப்பட்டு விட்டது. இன்றைக்கு நாம் பார்க்கும் நாடாளுமன்ற அமைப்பு முறை இருக்குமா? மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் மக்களாட்சி இருக்குமா? என்ற கேள்வி பெரிதாக எழுந்து வருகிறது.

ஒரே நாடு ஒரே மொழி ஒரே மதம் ஒரே பண்பாடு ஒரே தேர்தல் ஒரே தேர்வு ஒரே உணவு என்ற பெயரால் ஒற்றைக் கட்சி ஆட்சியைக் கொண்டு வரப்பார்க்கிறார் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள். அது நடந்தால், ஒரே மனிதர் என்ற எதேச்சாதிகாரத்துக்கு அது வழிவகுக்கும். எனவேதான் வர இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வை முற்றிலுமாகத் தோல்வி அடையச் செய்ய வேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கி வருவதால் பெண்களை ஏமாற்ற, மகளிருக்கு நாடாளுமன்றம் சட்டமன்றங்களில் 33 விழுக்காடு இடஒதுக்கீடு என்று சட்டம் கொண்டு வந்ததைப் போல ஏமாற்றுகிறார்கள். இங்கு உரையாற்றிய அத்தனை பேரும் மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். எனவே நான் அதிகம் விளக்கம் சொல்ல விரும்பவில்லை.

### 2024 ஆம் ஆண்டுக்குப் பிறகு மோடி ஆட்சி இருக்கப் போவதில்லை!

33 விழுக்காடு இடஒதுக்கீடு பெண்களுக்குக் கிடைத்துவிடக் கூடாது என்ற சதி எண்ணத்தோடு தான் இந்தச் சட்டத்தையே பா.ஜ.க. கொண்டு வந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். அப்படித்தான் எல்லோருக்கும் எண்ணம் வருகிறது.

‘நடைபெற இருக்கும் நாடாளுமன்ற சட்டமன்றத் தேர்தலில் பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப்படும்‘ என்று இந்த சட்டம் சொல்லி இருந்தால் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை நாமெல்லாம் பாராட்டலாம்.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முடிந்த பிறகு அதை வைத்து தொகுதி மறுவரையறை முடிந்த பிறகு என்று சொல்கிறார்கள். பழைய படங்களில் “என் கையில் உள்ளதை நான் தர வேண்டுமானால் ஏழு மலையைச் சுற்றி வா! ஏழு கடலைச் சுற்றி வா!” என்று பூதம் சொல்வதாகக் கதை சொல்வார்கள் அல்லவா? அது போன்ற கப்சா சட்டத்தை மோடி நிறைவேற்றி விட்டு, பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு கொடுத்துவிட்டதாக பிரதமர் சொல்லிக் கொள்கிறார்.

2029ஆம் ஆண்டுதான் இந்த இடஒதுக்கீடு கிடைக்கும் என்றும், 2034ஆம் ஆண்டு கூட ஆகலாம் என்றும் கணக்கிட்டுச் சொல்கிறார்கள். எதுவாக இருந்தாலும் 2024 ஆம் ஆண்டுக்குப் பிறகு மோடி ஆட்சியில் இருக்கப் போவதில்லை என்ற முடிவுக்கு மக்கள் வந்துவிட்டார்கள்.

1996ஆம் ஆண்டு தி.மு.க. காங்கிரஸ் ஆதரித்த ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் இப்படி ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டபோது இந்த நிபந்தனைகளை நாம் விதிக்கவில்லை. 2010ஆம் ஆண்டும் நமது கூட்டணி அரசு இப்படி ஒரு சட்டத்தை கொண்டு வந்தபோதும் இது மாதிரியான நிபந்தனைகளை விதிக்கவில்லை. இப்போது பா.ஜ.க. நிபந்தனை போடுகிறது என்றால் அவர்கள் உண்மை யான அக்கறையுடன் இதனை கொண்டு வரவில்லை.

மகளிர் எந்த உரிமைகளையும் பெற்றுவிடக் கூடாது, வீட்டுக்குள் முடங்கிக் கிடக்க வேண்டும் என்று நினைக்கும் கட்சிதான் பா.ஜ.க. அன்னை சோனியா காந்தி அவர்களும் பிரியங்கா காந்தி அவர்களும் இந்த மேடையில் இருக்கிறார்கள். இங்கு ஒரு விஷயத்தை நினைவு கூர்வது பொருத்தமாக இருக்கும். அவரே பேசுகிறபோது சொன்னார், பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள்தான், உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கான இடஒதுக்கீட்டை முதன்முதலாக உறுதி செய்தார்.

இதன் தொடர்ச்சியாக தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கான இடஒதுக்கீட்டை முதன் முதலாக 1996ஆம் ஆண்டு வழங்கிய வர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். இப்போது உள்ளாட்சியில் 50 விழுக்காட்டில் பெண்கள் பொறுப்பில் இருக்கிறார்கள். பா.ஜ.க. கொண்டு வந்த சட்டத்தில், இன்னொரு முக்கியமான விஷயம், இதர பிற்படுத்தப்பட்ட பெண்களுக்கும் சிறுபான்மையின பெண்களுக்கும் இடஒதுக்கீடு வழங்கவில்லை. அப்படி வழங்கினால் தான் ஏழை எளிய விளிம்பு நிலை மக்களின் குரல் சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் ஒலிக்கும். அப்படி ஒலித்துவிடக் கூடாது என்று பா.ஜ.க. நினைக்கிறது.

இதை பா.ஜ.க.வின் அரசியல் தந்திரமாக மட்டுமல்ல, அரசியல் சதியாகவும்தான் பார்க்க வேண்டியுள்ளது. இதனை நாம் சுட்டிக் காட்டினால், ஒரு அரிய கருத்தைப் பிரதமர் அள்ளி விடுகிறார். அதாவது, பெண்களை சாதிரீதியாகப் பிளவுபடுத்தப் பார்க்கிறோமாம். சாதிரீதியாக, மதரீதியாக மக்களைப் பிளவுபடுத்துவது யார் என அனைவருக்கும் தெரியும்.

இடஒதுக்கீடு நாம் கேட்கிறோம் என்றால், சாதிரீதியாகப் பிரிப்பதற்காகவா கேட்கிறோம் என்பதல்ல. அனைத்து மகளிரும் எல்லாவித உரிமைகளும் பெற்றவர்களாக உயர வேண்டும் என்பதற்காகத்தான். இதை விட்டுக் கொடுத்துவிட்டால் அடுத்தடுத்து சமூக நீதியைக் காவு வாங்கி விடுவார்கள். எந்தச் சூழலிலும் சமூகநீதியை நாம் விட்டுக் கொடுத்துவிடக் கூடாது. இது தான் நமக்கு இருக்க வேண்டிய உறுதி. ராகுல் காந்தி அவர்கள் சமூக நீதிக் குரலைத் தான் தொடர்ந்து எதிரொலித்து வருகிறார். இந்தியா கூட்டணி என்பது தேர்தல் கூட்டணியாக மட்டுமல்ல கொள்கைக் கூட்டணியாக அமைந்துள்ளது.

சமூகநீதி மதச்சார்பின்மை மாநில சுயாட்சி கூட்டாட்சிக் கருத்தியல் அனைவர்க்குமான அரசியல் பங்கீடு என்ற கோட்பாடுகளைக் கொண்டதாக இந்தியா கூட்டணி அமைந்துள்ளது. இந்தியா கூட்டணியை வெற்றி பெற வைப்பதன் மூலமாக மகளிர் உரிமை மட்டுமல்ல அனைத்து உரிமைகளும் அனைவருக்கும் கிடைக்கும் இந்தியாவை நாம் உருவாக்க வேண்டும்.

சொத்தில் சம உரிமை, வேலை வாய்ப்பில் பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு, ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் கட்டாயமாக பெண்க ளைத்தான் ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும் என்ற சட்டம், கர்ப்பிணிப் பெண்களுக்கு உதவித் தொகை, விதவைகளுக்கு மறுவாழ்வு திட்டம், ஒரு ஏழைஎளிய குடும்பத்தில் பிறந்திருக்கும் பெண்ணுக்கு திருமணம் என்றால், அந்தப் பெண்ணுக்கு நிதி உதவி செய்யும் ஒரு அற்புதமான திட்டம், இப்போது மகளிர் உரிமைத் தொகை - கடந்த மாதம் 15ஆம் தேதி, 14 ஆம் தேதி இரவே சென்று சேர்ந்துவிட்டது. இந்த மாதம் 15ஆம் தேதி வரப்போகிறது - 14ஆம் தேதி இரவே வந்து சேரப்போகிறது. எனவே மாதாமாதம் ஆயிரம் ரூபாய். உதவித் தொகை அல்ல, பெண்களே... அது உங்களுக்கு இருக்கும் உரிமைத் தொகை. மறந்து விடாதீர்கள்.

பேருந்துகளில் விடியல் பயணம், பெண் அர்ச்சகர்கள், ஓதுவார்கள் நியமனம் இப்படி தமிழ்நாட்டு பெண்களுக்கு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திக் காட்டும் நமது திராவிட மாடல் கொள்கைகள் இந்தியா முழுமைக்கும் பரவும் நாளே, மகளிர் உரிமை பெற்ற நாளாக அமையும்.

அதற்கான அடித்தளத்தை உருவாக்கும் இந்த மாநாட்டை நடத்திக் காட்டியிருக்கும் என்னுடைய அருமை தங்கை கனிமொழிக்கும் – அவருக்கு துணை நின்ற மகளிரணி நிர்வாகிகளுக்கும் என்னுடைய வாழ்த்துகள், பாராட்டுகள். வாழ்க! வாழ்க! INDIA வாழ்க! INDIA கூட்டணி வெல்க!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

‘நான் முதல்வன்’ - போட்டித் தேர்வுப் பிரிவு - UPSC முதல் நிலைத் தேர்வுக்கான -

# தமிழ்நாடு அரசினால் தேர்ந்தெடுக்கப்பட்ட 1000 நபர்களுக்கு ஊக்கத்தொகை!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

*சென்னை, அக்.16 -*

நான் முதல்வன் திட்டத்தின் கீழ் போட்டித் தேர்வுப் பிரிவானது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை மற்றும், சிறப்புத் திட்ட செயலாக்க துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் 07.03.2023 அன்று துவங்கி வைக்கப்பட்டது. ஒன்றிய அரசின் போட்டித் தேர்வுகளில் தமிழக மாணவர்களின் திறன் இடைவெளியைக் குறைப்பதும், ஒன்றிய அரசுப் பணிகளில் தமிழக மாணவர்களின் விகிதாச்சாரத்தை அதிகரிப்பதும், அவர்களுக்குத் தரமான பயிற்சியை கட்டணமில்லாமல் வழங்குவதும் இப்பிரிவின் முக்கிய நோக்கமாகும்.

இந்நிலையில் 2023-24க்கான தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையில், நான் முதல்வன் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் ஒன்றிய அரசுக் குடிமைப் பணித் தேர்வுகளுக்குத் தயாராகி வரும் 1000 மாணவர்கள், மதிப்பீட்டுத் தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டு, முதல்நிலை தேர்வுக்குத் தயாராவதற்கு ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ரூ.7,500 வீதம், பத்து மாதங்களுக்கு வழங்கப்படும் என்றும், முதல்நிலை தேர்வில் தேர்ச்சி பெறுவோருக்கு 25,000 ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இது சமீப காலமாக UPSC சிவில் சர்வீசஸ் தேர்வில் தேர்ச்சி பெறும் தமிழக மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து வரும் விகிதத்தை மாற்றியமைக்க தமிழக அரசால் எடுக்கப்பட்டிருக்கும் மாபெரும் முயற்சியாகும்.

இதன்படி, 2023ஆம் ஆண்டுக்கான குடிமைப் பணி முதல்நிலை தேர்வு முடிவுகள் 12.06.2023 அன்று வெளியான நிலையில் அதில் வெற்றி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவின் வாயிலாக சான்றிதழ் சரிபார்ப்பு முடிக்கப்பட்டு, இதுவரை 435 மாணவர்களுக்கு தலா ரூ.25,000 வீதம் ரூ.1,08,75,000 (ரூபாய் ஒரு கோடியே எட்டு லட்சத்து எழுபத்தையாயிரம்) முதன்மைத் தேர்வுக்கு தயாராவதற்கான ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையானது, மாணவர்களை தேர்வுக்குத் தயாராகும் செலவீனங்களிலிருந்து விடுவித்து, தேர்வின் அடுத்தடுத்த நிலைகளை வெற்றிகொள்ள ஊக்குவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த செப்டம்பர் 10 ஆம் தேதி போட்டித்தேர்வு பிரிவால் நடத்தப்பட்ட ஒன்றிய அரசின் முதல் நிலை தேர்வுக்கான உதவித்தொகை பெறுவதற்கான தேர்வு (UPSC Prelims Scholarship Exam) நடைபெற்றது. தமிழ்நாடு முழுவதிலிருந்தும் 52,225 மாணவர்கள் விண்ணப்பித்தனர். இதில் 32,638 மாணவர்கள் ஊக்கத்தொகைக்கான தேர்வை எழுதினர். அத்தேர்வில் தேர்வான 1000 மாணவர்களுக்கு இனி வரும் 10 மாதத்திற்கு ரூ.7500 வீதம் என ஊக்கத்தொகை அரசால் வழங்கப்படும்.

இதன் தொடர்ச்சியாக, UPSC முதல்நிலை தேர்வின் ஊக்கதொகைக்கான மதிப்பீட்டுத் தேர்வை நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவானது கடந்த 10.09.2023 அன்று அரசு தேர்வுகள் இயக்ககம், நடத்தியது. இத்தேர்வுக்கான முடிவுகள் 27.09.2023 அன்று வெளியான நிலையில், 7.10.2023 முதல் 10.10.2023 வரை சான்றிதழ் சரிபார்க்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட 1000 மாணவர்களுக்கு முதல் மாத ஊக்கத்தொகை வழங்கும் விழா நேற்று (14.10.2023), சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது. குடிமைப் பணிகளுக்குத் தயாராகி வரும் மாணவர்களை செலவுகளின் அழுத்தத்திலிருந்து விடுவிக்கும் இத்திட்டமானது சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் கீழ் வருவதால், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்க துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இவ்விழாவுக்கு தலைமை வகித்து, மாணவர்களுக்கு முதல் மாத ஊக்கத்தொதைக்கான வரைவோலையினை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. பிரியா ராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் மற்றும் கூடுதல் தலைமைச் செயலாளர்/ அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி இயக்குநர் விக்ரம் கபூர், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலாளர் தரேஷ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி இன்னசென்ட் திவ்யா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தந்தை பெரியாரின் கொள்கைகளை இளம் வயதிலேயே பெரிய எழுச்சியுடன் மேடைகளில் முழங்கி

# இயக்கத்தின் வளர்ச்சிக்குத் துணை நின்றவர் தளபதி அர்ச்சுனன் மன்றாடியார்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் ஆற்றிய உரையில் புகழாரம்!

சென்னை, அக்.16-

**தந்தை பெரியார் அவர்களின் கொள்கைகளை இளம் வயதிலேயே பெரிய எழுச்சியுடன் மேடைகளில் முழங்கி இயக்கத்தின் வளர்ச்சிக்கு துணை நின்றவர் இளைய பட்டக்கார் என்று சொல்லப்படும் தளபதி அர்ச்சுனன் என்று அவரது நூற்றாண்டையொட்டி காணொலி மூலம் ஆற்றிய உரையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டினார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.10.2023) காணொலிக் காட்சி வாயிலாக திராவிடர் கழகத்தின் சார்பில் தளபதி அர்ச்சுனன் மன்றாடியார் அவர்களின் நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை வருமாறு :-

பழையகோட்டை இளைய பட்டக்காரர் என்று சொல்லப்படும் மரியாதைக்குரிய அர்ச்சுனன் அவர்களின் நூற்றாண்டு விழாவுக்குத் தலைமை வகித்து அவரது படத்தை திறந்து வைத்துள்ள திராவிடர் கழகத் தலைவர் மானமிகு அய்யா ஆசிரியர் அவர்களே!

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த விழாவில் பங்கெடுத்துக் கொண்டுள்ள திராவிட இயக்க ஆளுமைகளே!

உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சிறப்புமிகு நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்ள இயலாத நிலையில் வேறு பணிகளில் நான் இருப்பதால் காணொளி மூலமாக எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1940ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள் இந்த இயக்கத்தை வளர்ப்பது சிறு வயது இளைஞர்கள்தான் என்று குறிப்பிட்டார்கள்.

அத்தகைய இளைய தீரர்களில் ஒருவர்தான் பழையகோட்டை இளைய பட்டக்காரர் என்று சொல்லப்படும் மரியாதைக்குரிய அர்ச்சுனன் அவர்கள்.

இன்றைக்கு மிகப் பெரிய தலைவர்களாக போற்றப்படும் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் எனப் பலரும் மிக மிக இள வயதிலேயே மேடைகளில் முழங்க தொடங்கியவர்கள்.

### பகுத்தறிவு - சுயமரியாதை கருத்துகளை முழங்கியவர்!

அதிலும் நம்முடைய அய்யா ஆசிரியர் அவர்கள் அந்தக் காலக்கட்டத்தில் பள்ளிச் சிறுவனாக இருந்து பத்து வயதில் மேடைகளில் முழங்கத் தொடங்கியவர் என்பதை அனைவரும் அறிவீர்கள்.

இப்படி ஏராளமான இளைஞர்கள் இளம் பெண்கள் சிறுவர்கள் இந்த இயக்கத்தை நோக்கி சிறுவயதிலேயே ஈர்க்கப்பட்டார்கள். பெரியாரின் கொள்கை மீதான ஈர்ப்பு மட்டுமே காரணமல்ல. பெரியார் என்ற தலைவர் மீதான பாசமும், அன்பும் இன்னொரு முக்கியமான காரணம். அப்படி தந்தை பெரியாரால் ஈர்க்கப்பட்டவர்களுள் முக்கியமானவர் அர்ச்சுனன் அவர்கள்.

இளம் வயதிலேயே பெரும் எழுச்சியுடன் தந்தை பெரியாரின் கொள்கைகளை மேடைகளில் முழங்கி, இயக்கத்தின் வளர்ச்சிக்குத் துணை நின்றவர் பழையகோட்டை இளைய பட்டக்காரர் ந.அர்ச்சுனன் அவர்கள். தமிழ்நாட்டின் மேற்கு மண்டலத்தில் பழையகோட்டை குடும்பத்தார் என்றால் அறியாதவர்கள் கிடையாது. மிகப் பெரிய செல்வந்தர்கள்.

ஏராளமான நிலபுலன்களைக் கொண்டவர்கள். காங்கேயம் மாடுகள் என இன்று புகழ் பெற்றிருக்கும் மாடுகளை வளர்த்தெடுத்ததில் இந்தக் குடும்பத்தினருக்குத் தனிப் பெருமை உண்டு. அத்தகைய செல்வச் செழிப்பு மிக்க குடும்பத்தில் நல்லதம்பி சர்க்கரை மன்றாடியார் அவர்களின் இளைய மகனாக, நல்லசேதுபதி சர்க்கரை மன்றாடியாரின் இளவலாகப் பிறந்த இளைய பட்டக்காரர்தான் அர்ச்சுனன் அவர்கள்.

தந்தை பெரியாரின் கொள்கைகளால் இருபது வயதிலேயே ஈர்க்கப்பட்டு, அவரது தளபதியாகத் திகழ்ந்தவர் அவர். தமிழ்நாடெங்கும் பயணித்து பெரியாரின் பகுத்தறிவுசுயமரியாதை கருத்துகளை முழங்கியவர். பொதுக் கூட்டங்களிலும் மாநாடுகளிலும் அர்ச்சுனன் முன்வைத்த கருத்துகள், சிந்தனையைத் தூண்டி, செயலாற்றலுக்குத் துணை நின்றன.

நீதிக்கட்சியும் சுயமரியாதை இயக்கமும் இணைக்கப்பட்டு 1944ஆம் ஆண்டு சேலம் மாநாட்டில், திராவிடர் கழகம் எனப் பெயர் மாற்றம் பெற்றது. பெரியாரின் தலைமையிலான இயக்கத்திற்குப் பெயர் மாற்றம் செய்யும் தீர்மானத்தின் பெயர், அண்ணாதுரை தீர்மானம். பேரறிஞர் அண்ணாவின் பெயரால் அமைந்த தீர்மானம். அவரே முன்மொழிந்த தீர்மானம் அது. அதன்பிறகு, திராவிடர் கழகத்திற்கு ஒரு கொடி வேண்டும் எனப் பெரியார் திட்டமிட்டார். அதற்கான வடிவமைப்பின்போதுதான், கருப்பு நிறத்திற்கு நடுவே சிவப்பு வட்டம் வரைவதற்கு மை தேவைப்பட்டபோது, சிவப்பு மை இல்லாததால், தலைவர் கலைஞர் அவர்கள் தன் விரலில் குண்டூசி யால் குத்தி, பொங்கி வந்த ரத்தத்தைக் கொண்டு சிவப்பு வட்டத்தை வரைந்தார்.

கொள்கையாளரின் குருதியில் வடிவமைக்கப்பட்டது திராவிடர் கழகக் கொடி. சமுதாய இருளை அகற்றி, புரட்சி வெளிச்சம் பரவ வேண்டும் என்ற அடையாளமான அந்தக் கொடியை பல ஊர்களிலும் ஏற்றியவர் பழையகோட்டை இளைய பட்டக்காரர் அர்ச்சுனன்.

### சமுதாய சீர்திருத்தப் பாதையில் பயணித்தவர்!

கொடியேற்றி வைத்து அவர் ஆற்றிய வீர உரைகள், அன்றைய இளைஞர்களின் நெஞ்சில் அறிவுச் சுடராக ஒளிர்ந்தது.

ஜமீன் குடும்பத்துப் பையனான அர்ச்சுனன் தன் சொத்து, சுகம், செல்வச் செழிப்பு பற்றிக் கவலைப்படாமல், கரடுமுரடான சமுதாய சீர்திருத்தப் பாதையில் பயணித்தார். தந்தை பெரியாருக்குத் தளபதியாகச் செயல்பட்டார். அவர் கொள்கைகளைக் கொட்டி முழக்கி, பாட்டாளிகளின் தோழனாகத் திகழ்ந்தார்.

கோவையில் நடந்த திராவிடர் இளைஞர் முதலாவது மாநாட்டுக்கு வரவேற்புக்குழுத் தலைவராக இருந்தவர் அர்ச்சுனன். அந்த மாநாட்டில் தலைமையுரை ஆற்றியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். "ஓர் அரியதீரமுள்ள முன்னணிப் படை இன்று தயாராகி விட்டது. கஷ்ட நஷ்டங்களைக் கவனியாமல், எதிர்ப்புக்கு அஞ்சாமல், சூது சூழ்ச்சிகள் கண்டு சோர்வடையாமல், சளைக்காமல் உழைக்க இளைஞர்கள் முன்வந்துள்ளனர். இது கண்டு எதிரிகள், எப்படி புறப்பட்டது இந்தப் படை, எப்படி அமைந்தது இத்தகைய முன்னணி என்று எண்ணி ஏங்குகின்றனர்" இப்படி உணர்ச்சியும் எழுச்சியும் மிக்க அழகு தமிழில் பேசியவர் அண்ணா அல்ல, அர்ச்சுனன்தான் இப்படிப் பேசினார்.

அவருடைய சொற்பொழிவுகளின் பதிவுகளைப் படிக்கும்போது, பேரறிஞர் அண்ணாவின் பேச்சைக் கேட்பது போலவே இருக்கிறது. தந்தை பெரியாரின் தளபதிகளான பட்டுக்கோட்டை அழகிரி, பேரறிஞர் அண்ணா, பழையகோட்டை அர்ச்சுனன் எனப் பலரும் கொள்கை முழக்கத்தால் எளியவர்களையும் ஈர்க்கக்கூடிய ஆற்றல் பெற்றவர்களாக தொடக்க காலத்தில் இருந்திருக்கிறார்கள். நம்பிக்கைக்குரிய இளைஞராகத் திகழ்ந்த அர்ச்சுனன் அவர்களைத் திராவிடர் கழகத்தின் முதல் பொருளாளராக நியமித்தார் பெரியார் அவர்கள்.

தந்தை பெரியாரின் நம்பிக்கையை ஒருவர் பெறுவது என்பது எவ்வளவு சிரமமானது என்பதை அனைவரும் அறிவோம். அத்தகைய பெரியார் அவர்களையே இளைஞராக இருக்கும்போது ஈர்த்து நம்பிக்கையைப் பெற்றவர் அர்ச்சுனன் அவர்கள் என்பதே அவரது பெருமையைச் சொல்வதற்கு போதுமான எடுத்துக்காட்டு.

> **தந்தை பெரியாரின் கொள்கைகளால் இருபது வயதிலேயே ஈர்க்கப்பட்டு, அவரது தளபதியாகத் திகழ்ந்தவர் அவர். தமிழ்நாடெங்கும் பயணித்து பெரியாரின் பகுத்தறிவு சுயமரியாதை கருத்துகளை முழங்கியவர். பொதுக் கூட்டங்களிலும் மாநாடுகளிலும் அர்ச்சுனன் முன்வைத்த கருத்துகள், சிந்தனையைத் தூண்டி, செயலாற்றலுக்குத் துணை நின்றன.**

### தாய்க் கழகத்தின் கொள்கை மறவர் அர்ச்சுனன்!

திராவிடர் கழகம் உருவான சில ஆண்டுகளில், தந்தை பெரியாரை கோவை மாவட்டம் முழுவதும் சுற்றுப்பயணம் அழைத்துச் செல்வதற்காக, அன்றைய நாளில் 16 ஆயிரம் ரூபாய்க்கு புது கார் ஒன்றை வாங்கியவர் அர்ச்சுனன். பத்து கிராம் தங்கம் 99 ரூபாய்க்கு விற்ற காலம் அது. அந்தக் காலத்தில் 16 ஆயிரம் ரூபாய்க்கு புது கார் வாங்கிக் கொடுத்தவர். இப்படி தனது உழைப்பை மொத்தமாக பெரியார் கொள்கைக்கு வழங்கியவர் அர்ச்சுனன் அவர்கள்.

"திராவிடர்களாகிய நாம் சுதந்திரத்துடன் வாழ வேண்டும்! இல்லாவிட்டால் மாள வேண்டும்" என்று ஊர் ஊராகப் போய் எழுச்சி ஏற்படுத்தினார். மேற்கு மண்டலத்தில் கருஞ்சட்டைப் படையை பலப்படுத்தியது அவரது கர்ஜனைதான். அத்தகைய கொள்கை வீரர். பேச்சாலும் செயலாலும் திராவிட இயக்கத்தின் பக்கம் பலரையும் ஈர்த்த தீரர், உடல்நலன் பாதிக்கப்பட்டு தன் 23 வயதிலேயே உயிர் நீத்தார் என்பது மிகமிக வருத்தம் தரும் செய்தி.

அர்ச்சுனன் அவர்களுடைய மறைவு கேட்டு அதிர்ச்சியடைந்த பெரியார், கண்ணீருடன் தன் கைப்பட குடிஅரசு பத்திரிகையில் இரங்கல் தலையங்கம் எழுதினார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள், 'திராவிட நாடு' இதழில் தலையங்கம் தீட்டினார். தமிழ்நாடெங்கும் திராவிடர் கழகத்தினர் சோகத்தில் மூழ்கினர். இழப்புகளையும் வலிகளையும் எதிர்கொண்டே திராவிட இயக்கம் வளர்ந்தது. அர்ச்சுனன் அவர்களின் மறைவின் துயரையும் தாங்கிக்கொண்டு, அவரது புகழ் போற்றும் நிகழ்வுகளை அன்றைக்கும் திராவிடர் கழகம் நடத்தியது. இன்றைக்கும் அவர் நூற்றாண்டு நிறைவு விழாவை நடத்துகிறது.

இலட்சியவாதிகள் இறக்கலாம். இலட்சியங்கள் ஒரு போதும் இறப்பதில்லை என்று எழுதியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

இலட்சியங்களை உயர்த்திப் பிடித்த இலட்சியவாதியாம் அர்ச்சுனனை மறக்காமல், அவரது புகழினைப் போற்றும் அய்யா ஆசிரியர் அவர்களுக்கும் திராவிடர் கழகத்தினருக்கும் என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் இரட்டை குழல் துப்பாக்கி என்றார் பேரறிஞர் அண்ணா. தாய்க் கழகத்தின் கொள்கை மறவர் அர்ச்சுனனை தி.மு.கழகம் நினைவிலேந்திப் போற்றுகிறது. பழையகோட்டை பட்டக்காரர் குடும்பத்தினர் பலர் இன்றளவும் தி.மு.கழகத்தின் கொள்கை முரசங்களாகத் திகழ்ந்து வருகிறார்கள்.

அர்ச்சுனன் போன்ற தீரர்கள் சுயமரியாதை பகுத்தறிவு இயக்கத்துக்கு இன்னும் தேவைப்படுகிறார்கள். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுமைக்கும் திராவிட இயல் கோட்பாடு ஒலிக்கத் தொடங்கி இருக்கிறது. "எங்களுக்கு ஒரு பெரியார் இல்லையே! எங்கள் மாநிலத்தில் திராவிட இயக்கம் இல்லையே" என்ற ஏக்கம் மற்ற மாநிலங்களில் கேட்கத் தொடங்கி இருக்கிறது.

பழையகோட்டை இளைய பட்டக்காரர் அர்ச்சுனன் அவர்கள் வழியில், இலட்சிய முழக்கத்தை தொடர்ந்து எழுப்புவோம். சமூகநீதியையும் சுயமரியாதையையும் இந்தியா முழுமைக்கும் பரவிடச் செய்வோம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### ஆந்திராவின் திட்டமா,

# தெலங்கானாவின் திட்டமா என்று கூட தெரியாத அண்ணாமலை!

## முகத்திரையைக் கிழித்த தெலங்கானா முதல்வரின் புதல்வி கவிதா!

*சென்னை, அக்.16 -*

*அ ண் ணா ம லை என்றாலே பொய் மட்டுமே பேசுவார் என்று நாளுக்கு நாள் அவரே உறுதிப்படுத்தி வருகிறார். தினமும் ஒரு பொய்யை சொல்லி மாட்டி கொள்ளும் அண்ணாமலை, சமீபத்தில் அண்ணா குறித்து சர்ச்சை, முதுகலை மருத்துவ படிப்பு சீட், தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்ட அணைகள் விவரம் என அடுத்தடுத்து வாயில் வடை சுட்டு மாட்டிக்கொண்டார். அவர் பிறக்காத காலத்தில் நடந்த சம்பவங்கள் மற்றும் அவர் பார்க்காத சம்பவங்களை நேரில் நின்று பார்த்ததுபோல் ஒரு கதையை சொல்வதில் அவருக்கு நிகர் அவரே.*

*தமிழ்நாடு குறித்தும், தலைவர்கள் குறித்தும் அண்ணாமலை அடித்துவிடும் பொய்க்கு ஆதாரங்கள் வெளிவந்தால் கப்சிப் என ஆகிவிடுவார். இதுகுறித்து பத்திரிகையாளர்கள் கேள்வி கேட்டால், அதுக்கு விளக்கமளிக்காமல் ஒரே கேள்வியை அந்த நிருபரிடமே ரிப்பீட் மோடில் கேட்டு அவர்தான் புத்திசாலி என்று நினைத்துக் கொள்வார். ஆனால் நேற்று முன்தினம் நடந்த ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்ற அண்ணாமலை மிகப்பெரிய பொய்யை சொன்னார். அதற்கு மேடையிலேயே அவரது முகத்திரை கிழிக்கப்பட்டதால் வாய் ஜோக் கொடுத்தவர் கை கட்டி வேடிக்கை மட்டும் பார்த்தார்.*

*இந்தியாவில் வருகிற 2024ல் நடைபெற உள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெறப் போவது யார்? என்ற தலைப்பில் சென்னையில் நேற்று முன்தினம் ஒரு விவாத மேடை நிகழ்ச்சி நடந்தது. இந்த விவாத நிகழ்ச்சியில் காங்கிரஸ் எம்.பி. கார்த்தி சிதம்பரம், தமிழக பா.ஜ. தலைவர் அண்ணாமலை, தெலங்கானா மாநில எம்.எல்.சி.யும், அம் மாநில முதல்வர் சந்திரசேகரராவ் மகளுமான கவிதா ஆகியோர் பங்கேற்றனர். இதில், பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை பேசுகையில், 'இன்றைக்கு வாரிசு அரசியல் அதிகரித்து விட்டது. பெற்றோர் பின்புலமாக கொண்டு வாரிசாக பிள்ளைகள் எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள், எம்எல்சியாக உள்ளனர்.*

*ஆனால் நான் மிகவும் படிப்பறிவு குறைவாக உள்ள பெற்றோருக்கு மகனாக பிறந்து இந்த நிலைக்கு வந்துள்ளேன். தெலங்கானா மாநிலத்தில் பாரதிய ராஷ்டிரிய சமிதி (பி.ஆர்.எஸ்.) கட்சி ஆட்சியில் ஊழல் அதிகரித்து விட்டது. உதாரணமாக போலாவரம் திட்டத்தில் ஊழல் மலிந்திருக்கிறது. அது உங்கள் கட்சிக்கு, பணத்தை கொட்டும் ஏ.டி.எம். போல திகழ்கிறது' என்று தெரிவித்தார்.*

*இதற்கு பதிலளித்து கவிதா, அண்ணாமலையிடம் சரமாரியான கேள்விகளால் திக்குமுக்காட வைத்தார். கவிதா பேசியதாவது:*

*தமிழகத்தில் மதுரையில் எய்ம்ஸ் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை உண்மையா? இல்லையா?. தெலங்கானாவுக்கு எந்த ஒரு சிறப்பு திட்டமும் வரவில்லை உண்மையா? இல்லையா?*

*கார்ப்பரேட் நிறுவனங்களின் ரூ.12 லட்சம் கோடி கடனை தள்ளுபடி செய்தீர்கள்?. ஆனால், 10 ஆண்டுகளில் விவசாயிகளின் கடன்களை தள்ளுபடி செய்யவில்லையே ஏன்?. மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் எனது தந்தையின் ஆட்சியில் தெலங்கானாவின் வளர்ச்சி விகிதம் அதிகமாக இருப்பதே அதற்கு சான்றாகும்.*

*2024 தேர்தலில் பா.ஜ.க.வுக்கு தென் மாநிலத்தில் ஒரு இடம் கூட கிடைக்காது. தெலங்கானாவில் கேசிஆர் செய்த வளர்ச்சி திட்டங்களை பா.ஜ.க 100 ஆண்டுகள் ஆனாலும் செய்யமுடியாது. போலவரம் திட்டம் தெலங்கானாவில் இல்லை. ஆந்திராவில் செயல்படுத்தப்படுகிறது. எந்த மாநிலத்தில் எந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்பது கூட தெரியாமல் பேசுகிறீர்கள்.*

*பா.ஜ.க எதற்கெடுத்தாலும் குடும்ப ஆட்சி என கூறுகிறது. இந்திய கிரிக்கெட் வாரியத்தின் தலைவராக ஜெய்ஷா இருக்கிறார். அவர் கிரிக்கெட் வீரரும் கிடையாது.*

*ஒரு கட்சியின் தலைவர். அமித்ஷா மகன் தான் அந்த பதவியில் இருக்கிறார். ஆந்திர பிரதேச மாநில பா.ஜ.க. தலைவர் புரந்தரேஸ்வரி என்.டி.ராமாராவ் மகள் தானே. அது உங்களுக்கு நினைவுக்கு வரவில்லையா?*

*ஜோதிராதித்ய சிந்தியாவை பா.ஜ.க. எப்படி ஒன்றியஅமைச்சராக்கியது?*

*தமிழகத்தில் தி.மு.க.வுடனும், மகாராஷ்டிராவில் சிவசேனாவுடனும் கூட்டணி வைத்தபோது அவை குடும்ப கட்சிகள் என்பது உங்களுக்கு தெரியாதா?. உங்களுக்கு தேவைப்பட்டால் வாரிசு அரசியலை விமர்சிப்பீங்க?. உங்களுக்கு வசதிப்பட்டால் வாரிசு அரசியலை ஏற்று கொள்வீர்களா?*

*இவ்வாறு, அவர் பேசினார். அண்ணாமலைக்கு கவிதா பதிலடி கொடுக்கும் வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.*

---

### உலகக் கோப்பை கிரிக்கெட்:

# பாகிஸ்தானை வீழ்த்தி இந்தியா அபார வெற்றி!

*அகமதாபாத், செப்.15-*

*உலகக்கோப்பை தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதின. முதலில் பேட்டிங் ஆடிய பாகிஸ்தான் அணி 42.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 191 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது.*

*பாகிஸ்தான் அணி தரப்பில் பாபர் அசாம் 50 ரன், ரிஸ்வான் 49 ரன் எடுத்தனர். இந்திய அணி தரப்பில் பும்ரா, சிராஜ், பாண்ட்யா, குல்தீப், ஜடேஜா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர். இதையடுத்து 192 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி களமிறங்கியது.*

*இந்திய அணி தரப்பில் தொடக்க ஆட்டக்காரர்களாக ரோகித், கில் களம் புகுந்தனர். இதில் கில் 16 ரன் எடுத்த நிலையிலும், அடுத்து வந்த கோலி 16 ரன்னிலும் அவுட் ஆகினர். இதையடுத்து ஸ்ரேயஸ் ஐயர் ரோகித்துடன் ஜோடி சேர்ந்தார். ரோகித் சர்மா அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.*

*சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட ரோகித் சர்மா 63 பந்தில் 86 ரன் எடுத்த நிலையில் அவுட் ஆனார். இதையடுத்து கே.எல். ராகுல் களம் இறங்கினார். இறுதியில் இந்திய அணி 30.3 ஓவரில் 3 விக்கெட்டை மட்டுமே இழந்து 192 ரன்கள் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.*

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நாச்சியார்கோவில் ஆர்.பாண்டுரெங்கன்

### அக்டோபர் 16 (2011)



**தஞ்சை மாவட்டத்தில் கழகம் துவங்கியபோது கும்பகோணம் பகுதியில் நூற்றுக்கணக்கான இளைஞர்களை இயக்கத்தில் சேர்த்த பெருமைக்குரியவர்.**

**கே.கே.நீலமேகம், மன்னை நாராயணசாமி, கோ.சி.மணி, குடந்தை பத்மநாபன் ஆகியோருடன் இணைந்து கழகப் பணியாற்றியவர்.**

**குடந்தை, நாச்சியார்கோவில் பகுதிகளில் பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரை அழைத்து பல பொதுக்கூட்டங்களை நடத்தியவர்.**

**கழகம் நடத்திய அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



பாராளுமன்ற தகவல் தொழில்நுட்ப நிலைக்குழு ஜார்க்கண்ட் தலைநகர் ராஞ்சியில் உள்ள ஜார்கண்ட் மாநில சட்டசபையில் தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்ப மேலாண்மை செயல்படுவது மற்றும் அரசு துறைகள், வங்கிகளில் செயல்படும் விதம் குறித்து ஆய்வை நிலைக்குழு தலைவரும் ஆம் ஆத்மி கட்சியின் முன்னணி தலைவருமான நாராயண தாஸ் குப்தா தலைமையில், கழக மாநிலங்களவை உறுப்பினர் இரா.கிரிராஜன் உள்ளிட்ட பாராளுமன்ற நிலைக்குழு உறுப்பினர்கள் ஜார்கண்ட் மாநில சட்டமன்ற செயலாளர், மாநில தகவல் தொழில்நுட்ப துறை அதிகாரிகள் மற்றும் பல்வேறு வங்கிகளின் உயர் அதிகாரிகளுடனான கலந்தாய்வு செய்து, ஜார்கண்ட் மாநில சட்ட சபையை பார்வையிட்டு சபாநாயகர் ரபீந்திரநாத் மகாதூ அவர்களை நேரில் சந்தித்தும் கலந்துரையாடினர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டமும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவும் திருவொற்றியூர் மத்திய பகுதி சார்பில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி அவர்களின் வழிகாட்டுதலின்படி சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ் சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் திருவொற்றியூர் மத்திய பகுதி செயலாளர் – இரண்டாவது மண்டல குழு தலைவர் ஏ. வி. ஆறுமுகம் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் கழக அமைப்பு செயலாளரும் மாநிலங்களவை முன்னாள் உறுப்பினருமான ஆலந்தூர் ஆர். எஸ். பாரதி கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் கலாநிதி வீராசாமி எம்.பி., கே. பி. சங்கர் எம்.எல்.ஏ., வா. முத்துசாமி, சாலை டி. கணேசன், மு. செல்வம், மற்றும் பல நிர்வாகிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### நெல்லை மாவட்டத்தில் - முன்னோடிகளுக்குப் பொற்கிழி - அரசு நிகழ்ச்சிகள் - இளைஞரணி செயல்வீரர் கூட்டங்கள்!

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்கும் நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்கள்!

## நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் ஆய்வு! இரா.ஆவுடையப்பன் - டி.பி.எம்.மைதீன்கான் முன்னிலை!

நெல்லை, அக்.16-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகிற 26.10.2023 வியாழன் அன்று நெல்லை மாவட்டத்தில் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கிடவும், இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்தில் பங்கேற்று சிறப்பிக்கவும் உள்ளதை முன்னிட்டு அதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்களை நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் ஆகியோர் முன்னிலையில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் சென்று பார்வையிட்டார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்டம் தோறும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குதல், இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம் மற்றும் அரசு ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்று நலத்திட்ட உதவிகள் வழங்குதல் போன்ற நிகழ்வுகளில் கலந்து வருகிறார்.

தூத்துக்குடி, தென்காசி மாவட்டத்தில் சுற்றுப்பயணத்தை முடித்த நிலையில் வருகிற 26.10.2023 வியாழன் அன்று நெல்லை மாவட்டத்திற்கு வருகை தருகிறார்கள்.

அதன்படி ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டத்தின் சார்பில் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குதல்,கழக இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம்,அரசு நிகழ்வு போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நெல்லைக்கு வருவதை முன்னிட்டு நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் ஆகியோர் சிறப்பாக செய்து வருகின்றனர்.

பாளையங்கோட்டை கே.டி.சி.நகரில் உள்ள மாதா மாளிகையில் மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சியும், அதனை தொடர்ந்து கே.டி.சி நகர் மேம்பாலம் பகுதியில் உள்ள திறந்தவெளி மைதானத்தில் இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம் மேடை அரங்கு அமைக்கப்பட்டுவரும் இடங்களை நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன் கான்,பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் என். மாலைராஜா,மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், மாவட்ட அவைத் தலைவர் மா.கிரகாம்பெல், மாநகரச் செயலாளர் சு.சுப்பிர மணியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கண்ணன், பரமசிவ ஐயப்பன், மேயர் பி.எம். சரவணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு, மாவட்ட துணைச் செயலாளர்கள் சுரேஷ், தர்மன், அப்துல் கையூம், மாவட்டப் பொருளாளர் அண்ணாதுரை, ஒன்றிய செயலாளர்கள் முருகன், செல்வ கருணாநிதி, சுடலைக்கண்ணு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் ஜான்ரபீந்தர், வில்சன் மணித்துரை, கருப்பசாமி கோட்டையப்பன், மாவட்ட அணி அமைப்பாளர் வழக்கறிஞர் அணி செல்வசூடாமணி, தொண்டர் அணி தொப்பி மைதீன், ஆதிதிராவிடர் நலக்குழு நவநீதன், பொறியாளர் அணி சுரேந்தர், நெசவாளர் அணி ஸ்டீபன், விவசாய அணி முருகன், துணை அமைப்பாளர்கள் இளைஞர் அணி மீரான்மைதீன், அலிஃப்மீரான்,

நெசவாளர் அணி சங்கரலிங்கம், பகுதி செயலாளர்கள் பாளை அன்டன் செல்லதுரை, நெல்லை நமச்சிவாயம், ரத்தினபாலா, மணிகண்டன், அருண்குமார், சுப்ரீத் சுப்பிரமணியன், சங்கரன்கோவில் சங்கரநாராயணசாமி கோவில் அறங்காவலர் குழு உறுப்பினர் வழக்கறிஞர் து.சண்முகையா உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

### தகவல் தொழில் நுட்ப - டிஜிட்டல் சேவைகள் சார்பில்

# தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி - ஸ்மார்ட் மாவட்ட நிர்வாகம்!

## அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் கடிதம்!

சென்னை, அக். 16 -

ஐக்கிய முடியரசின் முன்னணி தொழில்நுட்ப திட்டத்தின் ஒரு பகுதியாக, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையால் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஸ்மார்ட் மாவட்ட நிர்வாகம்' என்ற திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. ஐக்கிய முடியரசு தொழில்நுட்ப உதவியை வழங்க உத்தேசித்துள்ளது. தமிழ்நாடு அரசின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் அமைச்சர் டாக்டர் பழனிவேல் தியாக ராஜன் மற்றும் ஐக்கிய முடியரசின் இந்தோ பசிபிக், வெளியுறவு, காமன்வெல்த் மற்றும் மேம்பாட்டு அமைச்சர் மாண்புமிகு அனி மேரி டிரவேல்யன் ஆகியோர் முன்னிலையில், கொள்கை ரீதியான ஒத்துழைப்பு கடிதம் 14.10.2023 அன்று தமிழ்நாடு அரசின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சரின் முகாம் அலுவலகத்தில் பரிமாறப்பட்டது.

இந்நிகழ்வில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மைச் செயலாளர் திரு. தீரஜ் குமார், இ.ஆ.ப., பிரிட்டிஷ் துணை உயர் ஆணையர் ஆலிவர் பால் ஹாட்செட் MBE., மின்ஆளுமை இயக்குநர்/ தமிழ்நாடு மின்ஆளுமை முகமையின் தலைமை செயல் அலுவலர் பிரவீன் பி நாயர், தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மை தொழில்நுட்ப அலுவலர்ராபர்ட் ரவி, அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாவட்ட நிர்வாகங்கள் எதிர்கொள்ளும் சவால்களில் ஒன்று எரிசக்தி, நீர் மற்றும் கழிவுகள் உள்ளிட்ட வளங்களை திறமையாக மேலாண்மை செய்வது ஆகும். வழக்கமான முறைகளில் இதை கண்காணிப்பது அதிக நேரத்தை எடுத்துக் கொள்வதுடன் திறனற்றதாகவும், வள விரயம் மற்றும் அதிக செலவுகளுக்கும் வழிவகுக்கும். தொழில்நுட்பத்தின் முன்னேற்றங்கள், குறிப்பாக பயனுள்ள கண்காணிப்பு மற்றும் நேரடியான மூல தரவு கிடைப்பது, நகரங்கள் மற்றும் கிராமங்களில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதில் தரவு சார்ந்த முடிவெடுக்க உதவும். ஒரு மாவட்டத்தில் அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளையும் டிஜிட்டல் மயமாக்குவது, புதுமைகளை உந்துதல், வேலை வாய்ப்புகளைத் தூண்டுதல் மற்றும் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுதல் போன்ற பலன்களையும் செயல்திறனையும் தருகிறது.

இந்த சூழலில், மாவட்ட நிர்வாகங்கள் எதிர்கொள்ளும் இத்தகைய சவால்களை குறிப்பிடத்தக்க வகையில் எதிர்கொள்ளக்கூடிய ஒரு முக்கிய தொழில்நுட்பமாக இன்டர்நெட் ஆஃப் திங்ஸ் (IoT) வெளிப்படுகிறது. IoT தொழில்நுட்பத்தின் அடிப்படையில், ஆற்றல் பயன்பாடு, நீர் நுகர்வு, கழிவு மேலாண்மை மற்றும் பிற முக்கிய குறிகாட்டிகள் பற்றிய நிகழ்நேர தரவுகளை சேகரிக்க, மாவட்டம் முழுவதும் சென்சார்கள் அமைக்கலாம். பெறப்படும் தரவை இயந்திரக் கற்றல் வழிமுறைகளைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்து, வடிவங்கள் மற்றும் போக்குகளை அடையாளம் காண முடியும், மேலும் மாவட்ட அலுவலர்கள் வள ஒதுக்கீடு மற்றும் மேலாண்மை பற்றி மேலும் தகவலறிந்த முடிவுகளை எடுக்க முடியும். வள மேலாண்மைக்கு அப்பால், IoT பொது பாதுகாப்பை மேம்படுத்தும்.



மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மன்னை நகரப்பகுதிகளில் வார்டு,கிளைச் செயலாளர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. தொகுதி பொறுப்பாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் துரை. கி.சரவணன் பங்கேற்று ஆலோசனைகளை வழங்கினார். அவைத் தலைவர் தா. முருகன், நகர கழக செயலாளர் வீரா கணேசன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன், நகர்மன்ற தலைவர் மன்னை.த. சோழராஜன், மாவட்ட பிரதி நிதி உத்தமன், முன்னாள் நகர செயலாளர் ராஜ பூபாலன் ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.

### சென்னை – புறநகர் பகுதிகளில்

# சாலைகள் சீரமைப்புப் பணிகள் குறித்த கூட்டம்!

## சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது!

சென்னை, அக். 16-

அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப்பணிகளின் நிலை குறித்தும், சாலை வெட்டுக்களை சீரமைக்கும் பணிகள் குறித்தும், மழைநீர் வடிகால் பணிகள் குறித்து ஆய்வு கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, கூடுதல் தலைமைச் செயலாளர், நீர்வளத்துறை, முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மேலாண்மை இயக்குநர், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், உறுப்பினர் செயலாளர், பெருநகர வளர்ச்சிக் குழுமம், நிர்வாக இயக்குநர், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், இயக்குநர், பேரிடர் மேலாண்மை, செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, இணை மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், பெருநகர சென்னை மாநகராட்சியின் இணை ஆணையர் (பணிகள்), கூடுதல் மாநகர காவல் ஆணையர் (போக்குவரத்து) மற்றும் வட்டார துணை ஆணையர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பல்வேறு துறைகளின் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தலைமைச் செயலாளர் அவர்கள் மண்டலம் வாரியாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நான்காவது ஆய்வுக் கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் சாலைப்பணிகள் குறித்தும் ஆய்வு செய்தார்கள்.

இக்கூட்டத்தில், போக்குவரத்து காவல்துறையிடம் மேடவாக்கம் சோழிங்கநல்லூர், மணப்பாக்கம் கொளப்பாக்கம் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளுக்கு உடனடியாக அனுமதி அளிக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்கள் இதுவரை 96 சதவிகித மழைநீர் வடிகால் பணிகள் முடிக்கப்பட்டுள்ளதென்றும் மீதமுள்ள பணிகள் 20.10.2023க்குள் முடிக்கப்படும் என தெரிவித்தார்கள்.

தலைமைச் செயலாளர் அவர்கள் மண்டலம்4 முதல் மண்டலம்13 வரை உள்ள 25 தெருக்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளை 20.10.2023க்குள் முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள். கொசஸ்தலையாறு வடிநில பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகளில் 8 இடங்களில் இணைப்பு செய்ய வேண்டிய மழைநீர் வடிகால் பணிகளை 20.10.2023க்குள் முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

இணை ஆணையர் (பணிகள்), பெருநகர சென்னை மாநகராட்சி அவர்கள் கோவலம் வடிநில பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகளில் 20 இடங்களில் இணைப்பு செய்ய வேண்டிய மழைநீர் வடிகால் பணிகளில்

17 இடங்களில் மின் கம்பங்கள் அகற்றி பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவித்தார்கள். தலைமைச் செயலாளர் அவர்கள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திடம் இந்த 17 இடங்களை கள ஆய்வு செய்து இரண்டு நாட்களுக்குள் மின் கம்பங்களை அகற்றித்தருமாறும், பெருநகர சென்னை மாநகராட்சி இந்த 17 இடங்களிலும் மழைநீர் வடிகால் பணிகளை 20.10.2023க்குள் முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள். மேலும், மழைநீர் வடிகால் பணிகள் முடிக்கப்பட்ட இடங்களில் Silt Catch Pit அமைக்கும் பணி, construction debri அகற்றும் பணி, சாலை வெட்டு சீரமைக்கும் பணிகளை 20.10.2023க்குள் முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

நீர்வள ஆதார துறை, அனை ஏரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிக்காக நிலம் கையகப்படுத்தும் பணியினை விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள். மேடவாக்கம் பிரதான சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணியில் அதிக திறன் கொண்ட மோட்டார் பம்புகள் நான்கு இடங்களில் மழைநீர் அகற்ற தயார் நிலையில் வைக்குமாறு அறிவுறுத்தினார்கள். கூடுதல் தலைமைச் செயலாளர், நீர்வள துறை அவர்கள் 9 இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் shutter அமைக்கும் பணிகளில் 4 இடங்களில் பணி முடிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்கள். தலைமைச் செயலாளர் அவர்கள் மீதமுள்ள 5 இடங்களில் shutter அமைக்கும் பணிகளை விரைவில் முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

நெடுஞ்சாலைகள் துறை, ஈ.வெ.ரா பெரியார் சாலை, அண்ணா சாலை. டைடல் பார்க் அருகில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளில் விபத்து ஏற்படாத வண்ணம் இருக்க சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட் அமைத்துள்ள தடுப்பரன் (barricading) போன்று அமைக்குமாறு அறிவுறுத்தினார்கள். மழைநீர் வடிகால்களில் மழைநீர் செல்ல போதிய inlet அமைக்குமாறு அறிவுறுத்தினார்கள். நடைபாதைகளில் kerbனை இடைவெளி இல்லாமல் சீராக அமைக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

இணை ஆணையர் (பணிகள்), பெருநகர சென்னை மாநகராட்சி அவர்கள் 07.10.2023 அன்று நடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கேற்ப சாலைவெட்டு சீரமைக்கும் பணிகளில் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து தலைமைச் செயலாளர் அவர்களுக்கு விவரித்தார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் கே.கே. நகர் அண்ணா பிரதான சாலை, நெடுஞ்செழியன் சாலை, பாடசாலை, மணலி சின்னசேக்காடு, மாதவரம், முகலிவாக்கம், வளசரவாக்கம், இராமாபுரம், மணப்பாக்கம் மற்றும் மடிப்பாக்கம் பகுதிகளில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் பணிகள் முடிக்கப்பட்ட சாலைகளில் நிரந்தர சாலை வெட்டு சீரமைப்பு பணிகள், தற்காலிக சாலை வெட்டு சீரமைப்புப்பணி களையும் அனைத்தும் 20.10.2023க்குள் முடிக்க தலைமைச் செயலாளர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

நெடுஞ்சாலைத்துறை, அண்ணா சாலை, ஜி.எஸ்.டி சாலை, ஈ.வெ.ரா. பெரியார் சாலை, 100 அடி சாலை, மேடவாக்கம் பிரதான சாலை, வேளச்சேரிதாம்பரம் சாலை, மர்மலாங் பாலம் இரும்புலியர் சாலை, வளசரவாக்கம் வள்ளுவர் நகர் சாலை, எருக்கஞ்சேரி சாலை, மேடவாக்கம் மாம்பாக்கம் சாலை, வானகரம் அம்பத்தூர் புழல் சாலை ஆகிய சாலைகளில் மேற்கொண்டு வரும் சாலை வெட்டு மற்றும் சீரமைப்புப்பணிகளை 20.10.2023க்குள் விரைந்து முடிக்கு மாறு அறிவுறுத்தினார்கள்.

தாம்பரம் மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் ராதா நகர் சுரங்க பாதை மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளையும் 20.10.2023க்குள் முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

ஆவடி மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து மழைநீர் வடிகால் பணிகளையும் 20.10.2023க்குள் முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் அருகில் ஜி.எஸ்.டி சாலை மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணி 50 சதவீதம் முடிக்கப்பட்டுள்ளது என்றும், மீதமுள்ள பணிகளை விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

இறுதியாக வடகிழக்கு பருவமழை 23.10.2023 25.10.2023ல் துவங்குவதாக வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளதாகவும், அதன் பொருட்டு நடைபெற்று வரும் அனைத்து பணிகளையும் தற்காலிகமாக முடித்துக் கொள்ள வேண்டும். புதிய சாலை வெட்டுப் பணிகள் மேற்கொள்ளக்கூடாது என்று அறிவுறுத்தினார்கள். மழைநீர் வடிகால்களில் தூர்வாரும் பணிகளையும் முழுமையாக முடிக்க வேண்டும். Silt catch pitகளில் மண், கான்கிரீட் கலவைகள் மற்றும் தார் கலவைகள் ஏதேனும் இருப்பின் உடனடியாக அகற்றப்பட வேண்டும். சுரங்கப்பாதை களில் மோட்டார் பம்புகள் அனைத்தும் சரியாக இயங்குவதை உறுதிபடுத்த வேண்டும். மேலும், தண்ணீர் தேங்கியுள்ள அளவுகோல் நுழைவுகளிலேயே பொறுத்தப்பட வேண்டும். மரக்கிளைகள் கழிக்கப்பட வேண்டும். அனைத்து துறைகளின் சாலை வெட்டுக்கள் உடனடியாக சீர் செய்யப்பட்டு வாகனங்கள் சிரமமின்றி விபத்தில்லாமல் பயணிக்க உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, வாக்குச் சாவடி பாகமுகர்கள் (பி.எல்.ஏ.2) வாக்குச் சாவடி பாக உறுப்பினர்கள் (பிஎல்சி) பணிகள் குறித்து திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்முடிப்பூண்டி தொகுதி ஒன்றிய பேரூர் செயலாளகள், நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளரும், கும்முடிப்பூண்டி சடடமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் முன்னிலையில் கும்முடிப்பூண்டி தொகுதி பொறுப்பாளரும், கழக செய்தி தொடர்பு துணைத் தலைவர் பி.டி.அரசகுமார். பங்கேற்று, வாக்குச் சாவடி பாக முகவர்கள் செயல்பாடுகள் குறித்து கருத்துக்களை வழங்கினார். கூட்டத்;தில் ஜெ.மூர்த்தி, எஸ்.ரமேஷ், சி.எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், வெ.அன்புவாணன், பி.வெங்கடாசலபதி, ஏ.வி.ராமமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் மு.மணிபாலன், டி.கே.சந்திரசேகர், ஆ.சத்தியவேலு, ந.பரிமளம், ஜான் (எ) பொன்னுசாமி, இரா.அறிவழகன், அமைப்பாளர்கள் கே.வி.லோகேஷ், மு. பாஸ்கரன், டி.மணி, கே.ஆறுமுகம், கோல்டுமணி, ஜி.ரமேஷ், ஜெயலலிதாசசிதரன், வில்சன் நிலவழகன், சி.சுமன், க.சம்பத் மாணவரணி டி.ஜெ.ஜி.தமிழரசன் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.


கலைஞர்
100
1924 - 2023
நாள் : 16.10.2023. திங்கட்கிழமை
நேரம் : காலை 10.00 மணி முதல்
மாலை. 4.00 மணி வரை
இடம் : அண்ணா நூற்றாண்டு நூலகம்,
கோட்டூர்புரம், சென்னை 25.
வெளிநாட்டு வேலைவாய்ப்பு பற்றிய
விழிப்புணர்வு நிகழ்ச்சி
...தலைமை...
மாண்புமிகு செஞ்சி K.S.மஸ்தான்
சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்
மாவட்ட கழக செயலாளர்
...முன்னிலை...
மாண்புமிகு மா. சுப்பிரமணியன்
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
நிகழ்ச்சியை தொடங்கி வைப்பவர்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கழக இளைஞர் அணி செயலாளர்
மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள்
...வாழ்த்துரை...
முனைவர் தமிழச்சி தங்கப்பாண்டியன்
தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
திருமதி. R.பிரியா ராஜன்
சென்னை மாநகராட்சி மேயர்
திரு. M.மகேஷ்குமார்
சென்னை மாநகராட்சி துணை மேயர்
இங்ஙனம்
அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் மற்றும்
தமிழ்நாடு செவிலியர் குழுமம்.


வணிகவரித்துறை - சமாதானத் திட்டம்.
கலைஞர் 100 1924 - 2023
தொடக்க நாள்: 16-10-2023
இதுவரை தமிழக வரலாற்றிலேயே இல்லாத அளவிலான சலுகைகளுடன் கூடிய சமாதானத் திட்டம் நமது வணிகர்களுக்கான முத்தான திட்டம்.
ஒரு மதிப்பீட்டு ஆண்டில் ரூபாய் ஐம்பதாயிரத்திற்கு குறைவாக வரி, அதற்கான வட்டி மற்றும் அபராதம் நிலுவையில் உள்ள 95,000 எளிய வணிகர்களுக்கு மொத்தத் தொகையும் முழுமையாக தள்ளுபடி.
வரி நிலுவைக்காக பிணைக்கப்பட்டிருக்கும் வணிகர்களது 1002 அசையா சொத்துக்கள் திட்டத்தின் முதல் நாளே பிணைப்பில் இருந்து விடுவிப்பு.
47,067 வணிகர்களின் 13,362 கோடி ரூபாய் வரி, வட்டி, அபராதம் ஆகியவை நிலுவைக் கணக்கிலிருந்து நேரடித் தள்ளுபடி. சலுகைகளுடன் மீதித் தொகையை செலுத்தி நீண்டநாள் நிலுவையில் இருந்து வெளியே வரலாம்.
சமாதானத் திட்டம் நடைமுறையில் இருக்கும் 16.10.2023 முதல் 15.2.2024 வரையிலான காலம் நமது வணிகர்களுக்கு நல்வாய்ப்பு காலம்.
வணிகர் சங்கங்களின் மாநாடு, திருச்சி
தமிழ்நாடு வரலாற்றில் முதன்முறையாக வணிகர்களின் நலத்திற்காக இதுவரை இல்லாத அளவிற்கு பல சலுகைகளை வாரி வழங்கிய
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி! நன்றி!! நன்றி!!!
பி.மூர்த்தி
வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்
மதுரை வடக்கு மாவட்ட செயலாளர்


ரூ.7000 கோடி
தள்ளுபடி கேட்ட
விவசாயிகள்
சர்வத்தையும் விட்டு
நிர்வாணமாக நின்ற போதும்
கர்வத்தோடு இருந்தோர் மத்தியில்
ஓடி ஆடி காலடி தேய,
உழைப்பவரடி ஓய்வு தேடிட
வணிக வரி, வட்டி, அபராதத் தொகை
என முழு தொகையாக
95,502 வர்த்தகர்கள் உள்பட
1,42,569 குடும்பங்களுக்கு
இந்தியாவிலே முதன்முறையாக
ரூ.20,000 கோடி தள்ளுபடி தந்து
வணிகத்தையும்
வர்த்தகர்களையும் உயர்த்திட்ட
திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
முத்துவேல்
கருணாநிதி
ஸ்டாலின்
அவர்களின் பொன்னடிக்கு
வர்த்தகர்களின் நன்றி கலந்த
வணக்கம் கோடானகோடி...
South digital
9840100489
கவிஞர் காசி.முத்துமாணிக்கம் - செயலாளர்
தி.மு.கழக வர்த்தகர் அணி







இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (15/10/2023) செங்கல்பட்டு மாவட்டம், கிழக்கு கடற்கரை சாலை, உத்தண்டி அருகே கானாத்தூர் ரெட்டிக்குப்பத்தில் (மாயாஜால்முன்புறம்) நடைபெற்ற,ஹெச். சி. எல் நிறுவனம் , தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் இந்திய சைக்கிள் ஓட்டுதல் சம்மேளனம் இணைந்து நடத்திய மாபெரும் சைக்ளோத்தன் போட்டியினை(HCL, SDAT & CFI) குறு,சிறு மற்றும் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்கள் முன்னிலையில் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் ஜே மேகநாத ரெட்டி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆ.ர. ராகுல்நாத் தாம்பரம் காவல் துணை ஆணையர் பவன்குமார் ரெட்டி, தாம்பரம் இணை ஆணையர் மூர்த்தி, ஹெச்.சி. எல் நிறுவனத் தலைவர் (வியூகம்), சுந்தர் மகாலிங்கம், அரசு அலுவலர்கள்மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (15/10/2023) செங்கல்பட்டு மாவட்டம், கிழக்கு கடற்கரை சாலை, உத்தண்டி அருகே கானாத்தூர் ரெட்டிக்குப்பத்தில் (மாயாஜால்முன்புறம்) நடைபெற்ற,ஹெச். சி. எல் நிறுவனம் , தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் இந்திய சைக்கிள் ஓட்டுதல் சம்மேளனம் இணைந்து நடத்திய மாபெரும் சைக்ளோத்தன் போட்டியினை(HCL, SDAT & CFI) குறு,சிறு மற்றும் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்கள் முன்னிலையில் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் ஜே மேகநாத ரெட்டி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆ.ர. ராகுல்நாத் தாம்பரம் காவல் துணை ஆணையர் பவன்குமார் ரெட்டி இ.கா.ப., தாம்பரம் இணை ஆணையர் மூர்த்தி, ஹெச்.சி. எல் நிறுவனத் தலைவர் (வியூகம்), சுந்தர் மகாலிங்கம், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உற்சாகத்துடன் கலந்துகொண்டனர்.

# பெரம்பலூர் மாவட்ட மருத்துவ அணி சார்பில் மாபெரும் ரத்ததான முகாம்!

## ஆ.இராசா எம்.பி.துவக்கி வைக்கிறார்! குன்னம் சி.இராஜேந்திரன் பங்கேற்பு

பெரம்பலூர், அக்.16-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, பெரம்பலூர் மாவட்ட மருத்துவ அணி சார்பில், ரத்ததான முகாம் நடத்தி அதன் மூலம் பெறப்படும் 100 யூனிட் ரத்தம் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இந்த ரத்ததான முகாமை கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., துவக்கி வைக்கிறார்.

இது குறித்து மாவட்டச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 100 யூனிட் ரத்தம் பெற்று பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனைக்கு வழங்கப்படுகிறது. 18.10.2023, (புதன்கிழமை ) அன்று காலை 9.00 மணியளவில், பெரம்பலூர் மாவட்ட மருத்துவ அணி சார்பில் 100 யூனிட் ரத்தம் பெறும் ரத்தான முகாம், பெரம்பலூர் பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது. இந்த ரத்ததான முகாமை கழக துணைப் பொதுச்செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி., துவக்கி வைக்கிறார். இந்த ரத்ததான முகாமில் பெறப்படும் 100 யூனிட் ரத்தம் பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனைக்கு வழங்கப்படுகிறது.

இதில் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர். மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன் இவ்வாறு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மாவட்டச் செயலாளர் இல.பத்மநாதன் தலைமை!

# திருப்பூர் தெற்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான நேர்காணல்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பங்கேற்பு!

திருப்பூர், அக்.16-

திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழகத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நேர்காணல் 16.10.2023 திங்கட்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் திருப்பூர், தாராபுரம் சாலை, பலவஞ்சிபாளையத்தில் அமைந்துள்ள திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கில் மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன் ஆகிய எனது தலைமையில், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் முன்னிலையில் நடைபெற உள்ளது. அப்போது கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ.சாமிநாதன் கலந்து கொண்டு நேர்காணலை துவக்கி வைக்க உள்ளார்.

எனவே திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு. கழகத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி தோழர்கள் ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மட்டும் வெண் சீருடையுடன் தங்கள் வயதை நிரூபிப்பதற்கான கல்விச் சான்றிதழ், ஆதார் அட்டை, கழக உறுப்பினர் அட்டை, இளைஞர் அணி போன்ற கழக அமைப்புகளில் ஏற்கனவே பணியாற்றியிருந்தால் அது தொடர்பான புகைப்படத் தொகுப்பு மற்றும் ஆவணங்களை கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறேன். மாவட்டச் செயலாளர் இல.பத்மநாதன் கேட்டுக் கொண்டுள்ளார்.

### அம்பத்தூர் மற்றும் கொரட்டூர்

# ஏரிகளைத் தூய்மைப்படுத்தி படகுக் குழாம் அமைத்திடுக!

## பேரவையில் ஜோசப் சாமுவேல் கோரிக்கை!

**சென்னை, அக்.14–**

**சட்டப்பேரவையில் அம்பத்தூர் தொகுதி உறுப்பினர் ஜோசப் சாமுவேல், அம்பத்தூர் மற்றும் கொரட்டூர் ஏரிகளைத் தூய்மைப்படுத்தி படகுக் குழாம் அமைக்க அரசு முன்வருமா என்று கேள்வி எழுப்பினார்.**

இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**ஜோசப் சாமுவேல்:** அம்பத்தூர் மற்றும் கொரட்டூர் ஏரிகளைத் தூய்மைப்படுத்தி படகு குழாம் அமைக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் கா. ராமச்சந்திரன்:** அம்பத்தூர் தொகுதிக்குட்பட்ட அம்பத்தூர் மற்றும் கொரட்டூர் ஏரிகள் சென்னை மாநகர மக்களின் குடிநீர் ஆதாரமாக பயன்பட்டு வருகின்றன. இந்த ஏரிகளில் ஆழம் குறைவாக உள்ளது. ஏரிகளின் நீர்மட்டம் ஆண்டு முழுவதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஆகையால், இங்கே படகு குழாம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை என்பதனை உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஜோசப் சாமுவேல்:** 'உங்கள் தொகுதியில் முதல்வர்' திட்டத்தின் மூலமாக அம்பத்தூர் தொழிற்பேட்டை மேனாம்பேடு பகுதிகளில் மின் நிலையம் அமைக்கவும், மேம்படுத்தவும், அதேபோல தொகுதி முழுவதும் புதை மின்வடக் கம்பிகள் அமைக்கவும், அம்பத்தூர் OT பகுதி வரை metro rail போக்குவரத்தை விரிவுபடுத்தவும் மற்றும் சென்னை பாடி முதல் திருநின்றவூர் வரை சாலையை விரிவுபடுத்தவும் இரயில்வே மேம்பாலம் அமைக்கவும் சுமார் 1,824.30 கோடி ரூபாய் ஒதுக்கி, பணிகளை எடுத்துக்கொள்ள உத்தரவிட்ட முதலமைச்சர் அவர்களுக்கும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அம்பத்தூர் ஏரி மற்றும் கொரட்டூர் ஏரிகளை தூய்மைப்படுத்தி படகு குழாம் அமைக்க மறு பரிசீலனை செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் சென்னை மக்களுக்கு குடிநீர் தேவைக்காக அந்த ஏரியைப் பயன்படுத்துவதாகக் குறிப்பிட்டிருக்கின்றார். குடிநீர் போக்குவரத்திற்காக அந்தப் பகுதியில் இருக்கின்ற புழல் ஏரியில்தான் நீர் தேக்கப்படுகின்றது.

இந்தப் பகுதியில் உள்ள இரண்டு ஏரிகளும் எந்த வித பயன்பாட்டுக்கும் இல்லாத அளவில் இருக்கின்றன. அதேபோல ஏரியின் ஆழம் குறைவாக உள்ளது என்று குறிப்பிட்டிருக்கின்றீர்கள்.

அரசாணை எண் 290, பொதுப்பணித் துறை, 23. 11.2020ல் ரூ.23 கோடிக்கு அந்த ஏரியை ஆழப்படுத்துவதாக அறிவித்துள்ளது. அதன் மூலமாக, ஏரியை ஆழப்படுத்தி, தண்ணீர் நிரப்பி சுற்றுலா சேவை செய்ய மறுபரிசீலனை செய்ய முடியுமா?

**அமைச்சர் கா. ராமச்சந்திரன்:** அம்பத்தூர் தொகுதிக்குட்பட்ட அம்பத்தூர் மற்றும் கொரட்டூர் ஏரிகள் நீர்வளத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. இந்த ஏரிகளை மாசுபடாமல் பாதுகாப்பது குறித்து தேசிய பசுமைத் தீர்ப்பாய வழக்குகளின் வழிகாட்டுதலின்படி, நீர்வளத் துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, அம்பத்தூர் மற்றும் கொரட்டூர் ஏரிகளில் படகு குழாம் அமைப்பது குறித்து நீர்வளத் துறையின் தடையின்மைச் சான்று பெறப்படுமாயின், அங்கு படகு குழாம் அமைப்பது குறித்து துறை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஜோசப் சாமுவேல்:** நன்றி. இரண்டு ஏரிகளுக்கு நடுவிலே முடியாத பட்சத்தில், அங்கு பறவைகள் சரணாலயம் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் கா. ராமச்சந்திரன்:** இல்லை. பறவைச் சரணாலயம் அமைப்பது என்பது Forest Departmentல்தான் முடிவு எடுப்பார்கள். வனத்துறையின் கட்டுப்பாட்டில்தான் அவர்கள் இருப்பார்கள். அது முடிந்த பிறகு, சுற்றுலாத் துறையின் மூலம் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



நீலகிரி மாவட்டம், உதகை ஊராட்சி ஒன்றியம், மேல்குந்தா ஊராட்சி, அப்பட்டியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ், ரூ.5.70 இலட்சம் மதிப்பில் நடைப்பாதையுடன் கழிவுநீர் கால்வாய் மற்றும் உறிஞ்சிக்குழி அமைக்கப்பட்டதை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், நேற்று முன்தினம் (14.10.2023) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதிமு.அருணா மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மரு. உமாமகேஷ்வரி உட்பட பலர் உள்ளனர்.

### காரைக்குடி நகரில்

# ரூபாய் 4.4 கோடியில் எல்.இ.டி.தெரு விளக்குகள்!

## நகர்மன்றத் தலைவர் எஸ்.முத்துத்துரை தகவல்!

சிவகங்கை. அக். 16-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி பெருநகராட்சி யில் 36 வார்டுகள் உள்ளன. 36 வார்டுகளில் உள்ள பல்புகள் மாற்றப்பட்டு ரூபாய் 3 கோடியே 94 லட்சத்தில் 4200 எல்.இ.டி. விளக்குகள் புதிதாக பொருத்தப்பட உள்ளது.இதற்கான நிதியினை முதல்வர் அனுமதி வழங்கியுள்ளார்.எல்.இ.டி.பல்புகள் அமைக்கும் பணியினை காரைக்குடி நகர்மன்றத் தலைவர் எஸ். முத்து துரை துவக்கி வைத்து பேசினார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக காரைக்குடி பெருநகருக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்கள் பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து அப்பணிகள் நடைபெற்று வருகின்றது. தற்பொழுது 3 கோடியே 94 லட்சத்தில் புதிதாக 4200 எல். இ. டி பல்புகள் அமைக்கப்பட உள்ளது. இந்த விளக்குகள் 36 வார்டுகளில் அமைக்கப்படும். அது தவிர ரூபாய் 44 லட்சத்து 42 ஆயிரத்து600 செலவில் கூடுதலாக 600 புதிய தெரு விளக்குகளும் அமைக்கப்படும்.

பல்வேறு திட்டப்பணிகள் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர் பெரிய கருப்பன் முயற்சியுடன் காரைக்குடி நகரில் நடைபெற்று வருகிறது.

விரைவில் காரைக்குடி மாநகராட்சியாக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட உள்ளது. இது தொடர்பாக முதல்வரிடமும், அமைச்சர் கே.என்.நேருவிடமும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் உதவியுடன் கோரிக்கை மனு தரப்பட்டுள்ளது. அம்மனு முதல்வரின் தீவிர பரிசீலனையில் உள்ளது . நகரில் நடைபெற்று வரும் திட்டப் பணிகள் விரைவில் முடிவடையும். இதனால் காரைக்குடி நகரம் மேலும் வளர்ச்சி அடையும்.

இவ்வாறு நகர்மன்ற தலைவர் சே.முத்துத்துரை பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் நகர் மன்ற துணைத் தலைவர் என். குணசேகரன், நகர் மன்ற உறுப்பினர்கள் சொ.கண்ணன், மெய்யர், கார்த்திகேயன், பொறியாளர் மைக்கேல், ஹரிதாஸ், பூமிநாதன், தெய்வானை இளமாறன், ஹேமலதா செந்தில், கலா காசிநாதன், சாந்தி, மங்கையர்க்கரசி, பாலு, நாச்சம்மை முகமது சித்திக், திவ்யா சக்தி, மற்றும் மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் காரை .சுரேஷ், சன். சுப் பையா,உதவியாளர் பாண்டி, மற்றும் நகராட்சி அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டார்கள்.






ஈரோடு வடக்கு மாவட்ட தி.மு.க ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி பொறுப்புகளுக்கான நேர்காணல் கோபி கரட்டடிபாளையத்தில் உள்ள தனியார் மண்டபத்தில் கழக இளைஞர் அணி துணை செயலாளர்கள் பி.எஸ்.சீனிவாசன், சி.ஆனந்த குமார், எஸ்.ஜேயால்,இன்பா ஏ.என்.ரகு நா.இளையராஜா, ப.அப்துல் மாலிக், கே.இ.பிரகாஷ்,க.பிரபு,பிரதீப்ராஜா ஆகியோர் முன்னிலை ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் வடக்கு மாவட்ட கழக இளைஞரணி அமைப்பாளர் திருவேங்கடம் ஏற்பாட்டில் நேர்காணல் நிகழ்ச்சி நடைபெற்றது. அதுபோது கோபிசெட்டிபாளையம் நகர செயலாளர் என்.ஆர்.நாகராஜ்,கழக நெசவாளர் அணி செயலாளர் சிந்து ரவிச்சந்திரன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் சிறுவலூர் எஸ்.எஸ்.வெள்ளிங்கிரி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்ட மருத்துவ அணி சார்பில் கீழ்வேளூர் ஒன்றியம் தேவூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவ உபகரணங்களை மருத்துவ மனை மருத்துவரிடம் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் வழங்கினார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.கோவிந்தராசன், கீழ்வேளூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் கே.பழனியப்பன், ஒன்றியக் குழு உறுப்பினர் கே.கே.கண்ணன், ஊராட்சி மன்ற தலைவர் வைதேகிராசு, மாவட்ட மருத்துவ அணி தலைவர் எஸ்.பால்ராஜ், துணைத் தலைவர் ரவிந்திரன், துணை அமைப்பாளர்கள் கு.பிரின்யா, வி.செல்வராஜ், எஸ்.நடனசிகாமணி, வி.விக்னேஷ், நாகை தொகுதி அமைப்பாளர் ராஜேஸ்காவியா, தொகுதி துணை அமைப்பாளர் ஆர்.சிவங்கர், மற்றும் பலர் உள்ளனர்.



விழுப்புரம் மாவட்ட மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் ஆலம்பூண்டிதனியார் பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் வேலைவாய்ப்புக்கான பணி ஆணையை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார். மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் காஞ்சனா, செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் ஆகியோர் உடன் உள்ளனர்.

### பெண்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை

# முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்!

## திருவரங்கத்தில் - அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேச்சு!

புதுக்கோட்டை அக்.16-

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், அம்பாள் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி தொகைக்கான காசோலைகளை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 13.10.2023 அன்று வழங்கினார்.

பின்னர் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் பெண்களின் முன்னே ற்றத்திற்காக பல்வேறு நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க போன்ற முக்கிய தி ட்டங்களைச் செயல்படுத்தி எண்ணற்ற ஏழை எளிய நடுத்தர மக்களின் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்களுக்கு கடனுதவிகள் வழங்கப்பட்டு, அதன் மூலம் பெண்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்துவதற்கு வழிவகை ஏற்படுத்தியுள்ளார்கள்.

மேலும் மாவட்டத்தில் முன்னேற்றம் நாடும் வட்டாரங்களை தேர்வு செய்து, அந்த வட்டாரங்களின் முன்னேற்றத்திற்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து புதுக்கோட்டை மாவட்டத்தில் முன்னேற்ற நாடும் வட்டாரமாக திருவரங்குளம் வட்டாரம் தேர்வு செய்யப்பட்டு பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், அம்பாள் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் 2 ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பு களுக்கு தலா ரூ.50 லட்சம் வீதம் ரூ.1. கோடி மதிப்பிலான கடனுதவி தொகைக்கான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 40 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.2.20 கோடி மதிப்பிலான கடனுதவி தொகைக்கான காசோலைகள் என மொத்தம் ரூ.3.20 கோடி மதிப்பிலான கடனுதவி தொகைக்கான காசோலைகள் இன்றைய தினம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள கிராமப்புறங்களில் வசிக்கும் பெண்கள் இந்த கடனுதவிகளை பெற்று சொந்தமாக வேலைவாய்ப்பை உருவாக்க முடிகிறது. இதன்மூலம் தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒரு வாய்ப்பாக அமைகிறது.

இந்த மகளிர் சுயஉதவிக் குழுக்களானது முறையான வருவாயை ஈட்டித்தருவதன் மூலம் சிரமமின்றி வாழ்வதற்கு உறுதுணையாக அமைகிறது. இந்த கடனுதவிகளை பெறும் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் இதனை தங்களின் வாழ்வின் முன்னேற்றத்திற்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

எனவே தமிழக அரசின் இதுபோன்ற நலத்திட்டங்களை பயனாளிகள் உரிய முறையில் பெற்று பயன் பெற வேண்டும்.

இவ்வாறு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தெரிவித்தார்.

பின்னர் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் இத்திட்டம் குறித்த பல்வேறு விழிப்புணர்வு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகள் மற்றும் சிறப்பாகச் செயல்பட்ட அரசு அலுவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் கேடயங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் வள்ளியம்மை தங்கமணி, உதவி திட்ட அலுவலர்கள் தில்லைமணி, சசிகுமார், வட்டார வளர்ச்சி அலுவலர் கோகுலகிருஷ்ணன், ஆயிஷாராணி, கே.எம். சுப்பிரமணியன், அரு.வடிவேல், க.நைனா முகம்மது, எம்.எம்.பாலு, கணபதி, டி.எம்.ஆர், ராமமூர்த்தி, மேல விடுதி ஆறுமுகம், எம். சுந்தரம், விஜயத்குமார், கனரா மற்றும் பாரத வங்கி மேலாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### இரண்டாம் கட்டமாக - இஸ்ரேல் நாட்டில் சிக்கித்தவித்த

# 28 தமிழர்கள் பத்திரமாக தாயகம் திரும்பினர்!

## சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்!

சென்னை, அக்.16 -

இஸ்ரேல் பாலஸ்தீனம் நாடுகளுக்கு இடையேயான போர் தற்போது தீவிரமடைந்த நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக் கினங்க தமிழ்நாடு அரசின் சார்பில் அறிவிக்கப்பட்ட உதவி எண்கள் மூலம் அங்கு சிக்கித் தவித்த 128 தமிழர்களின் தகவல்கள் அறியப்பட்டது. இவர்களில் 13.10.2023 அன்று முதற்கட்டமாக புது டெல்லி வந்த 21 தமிழர்கள் அவர்களது இல்லம் வரை, தமிழ்நாடு அரசின் சார்பில் அழைத்து வரப்பட்டனர்.

இந்நிலையில் இரண்டாம் கட்டமாக நேற்று முன்தினம் (14.10.2023) மதுரை, திண்டுக்கல், கரூர், தென்காசி, தர்மபுரி, திருப்பூர், திருவண்ணாமலை, திருச்சி, சென்னை, விழுப்புரம், திருப்பத்தூர், சேலம், கோயம்பத்தூர் முதலிய மாவட்டங்களைச் சேர்ந்த 28 தமிழர்கள் இஸ்ரேலில் இருந்து சிறப்பு விமானத்தில் நேற்று காலை 06.00 மணிக்கு புதுடெல்லி வந்தடைந்தனர்.

புது டெல்லி விமான நிலையத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் அவர்களை வரவேற்று அவர்களுக்கு காலை உணவு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, தமிழ்நாடு அரசு செலவில் விமான பயண சீட்டுகளும் ஏற்பாடு செய்யப்பட்டது. இவர்களில் 16 தமிழர்கள் சென்னை விமான நிலையத்திற்கும், 12 தமிழர்கள் கோயம்பத்தூர் விமான நிலையத்திற்கும் வந்தடைந்தனர். மேலும் அரசின் தரப்பில் அவர்கள் சொந்த மாவட்டங்கள் செல்ல வாகனங்களும் ஏற்பாடு செய்யப்பட்டது.

சென்னை விமான நிலையத்திற்கு வந்தடைந்த 16 தமிழர்களை தமிழ்நாடு அரசின் சார்பில் சிறுபான்மை யினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே. எஸ். மஸ்தான் அவர்கள், அயலகத் தமிழர் நலத்துறை ஆணையர் திருமதி. ஜெசிந்தா லாசரஸ் மற்றும் துறை அலுவலர்கள் வரவேற்று, அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்தனர்.

கோயம்பத்தூர் விமான நிலையம் வந்தடைந்த 12 தமிழர்களையும், கோயம்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் வரவேற்று அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்தார்.

இதுவரை, இந்நேர்வில் இஸ்ரேலில் இருந்து 49 தமிழர்கள் ஆபரேஷன் அஜய் மற்றும் தமிழ்நாடு அரசின் சார்பிலும், 12 தமிழர்கள் தங்கள் சொந்த செலவிலும் தமிழ்நாடு வந்தடைந்துள்ளனர்.

### நீலகிரி மாவட்டத்தில் - கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு,

# நெடுஞ்சாலைத்துறை சார்பில் - சாலை பாதுகாப்பு விழிப்புணர்வுப் பேரணி!

## சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் கொடியசைத்து துவக்கி வைத்தார்!

நீலகிரி , அக். 16 -

நீலகிரி மாவட்டம், உதகை மத்திய பேருந்து நிலையத்தில், முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நெடுஞ்சாலை துறையின் சார்பில் 13.10.2023 அன்று நடைபெற்ற சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் கொடியசைத்து துவக்கி வைத்து, சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, முன்னிலை வகித்தார்.

சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியில், உதகை அரசு மேல்நிலைப்பள்ளி, தூய இருதய ஆண்டவர் மேல்நிலைப் பள்ளி, புனித சூசையப்பர் மேல்நிலைப்பள்ளி, அரசு கலைக்கல்லூரி மாணவ, மாணவியர்கள் என மொத்தம் 600 நபர்கள் பங்கேற்ற பேரணி உதகை மத்திய பேருந்துநிலையத்திலிருந்து புறப்பட்டு மணிகூண்டு, சேரிங்கிராஸ் வழியாக சென்று பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் நிறைவடைந்தது. இப்பேரணியில், சாலை பாதுகாப்பு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாணவ, மாணவியர்கள் விழிப்புணர்வு பதாகைகளை கையில் ஏந்தியபடி கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து, பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில், நடைபெற்ற நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் தலைமையில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு உறுதிமொழியினை பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள், தன்னார்வலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் ஏற்றுக் கொண்டனர். மேலும், சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு குறும்ப டத்தினை மாணவ, மாணவியர்களுடன் சுற்று லாத்துறை அமைச்சர் பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கும் வகையில் ஒவ்வொரு துறையின் வாயிலாக பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் நமது மாவட்டத்தில் தேசிய நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

மேலும், விபத்து குறித்தான பெரும்பாலான ஆய்வுகளில் சாலை விதிகளை பின்பற்றாதது தான் முக்கிய காரணமாக உள்ளது. இளைஞர்கள் வாகனம் ஓட்டும்போது சாலை பாதுகாப்பு விதிமுறைகளை முழுமையாக கடைபிடித்து, விபத்தில்லா மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிட உறுதியேற்போம். குறிப்பாக, தமிழ்நாடு முதலமைச்சர் , பள்ளிக்கல்வித் துறைக்கு அதிகபடியான முக்கியத்துவம் அளித்து, பெருமளவில் நிதி ஒதுக்கீடு செய்து வருகிறார்கள். எனவே பள்ளி மாணவ, மாணவியர்கள் கல்வி கற்க அதிக கவனம் செலுத்த வேண்டும். நன்றாக படித்தால்தான் எதிர்காலத்தில் ஒரு சிறந்த நிலையை அடைய முடியும் என்ற எண்ணத்துடன் கல்வி கற்க வேண்டும். கல்வி மட்டும் தான் ஒரு மனிதனை உயர்ந்த நிலை அடைவதற்கு உறுதுணையாக இருக்கும். ஆகவே மாணவச் செல்வங்கள் எதிர்காலத்தை மனதில் நிறுத்தி, தங்களது இலட்சியத்தை அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் கல்விகற்க அதிக கவனம் செலுத்தி, அதிக மதிப்பெண்கள் பெற வேண்டும்.

அதேபோல் விபத்துகளில் சிக்கிய நபர்களை உடனடியாக சிகிச்சை மேற்கொள்ளும் வகையில், இன்னுயிர் காப்போம் 48 மணி நேரம் திட்டத்தி ன் கீழ், மருத்துவ சிகி ச்சைக்கான செலவுத்தொகையை தமிழ்நாடு அரசே ஏற்கும், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், மருத்துவ சிகிச்சைக்கான உதவித் தொகைகள் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தி, இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்களுக்கு தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக அனைத்துத்துறைகளிலும் திகழ்ந்து வருகிறது என சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர் கி. பிரபாகர், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் சௌந்திராஜன், நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் குழந்தைராஜ், உதகை வருவாய் கோட்டாட்சியர் (பொ) பூஷண குமார், உதகை வட்டார போக்குவரத்து அலுவலர் தியாகராஜன், உதகை நகர் மன்றத் தலைவர் திருமதி. வாணீஸ்வரி, துணைத் தலைவர் ரவிக்குமார், உதவி கோட்டப் பொறியாளர் ஜெயபிரகாஷ், உதவி பொறியாளர்கள் ஸ்டாலின் (உதகை), பால சந்தர் (குன்னூர்), உதகை வட்டாட்சியர் சரவணகுமார், நகர்நல அலுவலர் (உதகை) மரு.ஸ்ரீதரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### தரணிதரன் – நவநீத கிருஷ்ணன் பங்கேற்பு!

# பொள்ளாச்சியில் ஆதி திராவிடர் நலக்குழு ஆலோசனைக் கூட்டம்!

## தளபதி முருகேசன் - திப்பம்பட்டி ஆறுச்சாமி சிறப்புரை!

பொள்ளாச்சி, 16 –

பொள்ளாச்சி நகரக் கழக அலுவலகத்தில் கோவை தெற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அறிமுக கலந்தாய்வுக் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில இணைச்செயலாளர் திப்பம்பட்டி ஆறுச்சாமி கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். கூட்டத்தில் மாநில தகவல் தொழில்நுட்ப இணைச் செயலாளரும் பொள்ளாச்சி தொகுதி பொறுப்பாளருமான தரணிதரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். பொள்ளாச்சி நகர செயலாளர் நவநீதகிருஷ்ணன் நிகழ்ச்சியில் மாவட்ட அமைப்பாளர் ஞானசேகரன் வருகை தந்த அனைவரையும் வரவேற்றன. கூட்டத்தில் ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்டத் தலைவர் சீரபாளையம் செந்தில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் சூலூர் சண்முகம் வால்பாறை ரவிச்சந்திரன் பொள்ளாச்சி வழக்கறிஞர் பஞ்சலிங்கம் சுல்தான்பேட்டை மணி மோகன் மதுக்கரை அருள் ராஜ் வெள்ளலூர் சக்தி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களிடத்தில் பி.ஜே.பி. அரசு செய்து வரும் அவதூறு பிரச்சாரத்தை முறிய டிக்கும் விதமாக திண்ணை பிரச்சாரம் செய்வது, தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியை சிறப்பாக கொண்டாடுவது, நகர, ஒன்றிய, பேரூர்க் கழக நிர்வாகிகளை புதிதாக நியமனம் செய்வது குறித்து கலந்து ஆலோசிக்கப்பட்டது.

தொகுதிக்கு இரண்டு பொறுப்பாளர்களை நியமனம் செய்வது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறை வேற்றப் பட்டன.

# கும்மிடிப் பூண்டியில் பாகமுகவர்கள் கூட்டம்!

திருவள்ளூர் , அக. 16 -

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்மு டிப் பூண்டி தொகுதி, வாக்குச் சாவடி பாகமுகர்கள் (பி.எல்.ஏ.2) வாக்குச் சாவடி பாக உறுப்பினர்கள் (பி.எல்.சி.) பணிகள் குறித்து திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்முடிப் பூண்டி தொகுதி ஒன்றிய பேரூர் செயலாளகள், நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளரும், கும்முடிப்பூண்டி சடடமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் முன்னிலையில் கும்முடிப்பூண்டி தொகுதி பொறுப்பாளரும், கழக செய்தி தொடர்பு துணைத் தலைவர் பி.டி.அரசகுமார். பங்கேற்று, வாக்குச் சாவடி பாக முகவர்கள் செயல்பாடுகள் குறித்து கருத்துக் களை வழங்கினார். கூட்டத்;தில் ஜெ.மூர்த்தி, எஸ். ரமேஷ், சி.எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், வெ.அன்பு வாணன், பி.வெங்கடாசலபதி, ஏ.வி. ராமமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் மு.மணிபாலன், டி.கே.சந்திரசேகர், ஆ.சத்தியவேலு, ந.பரிமளம், ஜான் (எ) பொன்னுசாமி, இரா. அறிவழகன், அமைப்பாளர்கள் கே.வி.லோகேஷ், மு.பாஸ்கரன், டி.மணி, கே.ஆறுமுகம், கோல்டு மணி, ஜி.ரமேஷ், ஜெயலலிதாசசிதரன், வில்சன் நிலவழகன், சி.சுமன், க.சம்பத் மாணவரணி டி.ஜெ.ஜி.தமிழரசன் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.



மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ.,வழிகாட்டுதலின் படி மயிலாடுதுறை மத்திய ஒன்றியம் ஊராட்சியில் நீடூர், கங்கனம்புத்தூர், அருள்மொழிதேவன், அறுவாப்படி ஆகிய ஊராட்சிகளுக்கான பாக முகவர்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் கலந்தாய்வு கலந்தாயுவுக் கூட்டம் நீடூரில் நடைபெற்றது. கூட்டத்தில் மயிலாடுதுறை தொகுதி பொறுப்பாளரும், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் ஜித்து (எ) ராஜரத்தினம், ஒன்றியக் கழகச் செயலாளர் ஞான.இமையநாதன், மாநில விவசாய தொழிலாளர் அணி இணை ஒருங்கிணைப்பாளர் ஜெக.வீரப்பாண்டியன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் கி.சத்தியசீலன், மாவட்ட கழக துணைச் செயலாளர் கண்ணகியன்னீர், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், காந்தி, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் எம்.கே.மருது, பெருவீரமணி ஒன்றிய குழு உறுப்பினர் மும்தாஸ் மற்றும் ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



சேலத்தில் தி.மு.கழகத்தின் சட்டத்துறை சார்பில் மண்டல வழக்கறிஞர் அணி ஆலோசனைக்கூட்டம் சட்டத்துறைச் செயலாளர். கழக முதன்மை வழக்கறிஞர். என்.ஆர். இளங்கோ எம்.பி. தலைமை வகித்தார். சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளர். இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பேசினார் மற்றும் கழக சட்டத்துறை நிர்வாகி, சூர்யா வெற்றிகொண்டான். உட்பட கழக நிர்வாகிகள் 19 மாவட்ட கழக சட்டத்துறை வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### பெண்கல்வி முன்னேற புரட்சிகர மாற்றங்களை உருவாக்கியது திராவிட இயக்கங்களே!

# திறன்மிக்க ஆளுமைகளை உருவாக்குவதே, 'நான் முதல்வன்' திட்டத்தின் இலக்கு!

## அண்ணா பல்கலை உரையில் - உயர்கல்வித்துறை அமைச்சர் - முனைவர் க.பொன்முடி பெருமிதம்!



**சென்னை, அக். 16 - அண்ணா பல்கலைக்கழகத்தின் காலேஜ் ஆப் இன்ஜினியரிங், ஏசிடெக், எம்ஐடி, மேப் ஆகிய வளாகங்களில் பயின்று பட்டம் பெற்ற மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழாவில் (11.10.2023) உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி பங்கேற்று நிகழ்த்திய உரை வருமாறு:-**

அண்ணா பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறுவது என்பது சாதாரணமான விஷயம் இல்லை. சிறப்பு விருந்தினர் சொன்னார், அவருடைய மாமா 1968ஆம் ஆண்டில் கெமிக்கல் என்ஜினியரிங் படித்தார். நான் 1965ஆம் ஆண்டில், எனக்கு என்ஜினியரிங் படிப்பதற்கு இடம் கிடைக்குமா? என்று கஷ்டப்பட்டு பார்த்த காலம் உண்டு; கிடைக்கவில்லை. அப்பொழுது 1966இல் வாங்கிய மதிப்பெண் அடிப்படையில்தான், தமிழ்நாடு அளவில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அப்பொழுதெல்லாம் 1965-1966ஆம் ஆண்டுகளில் பியூசிதான். அதில் தேர்வாவது என்பது மிகவும் கடினம் ஆகும்.

நான் படித்தது தமிழ் மீடியத்தில்தான், கல்லூரிக்குச் செல்லும் வரை. நான் பியூசி படிப்பதற்காக கல்லூரியில் சேர்ந்த போது ஆங்கிலத்தில் மட்டும்தான் கற்பிக்கப்பட்டது. தமிழில் கற்பிக்கப்படவில்லை. எஸ் எஸ்எல்சி வரையினில் தமிழ் வழியில் தான் படித்தேன் ஆனால் பியூசியில் இணைந்த போது தமிழ் என்பதே இல்லை. ஆங்கிலம் மட்டும்தான். ஆசிரியர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும் தமிழ் தெரிந்திருந்தாலும் அவர்கள் தமிழில் பேசமாட்டார்கள் ஆங்கிலத்தில் மட்டுமே உரையாடினர். அவற்றை எல்லாம் ஏற்றுதான் மாணவர்கள் பியூசி பயின்றனர். நானும் இதனை எல்லாம் ஏற்ற வண்ணம் தான் என்னுடைய பியூசி படிப்பை முடித்தேன். ஏனென்றால், அப்பொழுது இருந்த நிலைமை அப்படி. அதை மாற்றியமைத்தவர் பேரறிஞர் அண்ணா, கலைஞர் ஆவர். ஆக, நமக்கு எது புரியுமோ, அதில் நாம் படிக்க வேண்டும். அதேநேரத்தில் இன்டர்நேஷனல் லாங்வேஜையும், நம் மொழியையும் தெரிந்து கொள்ள வேண்டும். அதைத்தான் மிக அழகாக சிறப்பு விருந்தினர் ஐ.ஐ.டி.இன் மேனாள் இயக்குநர் பேராசிரியர் சரத்குமார் தாஸ் எடுத்துரைத்தார்.

நூறு மீட்டர் ஓட்டப் பந்தயத்தையும் மாரத்தான் பந்தயத்தையும் ஒப்பிட்டு பேசினார். என்னுடைய தொடக்க கால கல்வியில் நான் சராசரியான மாணவனாகத்தான் இருந்தேன். நான் கல்லூரிக்கு நுழைந்து இளநிலை அரசியல், முதுநிலை வரலாறு முதுநிலை பொது நிர்வாகம் மற்றும் முனைவர் பட்டம் வரையினில் படித்தேன். நான் இளநிலை அரசியல் பாடம் பயின்ற போது நான்தான் பல்கலைக்கழக பர்ஸ்ட் ரேங் பெற்றேன். அதேபோல முதுநிலை வரலாறு படித்த போதும் பல்கலைக்கழக அளவில் இரண்டாவது மாணவராக ரேங் பெற்று தேர்வானேன்

ஆனால் என்னுடைய தொடக்கக் கல்வியில் ஐந்தாம் வகுப்பு வரையிலும் எட்டாம் வகுப்பிலும் நான் வகுப்பில் சராசரி மாணவன் தான். ஆனால் அங்கு வகுப்புகள் டபுள் ப்ரமோசன் பெற்றேன் நான் கல்லூரியில் இணைந்த போது கல்வியில் முழுக் கவனத்தையும் செலுத்தினேன். இதை எதற்கு சொல்கிறேன் என்றால் ஆரம்ப கல்வியிலேயே இடைநிற்றல் ஏற்படும் வகையிலே புதிய கல்விக் கொள்கை வகுக்கப்பட்டு, ஆரம்ப கல்விக்கு பொதுத் தேர்வு என்பது கிராமப்புற மாணவர்களை கல்வி பயில்வதில் இருந்து வெளியேற்றுவதாக அமைந்தது.

நாம் படிக்கும்போது வேலைவாய்ப்பு குறித்து மட்டுமே யோசிக்கிறோம். என்ன வேலை கிடைக்கும் எவ்வளவு சம்பளம் கிடைக்கும் என்பதுதான் அனைவரின் சிந்தனையாகவும் அனைத்து மாணவர்களின் சிந்தனையாகவும் இருக்கும். வேலை பெறுவதும் பணம் என்பதிலும் அனைத்து சிக்கல்களும் அடங்கி உள்ளது. எங்கு இருந்தாலும் என்னவாக இருந்தாலும் எந்த துறையில் இருந்தாலும் அந்த இடத்தில் நீங்கள் முதன்மையானவராக இருக்க வேண்டும். அதனைத் தான் சிறப்பு விருந்தினர் இங்கு வலியுறுத்துகிறார். அதுதான் மாணவர்கள் முதன்மை நிலை அடைய வேண்டும் என்னும் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நான் முதல்வன் திட்டமாகும்.

எந்தத் துறையில் இருக்கிறீர்களோ அந்தத் துறையில் முதன்மை நிலையை அடையுங்கள். கல்லூரியில் இருந்தால் முதலாவது மாணவராக வர முயற்சிகள் எடுக்க வேண்டும். பொறியாளர் என்றால் சிறந்த தொழில் முனைவோராக வருவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். பேராசிரியராக இருந்தால் மாணவர்களின் பலத்தை உயர்த்த வேண்டும் அது மட்டுமல்ல பட்டதாரிகளுக்கான எதிர்காலத்தை உருவாக்க வேண்டும். நீங்கள், படிக்கும்பொழுதே எந்தத் துறையில் இருந்தாலும், அந்தத் துறையில் முதல்வனாக இருக்க வேண்டும். முத்திரையை பதிக்க வேண்டும் என்கிற எண்ணம், இப்பொழுதிருந்தே உங்களுக்கு வரவேண்டும்.

மாரத்தான் பந்தயத்தில், தொடக்கத்தில் மெதுவாக தொடங்கினாலும், முடிவில் இலக்கை அடைவதைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

**தரத்தை உயர்த்த வேண்டும்!**

அதுதான் இஸ்ரோ விஞ்ஞானி வீரமுத்துவேல். நீங்கள் அவரைப் பற்றி கண்டிப்பாக கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர் எனது ஊரான விழுப்புரத்தைச் சேர்ந்தவர். உயர்நிலைப் பள்ளிகளில் சராசரி மாணவன் என்று அவரே கூறியது. பள்ளிப்படிப்பை முடித்து பின்னர் பொறியியல் கல்லூரியில் நுழைந்தார், மேலும் ஐஐடியில் படிப்பது முக்கியமல்ல, நீங்கள் எங்கு படித்தாலும், உங்களுக்கு என்று நோக்கம் இருக்க வேண்டும். எனவேதான் நமது முதலமைச்சர் அவர்கள் நான் முதல்வன் திட்டத்தின் மூலமாக, பள்ளி நாட்களில் இருந்தே மாணவர்களுக்கு, கல்லூரி படிப்பு, பாலிடெக்னிக், பல்கலைக் கழகங்கள் என அனைத்து நிலைகளிலும் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மூலமாகத் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்க கூறியுள்ளார். இதுவரை 13 இலட்சம் மாணவ மாணவிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இதில் நமது முதல்வர் முனைப்பாக ஆர்வம் காட்டுகிறார். அதனால்தான் நமது முதலமைச்சர் அவர்கள் எண்ணிக்கையை உயர்த்துவது மட்டும் அல்ல, தரத்தை உயர்த்த வேண்டும் என்பதே எங்களது நோக்கம் என்றும், உயர்கல்வி என்பது பொற்காலமாக மாறும் கூறுகிறார். கல்லூரிகளில் மாணவர்களிடையே 17 ஆண்டுகள் பேராசிரியராக இருந்தவன். மாணவர்களின் மனநிலை எனக்கு நன்கு தெரியும். எனவே உங்கள் பட்டப்படிப்பை முடித்துவிட்டீர்கள், நீங்கள் சிலர் பணிக்கு செல்ல உள்ளீர்கள் தொழில்களை செய்யப்போகிறீர்கள். அதற்கான துவக்கம் உங்களிடம் இருக்க வேண்டும். எண்ணம் வேறு, முன்முயற்சி வேறு, தனித்தன்மை என்பதுதான் நான் முதல்வன் அளிக்கும் பயிற்சி ஆகும். நீங்கள் எங்கு நுழைந்தாலும், அந்தத் துறையில் நீங்கள் முதன்மையானவராக இருக்க வேண்டும்.

பொறியியல் படிக்கின்ற மாணவர்கள் படித்துவிட்டு, வேலைக்குப் போக வேண்டும் என்கிற எண்ணத்தோடு மட்டும் இருக்கக்கூடாது. தொழிற்சாலைகளை நாம் உருவாக்கவேண்டும்; தொழில் முனைவோராக வரவேண்டும் என்கிற எண்ணம் உங்களுக்கு வரவேண்டும். அதுதான் உங்களுக்கு மிகவும் முக்கியம். அதுதான் நான் முதல்வன் திட்டமாகும். அதுதான் மிகவும் முக்கியம். அரசாங்கப் பணிக்குப் போகவேண்டும்; தனியார் கம்பெனிக்குப் போக வேண்டும் என்ற நினைப்பதில் தவறு இல்லை.

அக்காலங்களில் ரேடியோ இருந்தது என்றால், இடையில் டி.வி. இருந்திருந்தது. இப்பொழுது போனிலேயே எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளக்கூடிய அளவிற்கு அறிவியல் வளர்ச்சி பெற்றிருக்கிறது. அந்த வளர்ச்சியோடு நம்மையும் வளர்த்துக் கொள்ளவேண்டும். அதுதான் மிக முக்கியமான நோக்கமாக இருக்க வேண்டும். நான் சொன்னேன் அல்லவா, இஸ்ரோ விஞ்ஞானி வீரமுத்துவேல் ஒரு மேனிலைப் பள்ளியில் படிக்கும்பொழுது, ஆவேரேஜ் ஸ்டூடண்ட்டாகத் தான் இருந்தவர், இன்றைக்கு இந்தியா மட்டுமல்ல, உலகமே வியந்து பார்க்கின்ற ஒரு விஞ்ஞானியாக வளர்ந்திருக்கின்றார் என்று சொன்னால், அது அவருடைய முயற்சி. அதற்கான முனைப்பு நம்மிடம் இருக்க வேண்டும் என அவர் வலியுறுத்துகிறார். அந்த எண்ணம் இருக்க வேண்டும், அந்தத் தனித்தன்மை இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்.

தமிழ் மொழி என்பது நம்முடைய தாய் மொழி, நாம் நம் தாய்மொயை கற்க வேண்டும், அதேநேரத்தில், சர்வதேச மொழியான ஆங்கிலத்தையும் நாம் கற்க வேண்டும். இரண்டுமே முக்கியம், இதில் சந்தேகமே என்பதே இல்லை, இருமொழி என்பதே நமது கொள்கை. இரண்டு மொழிகளையும் நாம் அறிந்திருக்க வேண்டும். நாம் தமிழ் வழியிலும் படிக்கிறோம் ஆங்கில வழியிலும் படிக்கிறோம். பொறியியல் கல்லூரியில் தமிழ் வழியில் கற்பித்தல் என்பது இல்லாமல் இருந்தது. டாக்டர் கலைஞர் 2006 முதல் 2011 வரை முதலமைச்சராக ஆட்சியில் இருந்தபோது நான் உயர் கல்வித்துறை அமைச்சராக இருந்தேன். அப்போது அண்ணா பல்கலைக்கழகத்தில் சிவில் மற்றும் மெக்கானிக்கல் ஆகிய இரண்டு படிப்புகளில் தமிழ் வழிக் கற்பித்தல் அறிமுகப்படுத்தப்பட்டது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கூட பொறியியல் கல்லூரிகளில். மொழிப்பாடங்கள் இல்லை, தமிழ் மொழி இல்லை ஆனால் இப்போது தமிழ் மற்றும் ஆங்கிலம் இரண்டையும் அறிமுகப்படுத்தியுள்ளோம்.

**பெரியார், அண்ணா, கலைஞர் போன்றோரின் உழைப்பு!**

எந்தப் பிரச்சினைகள், எப்படி இருந்தாலும், அதையெல்லாம் வெல்லக்கூடிய ஆற்றலை நாம் வளர்த்துக் கொள்ளவேண்டும். அதுதான் இந்தக் கல்வியினுடைய திட்டம். நம்முடைய கல்வி வளர்ச்சிக்காகத்தான் நான் முன்பே சொன்னதைப் போல, “நான் முதல்வன் திட்டம்”. பதக்கம் பெறுபவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும் பொழுது, இதில், பதக்கம் பெறுபவர்களில் ஆண்கள் 30; பெண்கள் 42. எம்.எஸ். போன்ற. ஆராய்ச்சி பட்டங்களில் ஒரு ஆண் இரண்டு பெண்கள். 1966இல் நான் பொறியியல் படிப்புக்கு முயற்சித்தபோது பொறியியல் கல்லூரிகளிலும் மாணவிகள் இல்லை. ஆனால் இப்போது பெரும் எண்ணிக்கையிலான மாணவிகள் பொறியியல் படிப்பதைக் காண்கிறேன், இதற்கு முக்கியக் காரணம் நமது திராவிட இயக்கமாகும். இதற்கு பெரியார், அண்ணா, கலைஞர் போன்றோரின் உழைப்பும் திராவிட இயக்கத்தின் திட்டங்களும் காரணம் ஆகும். இதனை நான் அரசியலுக்காக பேசவில்லை. நீங்கள் யாருக்கும் வாக்களிக்கலாம், அது வேறு. ஆனால் சமூக நீதி வேண்டும். ஆண்களும் பெண்களும் சமம். வெறுமனே படிக்கிறார்கள் என்பது முக்கியம் அல்ல.

ஆனால் அவர்களுக்குத் தரமான கல்வியைக் கொடுக்க வேண்டும் என்பது முதலமைச்சரின் நோக்கம். நல்ல கல்வியைப் பெற வேண்டும் என்னும் நமது முதலமைச்சர், அதன் தரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதனை முக்கியமாக வலியுறுத்துகிறார். நமது அண்ணா பல்கலைக் கழகம் பல்கலைக்கழக தரத்தை மேம்படுத்த முயற்சிக்கிறது அதனால்தான் இப் பல்கலைக்கழகம் ஆற்றல்வாய்ந்த பல்கலைக்கழகமாக மாறி உள்ளது. நூறு பல்கலைக்கழகங்களில் ஒன்றாக உள்ளது,

நமது முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் இருமொழிக் கொள்கையுடன் மாநிலக் கல்விக்கொள்கையை அறிமுகப்படுத்த உள்ளார். அனைத்துப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கலை அறிவியல் கல்லூரிகளிலும் பாடத் திட்டங்களையும் மேம்படுத்தியுள்ளார். முதலில் ஆசிரியர்களுக்கு முக்கியமான பயிற்சி அளிப்பதில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். நான் முதல்வன் திட்டத்தில் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்து வருகிறோம். அவர்கள் பயிற்சி பெற்றால், அவர்கள் உங்களுக்கு பயிற்சி கொடுப்பார்கள், அவர்கள் உங்களுக்கு கற்பிக்க முடியும்.

இங்கே என்ன கற்றுக் கொள்ளவேண்டுமெனில், தொடக்கத்தில் சுமாராகப் படிக்கின்றவர்கூட, பொறியியல் படித்து மேலே போகும் பொழுது, நல்ல அறிவாளி மாணவனாக வெளியே போகிறான். தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறார்கள். இங்கே இருக்கின்ற எல்லோரும் தொடக்கப் பள்ளியிலும், மேனிலைப் பள்ளியிலும் நல்ல மதிப்பெண் வாங்கினாலும், வாங்காவிட்டாலும், இங்கே வந்தவுடன் போட்டிப் போட்டுக் கொண்டு படிக்க ஆரம்பித்துவிடுகிறீர்கள். இதுதான் மிகவும் முக்கியம். அதைத்தான் நாம் செய்கிறோம்.

ஆகவே, நீங்கள் ஆரம்பக் கல்வியில் பொதுத் தேர்வு என்பதை ஒன்றிய அரசு கொண்டு வந்தால் சரியாக வராது. இடைநிற்றல் அதிகமாகும். அதனால்தான், நம்முடைய தமிழ்நாடு அரசு 10+2+3 முறையை கடைபிடித்து வருகிறது (மாணவ / மாணவிகள் கைத்தட்டல்) மாணவர்களே, நீங்கள் தொழில் முனைவோர்களாகலாம், அல்லது தொழில் நிறுவனங்களுக்கு வேலைக்குச் செல்லலாம். குறிப்பாக உலக நடைமுறைகளைப் பற்றி தெரிந்துகொள்ளுங்கள். அய்.பி.எஸ்., அய்.ஏ.எஸ். போன்ற போட்டித் தேர்வுகளை எழுத முயற்சி செய்யுங்கள், போட்டித்தேர்வு பயிற்சிக்கு நான் முதல்வன் திட்டத்தின்கீழ் மாவட்டம் தோறும் பயிற்சி மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

நீங்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்களிடம் உள்ள திறமைகளை வளர்த்துக் கொள்ளுங்கள். இங்கே நீங்கள் பட்டம் பெற்றிருந்தாலும், மேலும் உங்களை உயர்த்திக் கொள்வதற்கான வழி என்ன என்பதைப்பற்றி யோசியுங்கள்! அதற்கான முயற்சிகளில் நீங்கள் ஈடுபடுங்கள். நீங்கள் அனைவரும் வெற்றி பெற்று, உங்கள் வாழ்நாளில், நீங்கள் எந்தத் துறையில் நுழைந்தாலும், அந்தத் துறையிலே முத்திரை பதித்து மிகச் சிறப்பாக செயல்பட நான் உங்களை வாழ்த்துகிறேன்.

அந்த அடிப்படையில் தான், இங்கே வருகை புரிந்திருக்கின்ற சிறப்பு விருந்தினர் பேராசிரியர் சரத்குமார் தாஸ் அவர்கள் சொன்னார், தான் படிக்கும்பொழுது எங்கே படித்தார் என்றும், அய்.அய்.டி.யில் படிக்கவில்லை. இப்பொழுது இயக்குநராக இருக்கிறார் என்று சொன்னால், அவருடைய முயற்சி, உழைப்புதான்! அதுதான் முக்கியம். நம்முடைய முயற்சி! முயற்சி திருவினையாக்கும் என்பதுதான் மிகவும் முக்கியம்.

என்னுடைய தாழ்மையான வேண்டுகோள் என்னவென்றால், பட்டதாரிகளே, எதையும் நம்பிக்கையோடு எதிர்கொள்ளுங்கள், வெற்றி பெறுவீர்கள்! உங்களுக்கு என்னுடைய நிறைவான வாழ்த்துதலைச் சொல்லி நிறைவு செய்கிறேன்.

## 'வாட்ஸ் அப்'பில் வந்த செய்தி!

### இதுதான் பெரியாரின் தொண்டு



தேர்தல்களால் அரசாங்கத்தைத் தான் மாற்ற முடியும்; மக்களின் சிந்தனையை மாற்ற முடியாது.

சமூக மாற்றங்களால்தான் சிந்தனை மாற்றத்தைக் கொண்டுவரமுடியும்; அதைத்தான் மறைந்த பெரியார் ஈ.வெ.ரா. செய்தார். சமூக அமைப்பை மாற்றி அமைப்பதற்கும், சமூக நீதியைக் கொண்டுவருவதற்கும் பெரியார் செய்துள்ள மிகப்பெரும் தொண்டு பிரதமர்களாலும், சட்டமன்ற உறுப்பினர்களாலும், நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் செய்ய முடியாததாகும்.

- வி.பி.சிங்

(திருச்சியில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி: 'தி இந்து' டிச. 29, 1992 - பக்.4)



பொள்ளாச்சி நகரக் கழக அலுவலகத்தில் கோவை தெற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அறிமுக கலந்தாய்வுக் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில இணைச்செயலாளர் திப்பம்பட்டி ஆறுச்சாமி கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். கூட்டத்தில் மாநில தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளரும் பொள்ளாச்சி தொகுதி பொறுப்பாளருமான தரணிதரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். பொள்ளாச்சி நகர செயலாளர் நவநீதகிருஷ்ணன், மாவட்ட அமைப்பாளர் ஞானசேகரன் வரவேற்றனர். கூட்டத்தில் ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்டத் தலைவர் சீரபாளையம் செந்தில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் சூலூர் சண்முகம் வால்பாறை ரவிச்சந்திரன், பொள்ளாச்சி வழக்கறிஞர் பஞ்சலிங்கம், சுல்தான்பேட்டை மணி மோகன், மதுகரை அருள் ராஜ், வெள்ளலூர் சக்தி உள்பட பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களிடத்தில் பி.ஜே.பி. அரசு செய்து வரும் அவதூறு பிரச்சாரத்தை முறியடிக்கும் விதமாக திண்ணை பிரச்சாரம் செய்வது தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியை சிறப்பாக கொண்டாடுவது. நகர, ஒன்றிய, பேரூர்க் கழக நிர்வாகிகளை புதிதாக நியமனம் செய்வது குறித்து கலந்து ஆலோசிக்கப்பட்டது. தொகுதிக்கு இரண்டு பொறுப்பாளர்களை நியமனம் செய்வது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை! ஏ.வி.ஆறுமுகம் ஏற்பாட்டில்

# திருவொற்றியூர் மத்திய பகுதியில் கலைஞர் நூற்றாண்டு விழா மாபெரும் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் ஆர்.காந்தி - ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை! கலாநிதி வீராசாமி - கே.பி.சங்கர் - தி.மு.தனியரசு பங்கேற்பு!

சென்னை, அக்.16 -

திருவெற்றியூர் மத்திய பகுதி செயலாளரும், இரண்டாவது மண்டலக்குழு தலைவருமான ஏ.வி. ஆறுமுகம் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மாபெரும் பொதுக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 13.10.2023, வெள்ளிக்கிழமையன்று மாலை பார்த்த சாரதி தெரு, மணலியில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்டக்கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம், எம்.எல்.ஏ, தலைமை வகித்தார்.

இராணிப்பேட்டை ஆர்.காந்தி, ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்ச்சியில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்பி. கே.பி.சங்கர் எம்.எல்.ஏ, தி.மு.தனியரசு எம்.சி. எம்.நந்தகோபால், வை.மா. அருள்தாசன், வ.முத்துசாமி, ஆர்.டி.ரமோஷ்குமார், வி.ஜி.தினகரன், நூர்கா கோதண்டம், என்.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ஸ்டாலின், பா.செல்வராஜ் என்.விஜயரங்கன், எ.ஞானமூர்த்தி, எஸ்.ஸ்ரீதர், சாலை டி.கணேசன், மு.செல்வம், டி.கரிகாலச்சோழன், மிசா.பா.மதிவாளன், வி.ராமநாதன், குறிஞ்சி எஸ்.கணேசன், மு.ராஜேந்திரன், டி.ராமகிருஷ்னான். அறிவழகி, எம்.ஆனந்தன், என்.பரந்தாமன், ஜெ.ஜெ.ஜெய்மதன், டி.ஏ.ராஜி இரா.முருகேசன், பி.சாந்தி, புழல்.எம்.நாராயணன், ஜி.துக்காராம், ஜி.தயாளன் மி.வே.கருணாகரன், பெ. சர வனன், ஜிபராஜேந்திரன், ந.திருசங்கு, இ.குமரவேல், யு.எஎம்.குறலரசன், அ.இந்துமதி, எம்.வஜ்சிரவேல், ஆர்.சி.ஆசைதம்பி, எம்.பி.குமார், ஆர்.எஸ்.சம்பத், கே.பிராபாவதி, இரா.குமரேசன், நா.கார்த்திகேயன், டி.சி.வி.மணிகண்டன், எம்.எல்.சரவணன், குறுத்து சி.முனுசாமி, க.பி.சதீஷ்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# உலகம் போற்றும் திராவிட மாடல்!

## கார்த்திகேய சிவசேனாபதி பெருமிதம்!



சென்னை, அக்.15-

கழக சுற்றுச்சூழல் அணிச் செயலாளரும், அயலகத் தமிழர் நல வாரியத் தலைவருமான கார்த்திகேய சிவசேனாபதியின் “உலகம் போற்றும் திராவிட மாடல்” எனும் தலைப்பிலான வீடியோ பதிவு சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது. அதில் அவர் கூறியிருப்பதாவது:-

இங்கிலாந்து நாட்டின் முன்னாள் பிரதமர் டோனி பிளேயர், லண்டனில் “டோனி பிளேயர் இன்ஸ்டிடியூட் பார் கவர்னன்ஸ்” எனும் ஒரு அமைப்பை நடத்தி வருகிறார்.

அந்த அமைப்பினுடைய வேலை, உலகம் முழுவதும் இருக்கக்கூடிய அரசியல் சித்தாந்தங்களை, அரசாங்கங்களை எடுத்துப் பார்த்து, எந்த அரசியல் சித்தாந்தம் “சப்சஹாரன் ஆப்பிரிக்கா”வுக்கு, அதாவது, பெரிய நீர் பற்றாக்குறை, உணவே இல்லாத பகுதிகளிலே இந்த அரசியல் சித்தாந்தங்களை கொண்டுபோய் சேர்த்தோமென்றால், அந்த அரசியல் சித்தாந்தம்தான் சிறப்பானதாக இருக்கும். அரசாட்சியா, மன்னராட்சியா, கம்யூனிசமா, சோசலிசமா அல்லது இரண்டும் சேர்ந்ததா அல்லது கேப்படலிசமா என்றெல்லாம் பார்க்கும்போது, “டோனி பிளேயர் இன்ஸ்டிடியூட் பார் கவர்னன்ஸ்” சார்பில் 27 பக்கங்கள் கொண்ட அறிக்கை கொடுத்திருக்கிறார்கள்.

அதில், தன்னந்தனியாக இரண்டு வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள். நாங்கள் உலகம் முழுவதும் இருக்கக்கூடிய அரசியல் சிந்தாந்தங்களை, அரசாங்கங்களை கடந்த 50 ஆண்டு காலமாக எடுத்துப் படித்தோம். அப்படி படித்ததிலே “சப் சஹாரன் ஆப்பிரிக்கா'வுக்கு மிகவும் சிறப்பான, அற்புதமான ஒரு சித்தாந்தம் இருக்கிற தென்றால் அதற்குப் பெயர் திராவிடியன் மாடல்.

அந்த திராவிடியன் மாடல், இந்திய நாட்டிலே, தென்னிந்தியாவிலே, தமிழ் நாட்டில் நடைபெறுவதற்குக் காரணம் சமூக நீதிக்கு முக்கியத்து வமும், சமத்துவமும் தந்த தலைவரான தந்தை பெரியார்தான். அதனை நடைமுறைப்படுத்தியவர் 1967-ல் ஆட்சிக்கு வந்த முதல்வரான பேரறிஞர் அண்ணா தொடங்கி 2011 வரை ஆட்சியில் இருந்த கலைஞர் வரை அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எல்லாவற்றையும் அவர்கள் அதில் பெருமையாக சொல்கிறார்கள்.

அந்த மாடலை திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வந்திருந்தால், கூட தொடர்ந்து தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வந்தவர்கள், தமிழ்நாட்டின் நலனுக்காக, தமிழ்நாட்டை விட்டுக்கொடுக்காமல் மாற்றி மாற்றி நல்லதை செய்து மிகப்பெரிய முன்னேற்றத்திற்கு தமிழ்நாட்டை எடுத்துச் சென்றிருக்கிறார்கள்.

இந்த 'திராவிடியன் மாடல்' மிக அற்புதமான மாடல் என்று “டோனி பிளேயர் இன்ஸ்டிடியூட் பார் கவர்னன்ஸ்” எனும் வெப்சைட்டில் யார் வேண்டுமென்றாலும் இந்த செய்தியினை பதிவிறக்கம் செய்து பார்த்துக்கொள்ளலாம்.

திராவிடியன் மாடலை உலகம் கொண்டாடிக்கொண்டு இருக்கிறது.

'நார்த்-சௌத் டிவைன்' எனும் புத்தகத்தில் இன்னும் தெள்ளத்தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

**இன்றைக்கு நாம் எங்கு இருக்கிறோம். இன்றைக்கு வளர்ச்சிப் பாதையில் மொத்தப் பதிவு விகிதம் (Gross Enrolment ratio) ஜி.இ.ஆர். என்று சொல்லக்கூடிய, அதில் 10, 12-ஆம் வகுப்பை முடித்துவிட்டு எத்தனை பேர் கல்லூரிக்குப் போகிறார்களோ, அதிலே வந்து அமெரிக்காவை விட தமிழ்நாட்டில் அதிகம் பேர் உயர் கல்விக்குச் செல்கிறார்கள். சீனாவை விட அதிகம் பேர் தமிழ்நாட்டில் உயர் கல்விக்குச் செல்கிறார்கள். அதற்குக் காரணம் இந்த 'திராவிடியன் மாடல்'.**

இவ்வாறு அவர் அந்த வீடியோ பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



சென்னை, தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்களின் முகாம் அலுவலகத்தில், நேற்று முன்தினம் (14.10.2023) தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையால் IoT தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி "ஸ்மார்ட் மாவட்ட நிர்வாகம்" என்ற திட்டம் உருவாக்க தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், ஐக்கிய முடியரசின் இந்தோ பசிபிக், வெளியுறவு, காமன்வெல்த் மற்றும் மேம்பாட்டு அமைச்சர் அனி மேரி டிரவேல்யன் ஆகியோர் முன்னிலையில், புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை செயலாளர் தீரஜ் குமார், பிரிட்டிஷ் துணை உயர் ஆணையர் ஆலிவர் பால்ஹாட்செட் MBE, மின் ஆளுமை இயக்குநர்/ தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் தலைமை செயல் அலுவலர் பிரவீன் பி நாயர், தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மை தொழில்நுட்ப அலுவலர் ராபர்ட் ரவி, அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தி.மு.க.மகளிர் அணி சார்பில் சென்னையில் நடைற்ற மகளிர் உரிமை மாநாட்டில் கலந்து கொள்ள பெரம்பலூர் மாவட்டத்தில் இருந்து 100க்கும் மேற்பட்ட பெண்கள் பெரம்பலூர் பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் இருந்து சென்ற பேருந்தை ஆ.இராசா. எம்.பி., கொடியசைத்து வழியனுப்பி வைத்தார். இதில் மாவட்ட கழகச்செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாநில நிர்வாகிகள் பா.துரைசாமி, இரா.ப.பரமேஷ்குமார், டாக்டர் செ.வல்லபன், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், ஒன்றிய செயலாளர் எம்.ராஜ்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் உள்ளிட்ட

# சென்னை - தாம்பரம் - செங்கல்பட்டு பகுதிகளில் திட்டப் பணிகள்!

## தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா ஆய்வு! எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, அக்.16-

பெருநகர சென்னை மாநகராட்சி, செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி, கிளாம்பாக்கம் பேருந்து நிலையப் பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

**செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி**

தாம்பரம் மாநகராட்சி, தாம்பரம் சானடோரியம் ஜட்ஜ் காலனியில் ரூ.22 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் 464 படுக்கைகளைக் கொண்ட பணிபுரியும் பெண்களுக்கான தங்கும் விடுதிக்கான கட்டுமானப் பணிகளை தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணியினை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, கிழக்கு தாம்பரம், வார்டு 48க்குட்பட்ட காளிதாசர் தெருவில் தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்ட நிதியின் கீழ், ரூ.1.32 கோடி மதிப்பீட்டில் 1.25 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ள புதிய தார்சாலையின் தரம் மற்றும் அதன் அளவீடுகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

**கிளாம்பாக்கம் பேருந்து நிலையம்**

வண்டலூர் அருகே கிளாம்பாக்கம் புறநகர் பேருந்து நிலையத்தின் அருகில் நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் ரூ.17 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பருவமழைக்கு முன்னதாக முடித்திடவும், மழைநீர் வடிகாலுக்கான இணைப்பினை ஏற்படுத்திடவும், உரிய தொழில் நுட்ப வழிகாட்டுதலின்படி பணிகளை மேற்கொள்ளவும் தலைமைச் செயலாளர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**நீர்வளத்துறை**

நீர்வளத்துறையின் சார்பில் மாதவரம் மண்டலத்திற்குட்பட்ட மாதவரம் ரெட்டேரியில் ரூ.43.19 கோடி மதிப்பீட்டில் ஆழப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தும் பணியினை பார்வையிட்டு, ஏரியின் வடக்கு நீர் வெளியேற்றும் கதவணையினை ஆய்வு செய்து, பருவமழைக்கு முன்னதாக ஏரியில் கழிவுகளை அகற்றி, தூர்வாரும் பணிகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**மீன்வளத்துறை திருவொற்றியூர் துறைமுகம்**

பின்னர், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் சார்பில் திருவொற்றியூர் துறைமுகத்தில் ரூ.200 கோடி மதிப்பீட்டில் செவுள் வலை மற்றும் தூண்டில் மீன்பிடி விசைப்படகுகளுக்கென்று பிரத்யேகமாக கட்டப்பட்டு வரும் சூரை மீன்பிடி துறைமுகத்தின் கட்டுமானப் பணியினை தலைமைச் செயலாளர் பார்வையிட்டு, அங்கு அமைக்கப்படும் கடல் நீர் தடுப்பணைகள் மற்றும் மீன்பிடி படகுகள் கரையில் கட்டுமிடத்தினை ஆய்வு செய்து, கட்டுமானப் பணிகளை உரிய காலத்திற்குள் உரிய தரத்துடன் மேற்கொள்ள வேண்டும் என சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி**

இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட எஸ்பிளனேடு சாலையில் ரூ.2.38 கோடி மதிப்பீட்டில் 463 மீ. நீளத்தில் அமைக்கப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணியினையும், பிரகாசம் சாலையில் ரூ.5.55 கோடி மதிப்பீட்டில் 1.11 கி.மீ. நீளத்தில் அமைக்கப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பருமழைக்கு முன்னதாக பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மழைநீர் வடிகால்களின் வண்டல் வடிகட்டித் தொட்டிகளை உரிய அளவீடுகளுடன் சுத்தம் செய்வதற்கு ஏதுவாக அமைத்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் நகர்ப்புர சாலை மேம்பாட்டுத் திட்டம்2ன் கீழ், சென்னை காவல் ஆணையாளர் அலுவலக பக்கவாட்டில் உள்ள ஜோதி வெங்கடாசலம் சாலையில் ரூ.54.77 இலட்சம் மதிப்பீட்டில் 580 மீ. நீளத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள புதிய சாலையினைப் பார்வையிட்டு, அங்குள்ள மழைநீர் வடிகால் பணிகளை ஆய்வு செய்து, பக்கவாட்டில் நடைபாதையினை அமைத்திடவும் அறிவுறுத்தினார்.

மேலும், வார்டு63க்குட்பட்ட பிளாக்கர்ஸ் சாலையில் ரூ.93 இலட்சம் மதிப்பீட்டில் 212 மீ. நீளத்தில் அமைக்கப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணி பார்வையிட்டு, மின்சார கேபிள்கள் சேதமடையாமலும், பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் எச்சரிக்கையுடன் பணியாற்றிடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மழைநீர் வழிந்தோடும் வகையிலும், உரிய கால்வாய் இணைப்புகளை ஏற்படுத்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**நெடுஞ்சாலைத்துறை மழைநீர் வடிகால்**

நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் ஈ.வெ.ரா. பெரியார் சாலையில் ரூ.3.75 கோடி மதிப்பீட்டில் 650 மீ. நீளத்தில் மேற்கொள்ளப் பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளில் 320 மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் பணிகள் முடிவுற்றுள்ளது. இதனைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட தலைமைச் செயலாளர் மேலும் மேற் கொள்ளப் பட்டு வரும் மீதமுள்ள பணிகளை விரைந்து முடித்திடவும், வண்டல் வடிகட்டித் தொட்டியினை சீராக அமைத்திடவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

உயர்கல்வித்துறை - புதிதாக கட்டப்பட உள்ள முதுநிலை மற்றும் ஆராய்ச்சி படிப்பு பயிலும் மாணவியருக்கான தங்கும் விடுதி

உயர்கல்வித்துறையின் சார்பில் சென்னை பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.53.10 கோடி மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் 6 தளங்களுடன் 1. 34 இலட்சம் ச.அ. பரப்பளவில் புதிதாக கட்டப்பட உள்ள சென்னை பல்கலைக்கழக முதுநிலை மாணவிகள் மற்றும் ஆராய்ச்சி யாளர்களுக்கான தங்கும் விடுதிக்கான இடத்தினையும், கட்டட வரைபடத்தினையும் பார்வையிட்டு, பணியினை விரைவில் தொடங்கிட அறிவுறுத்தினார். இந்த விடுதியில் முதுநிலை மாணவிகளுக்கு 352 படுக்கைகள், ஆராய்ச்சியாளர்களுக்கு 134 படுக்கைகள் என மொத்தம் 486 படுக்கை வசதிகளுடன் அமைக்கப்பட உள்ளது. மேலும், இந்த விடுதிக் கட்டடம் சமையலறை, உணவுக்கூடம், கழிப்பறை, மின்தூக்கி உள்ளிட்ட வசதிகளுடன் அமையப்பெற உள்ளது.

இந்த ஆய்வின்போது, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகே யன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, சென்னை பெருநகர் வளர்ச்சி குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, மீனவளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையாளர் டாக்டர் கே.எஸ்.பழனிசாமி, சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டி.ஜி.வினய், பெருநகர சென்னை மாநகராட்சி இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், வடக்கு வட்டார துணை ஆணையாளர் எம். சிவகுரு பிரபாகரன், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ராகுல்நாத், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஆணையாளர் திருமதி வெ.அமுதவல்லி, தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் திருமதி ஆர்.அழகுமீனா, உதவி ஆட்சியர் (பயிற்சி) ஆனந்தகுமார் சிங், உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

### மூலனூர் ஒன்றியம் - எம்.கருப்பன்வலசில்

# 154 விவசாயிகளுக்கு ரூ.1.97 கோடி மதிப்பில் பல்வேறு கடனுதவிகள்!

## அமைச்சர்கள் மு. பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினர்!

திருப்பூர், அக். 16 -

திருப்பூர் தெற்கு மாவட்டம், மூலனூர் ஒன்றியம் எம்.கருப்பன்வலசில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கிளையை திறந்து வைத்து 154 விவசாயிகளுக்கு ரூ.1.97 கோடி மதிப்பீட்டில் பல்வேறு கடனுதவிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் வழங்கினர்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அ.லட்சுமணன் தலைமையில், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் முன்னிலையில், திருப்பூர் மாவட்டம், மூலனூர் ஊராட்சி ஒன்றியம், எம்.கருப்பன்வலசில் ஊரக வளரச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் கீழ் ரூ.23.65 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட ஊராட்சி மன்ற அலுவலகத்தை திறந்து வைத்தும், எம்.கருப்பன்வலசில் எரிசினம்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கிளை திறந்து வைத்தும், 90 விவசாயிகளுக்கு ரூ.1,09 கோடி மதிப்பீட்டில் பயிர்கடனுதவியும், 10 விவசாயி களுக்கு ரூ. 6.33 இலட்சம் மதிப்பீட்டில் கால்நடை பராமரிப்பு கடனுதவியும், 01 மகளிர் சுயஉதவிக்குழுவிற்கு ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் மகளிர் சுயஉதவிக்குழு கடனுதவியும், 26 விவசாயிகளுக்கு ரூ. 26.00 இலட்சம் மதிப்பீட்டில் மத்தியகாலக் கடனுதவியும், 27 விவசாயிகளுக்கு ரூ. 43.20 இலட்சம் மதிப்பீட்டில் நகை கடனுதவியும் என மொத்தம் 154 விவசாயிகளுக்கு ரூ.1,97,42,000 மதிப்பீட்டில் பல்வேறு கடனுதவிகளை வழங்கினர்.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்ததாவது : இன்றைய தினம் மூலனூர் ஒன்றியம், எம்.கருப்பன்வலசில் ஊரக வளரச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் கீழ் ரூ.23.65 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட எம்.கருப்பன்வலசு ஊராட்சி மன்ற அலுவலகத்தை திறந்து வைக்கப்பட்டுள்ளது, எம்.கருப்பன்வலசில் எரிசினம்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கிளை திறந்து வைக்கப்பட்டுள்ளது. எரசினம்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கமானது 30.08.1957 ல் பதிவு செய்யப்பட்டு, 10.10.1957 முதல் தனது பணியை தொடங்கி செயல்பட்டு வருகிறது. எரசினம்பாளையம், முளையாம்பூண்டி, தட்டாரவலசு என மூன்று வருவாய் கிராமங்களை கொண்டு செயல்பட்டு வருகிறது. இச்சங்கமானது தற்போது 1797 "அ" வகுப்பு உறுப்பினர்களையும், 569 இணை உறுப்பினர்களையும் கொண்டும், பங்கு மூலதனமாக ரூ.109.12 இலட்சத்தை கொண்டும், உறுப்பினர் அளவில் கடன் நிலுவையாக ரூ.923.73 இலட்சத்தை கொண்டும், மேலும் சங்கமானது கடந்த தணிக்கையாண்டில் ரூ.13.92 இலட்சம் நிகர இலாபம் ஈட்டி சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது.

சங்கத்தின் மூலம் உறுப்பினர்களுக்கு பயிர்க்கடன், கால்நடைக் கடன்கள், மத்தியகாலக் கடன்கள், சுய உதவிக்குழு கடன்கள் மற்றும் நகைக்கடன்களை வழங்கி வருகிறது. மேலும், தமிழக அரசின் பயிர்க்கடன் தள்ளுபடி திட்டம் 2021இன் கீழ் 415 நபர்களுக்கு ரூ.476.07 இலட்சம் பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. தமிழக அரசின் நகைக்கடன் தள்ளுபடி திட்டம் 2021 இன் கீழ் 66 நபர்களுக்கு ரூ.28.81 இலட்சம் நகைக்கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் மகளிர் சுய உதவிக்குழு கடன் தள்ளுபடி திட்டம் 2021இன் கீழ் 3 குழுக்களுக்கு 29 நபர்களுக்கு ரூ.7.74 இலட்சம் மகளிர் சுய உதவிக்குழு கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் பொது சேவை மையம் வருவாய் துறை மற்றும் அரசுதுறையின் கீழ் வரும் அனைத்து சான்றிதழ்களும் பதிவு செய்யப்பட்டு பொது மக்களுக்கு சிறந்த முறையில் வழங்கி வருகிறது. எரசினம் பாளையம் தொடக்க வேளாண்மை சங்கத்திற்குட்பட்ட முளையாம்பூண்டி வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட மக்கள் மற்றும் உறுப்பினர்கள் நலனை கருத்தில் கொண்டு எம்.கருப்பன்வலசு கிராமத்தில் சங்கத்தின் புதிய கிளையினைத் தொடங்க வைக்கப்பட்டுள்ளது. இந்த கிளையின் மூலம் பயிர்க்கடன், கால்நடைக் கடன்கள், பொது நகைக்கடன், சுய உதவிக்குழு கடன் உள்ளிட்ட அனைத்து வகை கடன்களும் வழங்கப்பட உள்ளது என அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு சங்கங்களின் இணை பாதிவாளார் சீனிவாசன், மூலனூர் ஒன்றிய கழக செயலாளர்கள் ஊராட்சி ஒன்றியக்குழு துணைத்தலைவர் ப.பழனிசாமி, துரை தமிழரசு, மூலனூர் பேரூர் கழக செயலாளர், பேரூராட்சி தலைவர் க.தெண்டபாணி உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், நீர்வளத்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் சென்னை பெருநகர காவல்துறை உயர் அலுவலர்களுடன் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப்பணிகள் நிலை குறித்தும், சாலை வெட்டுக்களை சீரமைக்கும் பணிகள் குறித்தும், மழைநீர் வடிகால் பணிகள் நிலை குறித்தும் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசுத் துறை செயலாளர்கள், காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வழக்கறிஞர் நா. குப்புசாமி

**அக்டோபர் 16 (1994)**



இளமைக்காலம் முதல் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். கழகத்தில் பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்டப் பொறுப்பாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

1974ல் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் தஞ்சையில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில் முன்னிலை வகித்தார். அதோடு தனது பகுதியில் தீண்டாமை ஒழிப்பு பிரச்சாரத்தை செய்தவர்.

தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்த இவர் சிறந்த வழக்கறிஞராகவும் பணியாற்றியவர்.

கழகத் தோழர்களின்மீது தொடுக்கப்பட்ட பல வழக்குகளில் ஆஜராகி அவர்களுக்காக வாதாடியவர்.

கழகம் அறிவித்த விலைவாசி உயர்வுப் போராட்டம் உள்ளிட்ட அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்றுள்ளார்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பரங்கிமலை எஸ். வேணுகோபால்

**அக்டோபர் 16 (1994)**



இளமைக் காலத்திலேயே தந்தை பெரியாரின் கொள்கைகளிலே நாட்டம் கொண்டு, பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் ஆகியோர் தலைமையில், தொடர்ந்து கழகப் பணியாற்றி வந்தவர் இவர். 25 ஆண்டுகளுக்கும் மேலாக பரங்கிமலை கிளைக் கழகச் செயலாளராகவும் – பரங்கிமலை நகரியக் கழகத்தின் முதல் செயலாளராகவும் பணியாற்றியவர்.

தொடர்ந்து முப்பதாண்டு காலம் பரங்கிமலை கண்டோண்மென்ட் உறுப்பினராகவும் – இருமுறை கண்டோண்மென்ட் துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

"பரங்கிமலைப் பகுதியிலே கழகத்தை வளர்த்த தொண்டர்களில் மறைந்த வேணுகோபால் அவர்களும் ஒருவர். கட்சியிலே உள்ள தனிப்பட்டவர்களைவிட – கழகத்தின் ஒட்டுமொத்த நலன்தான் முக்கியம் எனக் கருதி, கழகத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர். எனது அன்பைப் பெற்றவர்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

## அனைத்துத் துறைகளிலும் இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற

# இளம் தலைமுறைக்காகக் கொண்டுவரப்பட்ட 'நான் முதல்வன்' திட்டம்!

### மாணவர்களுக்கு மாதம் ரூ.7,500 ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்து - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை, அக்.16-**

**'நான் முதல்வன் போட்டித் தேர்வு பிரிவு'ன் மூலம் குடிமைப் பணி தேர்வுக்கு தயாராகும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ. 7,500 ஊக்கத் தொகையாக வழங்கும் அரசின் முற்போக்குத் திட்டத்தை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தொடங்கி வைத்து உரையாற்றினார்.**

அப்போது அவர் பேசியதாவது:

"ஒன்றிய அரசின் தேர்வுகளுக்குத் தயாராகி வரும் உங்களை ஊக்கப்படுத்துவதற்கான தமிழ்நாடு அரசின் சார்பாக மாதம் 7,500 ரூபாய் வழங்குகின்ற இந்தச் சிறப்புக்குரிய நிகழ்ச்சியில் பங்கேற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் (யு.பி.எஸ்.சி ), ஸ்டாப் செலக்சன் கமிஷன், ரெயில்வே ரெக்ரூட்மெண்ட் போர்டு, இந்தியன் பேங்கிங் பர்சனல் செலக்சன் ஆகிய தேர்வுகளில் நம்முடைய தமிழ்நாட்டு இளைஞர்கள், இளம்பெண்கள் அதிக அளவில் வெற்றி பெற வேண்டும் என்பதுதான் நம்முடைய திராவிட மாடல் அரசின் எண்ணம்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பல குடும்பங்களில் முதல் தலைமுறை பட்டதாரிகளை உருவாக்கினார்கள். அதோடு அவர் நிற்கவில்லை. அந்தப் பட்டதாரிகளுக்கு அரசுத் துறையிலோ அல்லது தனியார் துறையிலோ வேலைவாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.

**திராவிட இயக்க அரசின் இலட்சியம்!**

கல்வியாக இருந்தாலும், வேலையாக இருந்தாலும் எல்லோருக்கும் சென்றடைய வேண்டும் என்பது தான் நம்முடைய திராவிட இயக்க அரசினுடைய இலட்சியம்.

அதற்காகத்தான் தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும், முத்தமிழறி ஞர் டாக்டர் கலைஞர் அவர்களும் பாடுபட்டார்கள், உழைத்தார்கள். அவர்களுடைய பாதையில்தான் இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களும் செயல்பட்டு வருகின்றார்கள்.

இளைஞர்களுக்கு, மாணவர்களுக்கு வேலைவாய்ப்புக்கான திறனை வளர்க்கவும் அதன் மூலம் அவர்கள் வேலைவாய்ப்புப் பெறுவதற்கும் வழிகாட்டுதல் வழங்குவதற்கும் தொடங்கப்பட்ட மிக முக்கியமான திட்டம்தான் இந்த நான் முதல்வன் திட்டம்.



நமது தமிழ்நாட்டைச் சேர்ந்த இளைஞர்களும், இளம்பெண்களும் அவர் அவருக்குப் பிடித்த துறையில் முதலிடத்தைப் பிடிக்க வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்டிருப்பதுதான் இந்த நான் முதல்வன் திட்டம்.

**13 இலட்சம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர்**

இந்தியாவில் எந்த மாநிலமும் செய்யாத இந்தத் திட்டம் இளைஞர்கள் இளம் பெண்களின் வாழ்வில் ஒளியேற்றி வைக்கின்ற ஒரு மகத்தான திட்டமாகத் திகழ்கின்றது. இந்தத் திட்டம் தொடங்கி, ஒரே ஆண்டில் 13 இலட்சம் மாணவர்கள் பயன் பெற்று இருக்கிறார்கள்.

ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மாணவர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கின்றது. 'நான் முதல்வன் திட்டம்' தனியார் துறை வேலைவாய்ப்புகளுக்கு மட்டும் உருவாக்கப்பட்ட திட்டமல்ல. அரசுத் துறை உட்பட அனைத்துத் துறைகளிலும் நமது இளம் தலைமுறையினர் வேலைவாய்ப்பு பெற வேண்டும் என்ற நோக்கத்தில் கொண்டுவரப்பட்ட திட்டம் இந்த நான் முதல்வன் திட்டம்.

அதிலும், குறிப்பாக ஒன்றிய அரசுப் பணிகளில் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த இளைஞர்கள் அதிக அளவில் வரவேண்டும் என்பதற்காக நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகளை நம்முடைய திராவிட மாடல் அரசு மேற்கொண்டு வருகின்றது.

ஒன்றிய அரசு நடத்துகின்ற யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன், ஸ்டாப் செலக்சன் கமிஷன், ரயில்வே ரெக்ரூட்மென்ட் போர்டு, இந்தியன் பேங்கிங் பர்சனல் செலெக்ஷன் போன்ற அரசுப் பணிக்கான போட்டித் தேர்வுகளுக்குச் சிறப்பான பயிற்சி அளிக்க `நான் முதல்வன் திட்டம்' சார்பில் போட்டித் தேர்வுகள் எனும் தனிப்பிரிவு ஒன்றை இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் நாம் தொடங்கினோம்.

அரசுப் பணிகளுக்குச் செல்ல வேண்டும் என்ற கனவில் இருக்கும் இலட்சக்கணக்கான இளைஞர்களுடைய கனவை நிஜமாக்குவதுதான் இந்தத் திட்டத்தினுடைய நோக்கம்.

**தமிழ்நாட்டில் மிகச்சிறந்த ஆசிரியர்கள்**

தமிழ்நாட்டில் பள்ளிக்கல்வியாக இருந்தாலும் சரி, உயர் கல்வியாக இருந்தாலும் சரி, மிகச்சிறந்த ஆசிரியர்கள் இருக்கிறார்கள். சிறந்த பாடத் திட்டமும் இருக்கின்றது. மிகச்சிறந்த உட்கட்ட அமைப்பும் வசதிகளும் இருக்கின்றன.

தேசியக் கல்வி நிறுவனத்தின் தர நிர்ணயப் பட்டியலில் முதலில் உள்ள 100 கல்வி நிறுவனங்களில் 18 நிறுவனங்கள் தமிழ்நாட்டில்தான் இருக்கின்றன. ஆனால், இத்தனை வசதிகள் இருந்தும் கடந்த சில ஆண்டு களாக யு.பி.எஸ்.சி போன்ற ஒன்றிய அரசு நடத்தும் தேர்வுகளில், தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் தேர்ச்சி பெற்று செல்வது மிகவும் குறைவாக இருக்கின்றது. இது நமக்கு மிகுந்த வருத்தத்தையும் அளிக்கின்றது.

இதற்கு முன்பெல்லாம் ஒன்றிய அரசினுடைய குடிமைப் பணித் தேர்வில் வெற்றி பெற்று யு.பி.எஸ்.சி காலி பணியிடங்களில் சேர்ந்தவர்களில் பத்து சதவிகிதத்திற்கும் மேல் தமிழ்நாட்டு இளைஞர்கள் இருந்தார்கள்.

ஆனால், 2016 ஆம் ஆண்டுக்குப் பிறகு அது குறைய ஆரம்பித்து விட்டது. 10 சதவிகிதம் இருந்தது, இப்பொழுது 5 சதவிகிதத்திற்கும் கீழே அதாவது பாதியாகக் குறைந்து இருக்கின்றது. இந்த நிலை தொடர்ந்தால், இன்னும் சில ஆண்டுகளுக்குப் பிறகு ஒன்றியத்திலும் மாநிலத்திலும் அரசு உயர் பதவியில் தமிழர்களே இல்லாத நிலை ஏற்பட்டு விடும்.

அப்படி ஒரு நிலை வந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் நான் முதல் திட்டத்தில் போட்டித் தேர்வுகளுக்கென ஒரு பிரிவு உருவாக்கப்பட்டது.

அப்படி ஒரு பிரிவைத் தொடங்கினால் மட்டும் போதாது. அதைச் சிறப்பாகச் செயல்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் கடந்த நிதிநிலை அறிக்கையில் ஒரு கோடி ரூபாய் நிதியும் நம்முடைய முதலமைச்சர் ஒதுக்கித் தந்தார்கள்.

**மாணவர்களுக்கு ரூ.25 ஆயிரம் ஊக்கத்தொகை**

தமிழ்நாட்டைச் சேர்ந்த யு.பி.எஸ்.சி முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று, யு.பி.எஸ்.சி முதன்மைத் தேர்வுக்கும் தயாராகும் மாணவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்க, 'நான் முதல்வன் போட்டித் தேர்வின் பிரிவு' மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன் மூலம் இந்த ஆண்டு 435 மாணவர்கள் பயனடைந்திருக்கிறார்கள். அதுமட்டுமில்லாமல் இத்திட்டத்தின் மூலம் தகுதிவாய்ந்த ஆயிரம் மாணவர்கள் மதிப்பீட்டு தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் ஒவ்வொருவருக்கும் யு.பி.எஸ்.சி முதல்நிலை தேர்வுக்குத் தயாராகுவதற்காக மாதம், மாதம் ரூ.7,500 உதவித்தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த உதவித் தொகை 10 மாதங்களுக்கு வழங்கப்படும். இந்தத் தேர்வில் ஐம்பதாயிரம் மாணவர்கள் பங்கேற்றனர். அதில் சிறந்த முறையில் தேர்வு எழுதி வெற்றி பெற்றவருடைய வரிசையில் முதல் ஆயிரம் நபர்களுக்கு இடம்பெற்ற உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக் களையும், பாராட்டுகளையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த ஊக்கத்தொகையானது குடிமைப்பணித் தேர்வுக்குத் தயாராகி வரும் மாணவர்கள் உங்களுடைய பொருளாதாரச் சுமையை நீக்கும். உங்களுடைய வேறு எந்தக் கவலையும் இல்லாமல் படிப்பில் மட்டும் கவனம் செலுத்த வேண்டும் என்ற சிந்தனையோடு இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

நீங்கள் ஒவ்வொருவரும் தேர்வில் வெற்றிபெற வேண்டும். இந்தியாவின் வளர்ச்சி என்பது மாநிலங்களுடைய வளர்ச்சியில்தான் இருக்கின்றது. அப்படி மாநிலங்கள் வளர வேண்டுமென்றால் அதற்கு அரசியல்வாதிகள் எங்களை மட்டுமல்ல, எதிர்கால அதிகாரிகள் உங்களுடைய பங்களிப்பும் மிக மிக முக்கியம்.

செலவுகளுக்குப் பயந்தோ, ஏழ்மை நிலைமை காரணமாகவோ தமிழ்நாட்டு இளைஞர்கள் தங்களது ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் கனவுகளைத் தியாகம் செய்து விடக்கூடாது.

**மாணவர்கள் வெற்றியடைய வாழ்த்துகள்!**

அதைக் கருத்தில் கொண்டுதான் இந்தத் திட்டத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடங்கி இருக்கிறார்கள்.

இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தி, நீங்கள் ஒவ்வொருவரும் வெற்றியடைய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன். உங்களை இந்த அரசு வெறும் போட்டித் தேர்வாளராக மட்டும் பார்க்கவில்லை. நாளைய ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், வங்கிப் பணி அதிகாரிகளாக உங்களையெல்லாம் இந்த அரசு பார்க்கின்றது.

நீங்கள் ஒவ்வொருவரும் நாளை ஒரு நல்ல நிலைக்கு வர வேண்டும். அரசுப் பணிக்குச் செல்ல வேண்டும். இதனால், உங்கள் குடும்பமும் மகிழ்ச்சி அடையும். உங்களுடைய குடும்பங்கள் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் உள்ள அத்தனை குடும்பங்களையும் தன் குடும்பமாக நினைக்கின்ற நம்முடைய முதலமைச்சர் அவர்களும் மகிழ்ச்சி அடைவார் என்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

இத்துறையின் அமைச்சராக மட்டுமின்றி, ஒரு சகோதரனாக நான் என்றும் உங்களுக்குத் துணை நிற்பேன். இந்த அரசும் உங்களுக்குத் துணை நிற்கும். உதவித்தொகை பெற்றுள்ள உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், மேயர் பிரியா, அண்ணா மேலாண்மைப் பணியாளர் கல்லூரியின் இயக்குநர் கூடுதல் தலைமைச் செயலாளர் விக்ரம் கபூர் ஐ.ஏ.எஸ், சிறப்புத்திட்ட செயலாக்கத் துறையினுடைய செயலாளர் மருத்துவர் தாரேஷ் அகமத் ஐ.ஏ.எஸ், திறன் மேம்பாட்டுக் கழகத்தினுடைய நிர்வாக இயக்குநர் இன்னசன்ட் திவ்யா ஐ.ஏ.எஸ். உட்பட பலர் கலந்து கொண்டனர்.




சென்னை, கலைவாணர் அரங்கில் நேற்று முன்தினம் (14.10.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் "நான் முதல்வன்" போட்டித் தேர்வுப் பிரிவின் கீழ் முதல் நிலை குடிமை பணிகளுக்கான தேர்வில் (UPSC) கலந்து கொள்ளும் 1.000 மாணவ, மாணவியர்களுக்கு ஊக்கத்தொகைக்கான காசோலைகளை வழங்கினார். இதில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கூடுதல் தலைமைச் செயலாளர் /அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரி இயக்குநர் விக்ரம் கபூர், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை செயலாளர் தரேஷ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி இன்னசென்ட் திவ்யா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சென்னை, கலைவாணர் அரங்கில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் "நான் முதல்வன் போட்டித் தேர்வுப் பிரிவின் கீழ் முதல் நிலை குடிமை பணிகளுக்கான தேர்வில் (UPSC) கலந்து கொள்ளும் 1.000 மாணவ, மாணவியர்களுக்கு ஊக்கத்தொகைக்கான காசோலைகளை வழங்கினார். இதில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திரு தயாநிதி மாறன், கூடுதல் தலைமைச் செயலாளர் /அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரி இயக்குநர் விக்ரம் கபூர், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை செயலாளர் தரேஷ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி இன்னசென்ட் திவ்யா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு விக்கிரவாண்டி சூர்யா பொறியியல் கல்லூரியில் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறியாளர் அணி சார்பில் மாபெரும் பேச்சுப்போட்டி மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி வாழ்த்துரை வழங்கி துவக்கி வைத்தார். மேலும் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத்தொகை, கேடயம் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர் புகழ். செல்வகுமார் புகழேந்தி வரவேற்புரையாற்றினார். இதில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் கிருஷ்ணமூர்த்தி, ஸ்டாலின், செந்தில்குமார், ஆனந்தகுமார், பிரசாத், ரீகன் ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அம்மா திருமதி.விசாலாட்சி பொன்முடி, சட்டமன்ற உறுப்பினர் இரா.இலட்சுமணன், மாநில பொறியாளர் அணி தலைவர் துரை.கி.சரவணன், நடுவர்கள் கயத்தூர் ஆசிரியர் குமார கிருஷ்ணன், ஆசிரியர் சஞ்சீவிராயன், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு. தங்கம், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி. என். முருகன், தயா இளந்திரையன் உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர். பொறியாளர் அணி தலைவர் சுரேஷ் நன்றியுரையாற்றினார்.



நாகை மாவட்டம் நாகை துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன்துறைக்கு 40 ஆண்டுகளுக்கு பின் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முயற்சியால் கப்பல் (படகு) போக்குவரத்து தொடங்கியது. விழாவில் நெடுஞ்சாலை, கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் எ.வ.வேலு பேசினார். உடன் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, ஒன்றிய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துணை அமைச்சர் சர்பானந்தாசோனாவால், நாகை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ் மற்றும் அரசு துறை அதிகாரிகள் உள்ளனர்.

# திராவிட மாடல் அரசு 39

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**







## உலக அரங்கில் ‘தமிழ்’ சாம்பியன்ஸ்!

சமீபத்தில் நடந்து முடிந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 20 வீரர்கள் 9 தங்கம், 11 வெள்ளி மற்றும் 8 வெண் கலம் என மொத்தம் 28 பதக்கங்களை வென்று பெருமை சேர்த்தனர். தமிழ்நாட்டு வரலாற்றில், ஆசிய அளவிலான இந்த விளையாட்டுப் போட்டி களில் இதற்கு முன்பு இவ்வளவு வீரர்கள் இத்தனை பதக்கங்களை வென்றிருப்பார்களா என்பது சந்தேகமே.

2022-இல் நம் கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, முன் எப்போதும் இல்லாத அளவுக்கு விளையாட்டுத் துறைக்கும், விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள், போட்டிகள் என அனைத்துக்கும் அதிக அளவில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

கவனம் செலுத்துவது என்பது வெளிப்படையான நிர்வாகம் மட்டுமல்ல. துறைக்குப் போதுமான அளவு நிதி ஆதாரத்தைப் பெருக்குவதும்தான். அதை நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ‘திராவிட மாடல்’ அரசின் கீழ், மாண்புமிகு விளையாட்டுத்துறை அமைச்சர் திறம்பட மேற்கொண்டு வருவதன் விளைவுதான், தமிழ்நாட்டு வீரர்கள் பதிவு செய்திருக்கும் இந்த வெற்றி என்றால் மிகையில்லை.

இவர்களைப் போன்ற திறமை இருந்தும், போதுமான பயிற்சிகளோ, உபகரணங்களோ, ஊட்டச்சத்து உணவோ, தேசிய சர்வதேசிய போட்டிகளில் கலந்துகொள்வதற்கான பயணங் களுக்குப் போதிய அளவில் நிதி வசதி இல்லாமலோ தவிக்கும் விளையாட்டு வீரர்களுக்குக் கைகொடுக்க நம் ‘திராவிட மாடல் அரசு’ உருவாக்கியிருக்கிறது **‘தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை’**.

### விளையாட்டுத் தலைநகர் இலக்கு

தமிழ்நாட்டை விளையாட்டின் தலைநகராக மாற்ற வேண்டும் என்ற இலக்கை அடைய, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் பல்வேறு முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக, மாநிலத்தில் அதி நவீன விளையாட்டு உள் கட்டமைப்பு மற்றும் விளையாட்டு வசதிகளை ஏற்படுத்தவும், விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில், விளையாட்டுச் சூழலை உருவாக்கிடவும், அரசுக்கும் பங்குதாரர்களுக்கும் இடையில் தடையற்ற ஒருங்கிணைப்பை அடைவதற்கும், பெருநிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நன்கொடையாளர்களிடமிருந்து பெறக்கூடிய பலன்களைப் பயன்படுத்துவதற்கும், **‘தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை’** என்ற ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுத்துறை சிறப்பாக இயங்க நிதி ஆதாரம் என்பது மிக அவசியமான ஒன்றாகும். எனவே, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலம் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்குத் தேவையான உதவிகளை வழங்கிடும் வகையில் இந்த அறக்கட்டளை தொடங்கப்பட்டுள்ளது.

இந்த அறக்கட்டளையை 2023, மே 8 -ஆம் தேதி, சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். அப்போது இந்த அறக்கட்டளைக்கான இலச்சினை மற்றும் வலைதளத்தை இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் மகேந்திர சிங் தோனி தொடங்கி வைத்தார்.

### வரி விலக்கு பெற்ற அமைப்பு

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் உருவாக்கம், உறுப்பினர்கள் மற்றும் இயக்குநர் குழுவின் செயல்பாடுகள் ஆகியவை தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த அறக்கட்டளைக்கு, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களைத் துணைத் தலைவராகவும் கொண்ட 7 பேர் அடங்கிய நிர்வாகக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

> ➤ தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை தொடங்கப்பட்ட நாளில் இருந்து இப்போது வரை பெறப்பட்ட நிதி நன்கொடை - **18** கோடியே **89** இலட்சத்து **97** ஆயிரத்து **500** ரூபாய்.
>
> ➤ அறக்கட்டளை மூலம் இதுவரை விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்ட நிதி உதவி - **3** கோடியே **96** இலட்சத்து **48** ஆயிரத்து **649** ரூபாய்.
>
> ➤ அறக்கட்டளை மூலம் இதுவரை பயனடைந்த விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை **92**.
>
> ➤ அறக்கட்டளைக்கு இதுவரை பங்களிப்புச் செய்த நிறுவனங்களின் எண்ணிக்கை **60**.

மேலும், இந்த அறக்கட்டளையானது வருமான வரிச் சட்டம்-1961 இன் கீழ், பிரிவு 12-AA மற்றும் 80-G இன் கீழ் வரி விலக்குச் சான்று பெற்றுள்ளது. எனவே இந்த அறக்கட்டளைக்கு நிதி உதவி அளிக்கும் நிறுவனங்கள், தனிநபர்கள் ஆகியோர் வருமான வரி தாக்கல் செய்யும்போது தாங்கள் அளித்த நன்கொடைகளுக்கு விலக்கு பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த அறக்கட்டளையின் நிர்வாக நடைமுறை களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு, தமிழ்நாடு அரசு முதற்கட்டமாக 3 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தது. தவிர, இந்த அறக்கட்டளையின் நிர்வாக நடைமுறைகளைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது சொந்த நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாயை வழங்கி வாழ்த்தினார்.

### உள்ளடக்கிய ஆதரவும் வெற்றிகளும்

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற தமிழ்நாட்டு வீரர்களைச் சிறப்பிக்கும் நிகழ்ச்சியில் பேசிய விளையாட்டுத்துறை அமைச்சர், “இந்த அறக்கட்டளையின் மூலம் பன்னாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் வீரர், வீராங்கனைகளுக்குப் பயணம், விசா செலவு, தங்குமிடம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களுக்காக நிதி அளித்தும் வருகின்றோம். இதுவரை அந்த அறக்கட்டளை தொடங்கப்பட்டு ஐந்து மாதங்களில் 90 வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.3 கோடியே 80 இலட்சம் அளவில் நிதி உதவி அளித்துள்ளோம்” என்றார். அதற்குப் பிறகு அவர் குறிப்பிட்டதுதான் மிக முக்கியமானது.

நாம் நிதி உதவி அளிக்கின்றோம். நிதி உதவி பெற்றுச் செல்லும் வீரர், வீராங்கனைகள் பதக்கங் களைப் பெற்று வந்து நம்முடைய தமிழ்நாட்டுக்கும், நம்முடைய இந்தியாவுக்கும் பெருமை சேர்க்கின் றார்கள். குறிப்பாக, மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகளின் திறமையை நாம் பாராட்டியே ஆக வேண்டும்.

சமீபத்தில், ஜெர்மனியில் நடைபெற்ற ‘வேர்ல்டு டுவார்ஃப் கேம்’மில் பங்கேற்கச் சென்ற நம்முடைய வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் 8 பேருக்கு சாம்பியன்ஸ் அறக்கட்டளையில் இருந்து தலா ரூ.2 லட்சம் வீதம் எட்டு பேருக்கு வழங்கினோம். இதில் மகிழ்ச்சிக்குரிய செய்தி என்னவென்றால், அந்த வீரர்கள் அத்தனை பேரும் பதக்கத்துடன் திரும்பி வந்து நம்மைச் சந்தித்தார்கள்” என்று கூறினார்.

இவ்வாறு, மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து அனைவரையும் உள்ளடக்கிச் செல்கிறது நம் **‘திராவிட மாடல் அரசு’** விளையாட்டுத் துறை. சமூக நீதி, இந்தித் திணிப்பு எதிர்ப்பு, கல்வி, சுகாதாரம், தொழில் வளர்ச்சி என தமிழ்நாடு முன்னேறிய மாநிலம் என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகள் இருக்கின்றன. அந்த வரிசையில், இனி தமிழ்நாடு என்றால் **‘அது சாம்பியன்களின் பூமி’** என்று சொல்லப்படும் நாள் வெகுதொலைவில் இல்லை..!

**...சாதனை தொடரும்**

## கிரிக்கெட்டில் அரசியல் - வடக்கும் தெற்கும்!

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் இந்தியாவில் நடைபெற்று வரும் நிலையில், அகமதாபாத்தில் நடந்த இந்தியா-பாகிஸ்தான் போட்டியின்போது ரசிகர்கள் செய்த செயல் அரசியல் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் செயல் சமூக வலைதளங்களில் விமர்சிக்கப்பட்டு வரும் நிலையில், உமா பா. செ. என்பவரின் முகநூல் பதிவு கவனிக்க வைக்கிறது.

"இந்திய அணியின் கேப்டனாக முகமது அசாருதீன் இருந்தார். அப்போது பலமுறை பாகிஸ்தானுடன் தோற்றிருக்கிறது இந்திய அணி. ஆனால் ஒருபோதும் அதை வைத்து சச்சரவுகள் வந்தது இல்லை. ஏன் தோற்றோம் என்ற ஆற்றாமை அல்லது வியூகத்தில் எங்கே தோற்றோம், ஏன் சரியாக அடிக்கவில்லை, இப்படியான விவாதங்கள்தான் நடக்கும்.

ஒருபோதும், அசாருதீன் ஒரு முஸ்லிம் அதனால் விட்டுக்கொடுத்தார் என்ற பேச்சுகளை நாம் கேட்டதில்லை. போலவே உலகின் தலைசிறந்த பவுலர் வாசிம் அக்ரம் என்று சொல்லும் சுதந்திரம் இருந்தது. இனிமேல் அப்படியொரு சூழல் வருவதற்கு வாய்ப்பில்லை, அந்த நம்பிக்கை உடைந்து விட்டது.

1999 ஆம் ஆண்டு ஜனவரி 31, இந்தியா தோற்றுப்போன ஒரு மேட்ச்சில், சச்சின் சதமடித்தும் தோற்ற அந்த மேட்ச்சில், பாகிஸ்தான் வீரர்களுக்காக எழுந்து நின்று கைதட்டி ஆரவாரம் செய்தது "சென்னை".

பாகிஸ்தான் வீரர்கள் மைதானம் முழுவதும் சுத்தி ஓடிவந்து அந்த மகிழ்ச்சியை மரியாதையை ஆரவாரமாகப் பெற்றார்கள். அப்பொழுதும் கை தட்டி அவர்களை திக்குமுக்காட வைத்தது தமிழ்நாடு.

ஆயிரம் வான்கடே வரலாம். ஆயிரம் ஈடன் கார்டன் வரலாம். ஆனால் ஒரே ஒரு சென்னைக்கு அது ஈடாகாது. தமிழ்நாட்டின் தன்மை அத்தகையது. வடக்குக்கும், தெற்குக்கு மான அந்த வித்தியாசம் இதுதான். தமிழ்நாடு எவரையும் தாங்கிப் பிடிக்கும். தாழக் கிடப்பாரை தற்காப்பதே தர்மம். அது தமிழர்களுக்கும் தமிழ்நாட்டுக்கும் தெரியும்" எனக் குறிப்பிட்டுள்ளார். விளையாட்டை விளையாட்டாக மட்டும் பார்த்தால் இந்த சர்ச்சை இருந்திருக்காது.

## ஃப்ளாஷ்பேக்




செல்வகுமார்

### கோபியில் பெரியார்!

1970-ஆம் ஆண்டு கோபிச்செட்டிபாளையத்துக்குப் பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக தந்தை பெரியாரும், இலங்கையில் கழகம் வளர்க்கப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருந்த வி.என்.ராஜூ ஆகியோரும் வருகை தந்தார்கள். அப்படியான சூழலில் தி.மு. கழகத்தில் தீவிரமாக இயங்கிய என் தாத்தா என்.எஸ். சுபண்ணன், அவர்கள் இருவரையும் கட்சி அலுவலகத்துக்கு அழைத்து உபசரித்தபோது, இந்தப் படம் எடுக்கப்பட்டுள்ளது.

**-செ.செல்வகுமார், கோபிச்செட்டிப்பாளையம், ஈரோடு.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### சுயமரியாதைத் திருமணச் சட்டம்!

**சுயமரியாதைத் திருமணங்களை சட்டப்பூர்வமாக்கிய இந்துத் திருமண சட்டம் பிரிவு- 7-A திருத்தச் சட்டம், அண்ணாவின் புரட்சியாகப் பார்க்கப்பட்டது. அது வரை நடைபெற்ற சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்பூர்வத் தகுதி பெற்றதோடு மட்டுமல்லாமல், பார்ப்பன புரோகிதர்கள் மற்றும் சடங்குகள் எதுவும் இல்லாமல் சுயமரியாதைத் திருமணங்கள் பெருமளவில் நடைபெறவும் இச்சட்டம் வழிவகுத்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 271




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131